www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 14 | மே 2007 | பக்கம் 16 | விலை 20/- | சுழற்சி 102

## சுதந்திர கட்சியின் தீர்வுத்திட்டம் பேரினவாதத்தின் வெளிப்பாடு!

சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன் வைத்திருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நாட்டை பிரிப்பதற்கு வழிவகுக்கும் அகங்காரம், மமதை கொண்ட பேரினவாதத்தின் வெளிப்பாடாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையிலான சுத ந்திரக்கட்சி தேசிய இனப்பிரச்சினையை எவ்வளவு தூரத்திற்கு இலகுவானதாகவும் விளையாட்டாகவும் எடுத்துள்ளது என்பதை அது சமர்ப்பித்துள்ள யோசனைகள் எடுத்துக் கூறுகின்றன. இதனை பேரினவாதம் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்காக செய்துள்ள விடயமாகவே கொள்ளல் வேண்டும். இது போன்று அர்த்தமற்ற யோசனைகள் இனமோதலை மேலும் தீவிரமடையவே உதவும் என்பதில் ஐயமில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தை நடத்துவதாகவும் அனைத்து தேசிய இனங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கௌரவமான தீர்வை பெற்றுக் கொடுக்க உழைப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறிவந்தார். அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா த.வி.கூ. தலைவர் ஆணந்தசங்கரி ஆகியோரை திருப்திப்படுத்தக் கூடிய அளவிற்காவது தீர்வுத்திட்டதை முன்வைப்பதில் தான் நேர்மையாக இருப்பதாக கூறியிருந்தார்.

மே தினத்தன்று ஜனாதிபதி ராஜபக்சவின் அரசாங்கத்தின் தலைமைக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு

தொடர்ச்சி 2ம் →




## புரட்சிகர மே தினம் – 2007



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அடிப்படைச் சம்பளம் 5 ஆயிரம் எந்த மூலைக்குப் போதும்

**மண்ணின் மைந்தன்** எனப்படும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தனியார்த்துறை ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் அடிப்ப டைச் சம்பளம் ரூபா ஐயாயிரம் மட்டு மேயாகும். அரசாங்க ஊழியர்கள் கடுமையான நெருக்குதல்கள் கொடுத்ததன் காரணமாக அவர் களுக்கு அடிப்படைச் சம்பளமாக பதினோராயிரத்து அறுநூறு ரூபா வரையறுக்கப்பட்டது. அவ் அடிப் படைச் சம்பளம் கூட அவர்களுக்குப் போதுமானதல்ல. அரசாங்க உயர் அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் ஜனா திபதி என்போருக்கு அதி உயர் சம்ப ளம் வரையறுக்கப்பட்டது. அதன் காரணமாகவே சாதாரண அர சாங்க ஊழியர்களுக்கும் மேற்படி அடிப்படைச் சம்ளத்தை வரையறை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அரசு க்கு ஏற்பட்டது. ஆனால் தனியார் துறையினருக்கு அடிப்படைச் சம்பளத்தை ஐயாயித்தி ற்கு மேல் வரையறுக்க இந்த அரசா ங்கத்தால் முடியவில்லை. இவ்வாறு வரையறுத்ததைச் சாட்டாக வைத் து அதனையே முழுச் சம்பளமாக வழங்கி வரும் முதலாளிகளும் நிறு வனங்களுமே அதிகமாகக் காணப படுகின்றன. ஒரு காலத்தில் தனியார் துறைக்கென சக்தி மிக்க தொழிற் சங்க இயக்கம் இருந்து வந்தது. அதனால் அடிப்படைச் சம்பளத்தை யும் வாழ்க்கைச் செலவுக் குரிய சம்பள உயர்வையும் ஏனைய கொடுப்பனவுகள் சலுகைகள் போன்றவற்றை முன்வைத்து ஊழியர்கள் போராடித் தமது கோரிக்கைகளை வென்றெடு த்து வந்தனர்.

ஆனால் இன்று நிலைமைகள் அவ்வாறில்லை. உலகமயமா தலின் தா ராள தனியார்மயத்தினால் தனியார் துறை என் பது தனித் தனித் தீவுகளாக்கப்பட்டு முதலாளிகளும் பல்தேசிய நிறுவனங்களும் மற்றும் உள்ளூர் நிறுவனங்களும் தாம் நினை த்தவாறு சம்பளங்களைத் தீர்மானித்து குறைந்தளவில் வழங்கி வருகின்றனர். இன்று மிகப் பெரிய தனியார் துறை பெருந் தோட்ட தேயிலை ரப்பர் உற்பத்தி துறையாக விளங்கு கிறது. ஆனால் அங்கு ஒரு தொழிலாளிக்கு ஆகக் கூடுதலாக வேலை செய்தால் 260 ரூபா மட்டு மே நாட் சம்பளமாக வழ ங்கப்படுகி ன்றது. 22 தனியார் கம்பனிகளே அத்தொழிலில் கோடிக்கணக்கில் லாபம் சம்பாதிக்கின்றன. அடுத்து சுதந்திர வர்த்தக வலயம் எனப்படும் பல்தேசியக் கம்பனிகளில் பெண்கள் ஆண்கள் பண்ணை அடிமைகள் போன்று வேலை வாங்கப்ப டுகின்றனர். அங்கு மலசலகூடத்திற்குச் செல்வதானால் நேரப் பதிவு அட்டையில் பதிந்தே செல்ல வேண்டும். குறிப்பிட்ட நேரம் பிந்தினால் ஏன் என்ற விளக்கமும் சம்பளத்திலிருந்து பணமும் கழிக்கப்படும் அவலம் அங் கு காணப்படுகிறது. அவ் வாறு ஓய்வு ஒழிச்சல் இன்றி வேலை வாங்கப்படும் தொழிலா ளர்கள் ஊழியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்ப டுகிறது. இதேபோன்று வர்த்தக வியாபார நிறுவனங்களில் மற்றும் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகின்றது.

அதேவேளை இந்த அரசாங்கத்தி ன் தொழிலமைச்சர் அதாவுட செனி வரத்தினா ஐயாயிரம் ரூபா அடிப்ப டைச் சம்பளத்தை வரையறுத்து ஏதோ இமாலயச் சாதனை படைத் தது போல் பெருமையடித்து நிற்கின்றார். இது பற்றி அதிருப்தியும் கண்டனங்களும் முன்வைக்கப்பட்ட போது அவரது நியாயங்கள் முதலாளிகள் நிறுவனங்கள் சார்பாகவே முன் வைக்கப்படு கின்றன. வேலை வழங்குவோரை சங்கடப்படுத்தக் கூடாதாம். அப்படியாயின் அவரது கருத்து ஊழியர்கள் தொழிலாளர் களை எவ்வாறும் வாட்டி வதைக் கலாம் என்பதேயாகும்.

இன்றைய வாழ்க்கைச் செலவின் மோசமான அதிகரிப்பின் கீழ் தனி யார்துறை ஊழியர்கள் ரூபா ஐயா யிரத்தை அடிப் படைச் சம்பளமாகப் பெற்று எவ்வாறு வாழ்க்கையை நடாத்த முடியும். தொழிலாளர்கள் ஊழியல்களுடன் இணைந்த அரசி யலை முன்னெடுத்து வந்தாகப் பெருமைபேசிக்கொள்ளும் ஜனாதிபதிக்கு இன்றைய அல்லது 5 ஆயிரம் ரூபா அடிப்ப டைச் சம்பளமாக வரையறுக்கப்பட்ட விட யம் அவரை எட்டவில் லையா? மேட்டுக்குடி வாழ்வும் அதிகாரக்கதிரையும் அந்நிய ஏகாதிபத்திய அரவணைப்பும் தொழிலாளர்கள் விவசாயிகள் பற்றி அக்கறைப்பட வைக்க மாட்டாதல்லவா?

## பு.ஜ. கட்சி தோழர்கள் சிறையில் 3 மாதங்கள்

புதிய- ஜனநாயக கட்சியின் முக்கிய தோழர்க ளாகிய வீ. மகேந்திரன், ஆர். ஜெய சீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், எஸ். கிருஸ்ணபிரியன் ஆகியோர் கைது செய்ய ப்பட்டு மே 14ம் 15ம் திகதி களுடன் மூன்று மாதங்கள் ஆகின்றன. அவர்களது விடுதலைக்கு உள் நாட்டிலும் வெளி நாடு களிலும் தோழர்கள், நண்பர்கள், சமூக ஆர்வலர்கள் குரல் கொடுங்கள் நிதி உதவி செய்யுங்கள் என புதிய பூமி வேண்டுகின்றது.

## சு. க. திட்டத்தி

1ம் பக்க தொடர்ச்சி

திட்டத்தை வெளியிடும் என்று ஆரவாரமாகப் பேசப்பட்டது. மே முதலாம் திகதி 'வெசாக்' பண் டிகை தினமாகையால் ஏப்ரல் 30 ஆம் தினத்தை கொண்டாடிய அரசாங்கம் சுதந்திரக்கட்சியின் தீர்வு யோசனைகளை வெளியிட்டது. அதனை வெளியி டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அம் மேதின க்கூட்டத்திற்கு வரவில்லை. அவர் சர்வதேச கிரிக் கட் போட்டியை நேரடியாக பார்த்து ரசிக்க மேற் கிந்திய தீவுகளுக்கு சென்று நாட்டிற்கு திரும்பி இருக்கவில்லை. சு. க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன அத்தீர்வு திட்டத்தை வெளியிட்டார்.

மாவட்ட மட்டங்களுக்கு அதிகாரங்களை பரவலாக் குவதும் (பங்கீடு செய்வதல்ல) அலகு மாவட்டம் என்பதும் அத்திட்டத்தின் முன்மொழிவுகள். கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு அதிகாரப்பங்கீடாகும் என்றே கலந்துரையாடப்பட்டு வருகிறது. நடை முறையில் இருக்கும் மாகாணசபை திட்டத்தை விட கூடுதலான அதிகாரங்களை பங்கீடு செய்யும் தீர் வுத்திட்டங்களையே எல்லோரும் எதிர்பார்க்கின்ற னர். மாகாண சபையை விட கூடிய அதிகாரபங்கீ ட்டை ஏற்பாடு செய்த ஜனாதிபதி சந்திரிக்காவின் பிராந்திய சபைகளை விட கூடுதலான அதிகாரப் பங்கீடே நாட்டிற்கு தேவையாக இருக்கும் போது மாவட்டசபையை முன்மொழிவது மிகவும் சிறுபி ள்ளைத்தனமானதாகும். கிரிக்கட்போட்டிக்கு கொடுத்த முக்கியத்துவத்தை கூட மிகவும் சிக்க லான தேசிய இனப்பிரச்சினைக்கு மஹிந்த ராஜப க்ச கொடுக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகும் தமிழ்ம க்களின் சுயாட்சியை மறுக்கும் பேரினவாதம் தமிழ் மக்களின் போராட்டம் தொடரவேண்டியதையே உணர்த்துகிறது. பேரினவாதம் அரைகுறை தோல் வியையன்றி முழுமையான தோல்வியையே வேண்டி நிற் கிறது. தேசிய இனப்பிரச்சினைக்கு சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள மேற்படி அர்த்த மற்ற இத்தீர்வுத்திட்டம் ஏதோ கேட்கப்பட்டது வைக்கப்பட்டுள்ளது. என்றவாறான பெயராளவுத் திட்டமாகவே காணப்படுகின்றது. ஐம்பது வருட ங்களுக்கு மேலான தேசிய இனப்பிரச்சினைக்கு காலத்துக்காலம் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் எது வும் நடைமுறைக்கு வரவில்லை. 15 காரணம் பேரின வாதத்தின் அகங்காரப் போக்கினால் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாக அவை எதுவுமே அமைந்திருக்கவில்லை. கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் ஒருலட்சம் வரையான உயிர்கள் பலியா க்கப்பட்ட பின்பும் பேரினவாதம் தனது மமதையில் அகங்காரத்தில் வெறித்தனத்தில் இருந்து இறங் கவில்லை என்பதையே சுதந்திரகட்சியின் தீர்வு திட்டம் எடுத்துக் காட்டுகிறது.

இந்நிலையில் தென் இலங்கையில் மக்கள் வெறு மனே பார்வையாளர்களாக இருந்து பேரினவாத த்திற்கு மௌன அங்கீகாரம் வழங்கப் போகிறார் களா? அல்லது நாட்டை அழிவுப்பாதையில் இருந்து மீட்பதற்கு தங்களது உறுதியான குரலை உயர்த்தி நியாயமான தீர்வுக்கு வற்புறுத்தப் போகிறார்களா? நியாயமான அரசியல்தீர்வை வேண்டிநிற்பவர்களின் ஐக்கியமும் ஐக்கியப்பட்ட வெகுஜனச் செயற்பாடுக ளுமே இதற்கு பதில் கூறவேண்டும்.

## நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

### அக்கறைகள் பலவிதம்

**டெய்லி மிரர்** ஆசிரியர் திருமதி சூரியாராச்சி வடக்கு கிழக்கில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி அந்த நாளேட்டில் வருகிற செய்திகள் அவருக்கு ஆபத்தானது என்று வேறு எவரும் அவருக்குச் சொல்லியிருந்தால் அது அவர்மீதான அக்கறையாலானது என்று அவர் சொல்லுகிறார் என்று நினைத்திருக்கலாம். ஆனால் அக்குற்றச்சாட்டுகள் யார் சம்பந்தப்பட்டனவோ அவரிடமிருந்து வரும்போது அது வேறு விதமான ஒரு அக்கறையையே காட்டுகிறது. அது ஒரு எச்சரி க்கையாகவே இருக்கவேண்டும்.

அந்த எச்சரிக்கைக்குப் பிறகு டெய்லி மிரரில் வடக்குக் கிழக்கில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மக்கள் படும் அவலங்கள் பற்றியும் கொஞ்சம் கவனமாகவும் கட்டுப்பாடா கவுமே எழுதப்படுகின்றன.

### விளையாட்டுத்தனம்

**மலையகத் தமிழ்** ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்குகிற வைபவத்திற்குச் சனாதிபதி வருவார் என்று மலையத் தலை வர்மாரும் பங்குபற்ற வந்த எல்லாரும் காத்திருக்க நாட்டின் சனாதிபதி பாபேடொஸ் நாட்டில் நடக்கவிருந்த கிரிக்கட் ஆட்ட த்திற்கு மூன்று நாட்கள் முன் கூட்டியே போய்விட்டார் என்று அறிந்து தாங்கள் அவமதிக்கப்பட்டுவிட்டது போல உணர்ந்தனர் என்று சொல்லப்பட்டது.

முன்னைய சனாதிபதி நேரம் பிந்திப் போவது பற்றி எப்போதும் குறை சொல்வதுண்டு. இப்போதையவர் கிரிக்கட் ஆட்டம் தொடங்க இரண்டு நாட்கள் முந்தியே போய்ச் சேர்ந்துவிட்டார். கிரிக்கட் ஆட்டத்தை அவர் எவ்வளவு தூரம் முக்கியமான தாகக் கருதுகிறார் என்பதாலா தேசப்பற்றாலா என்று யாரும் சொல்ல இயலாதது. என்றாலும் இலங்கை கிரிக்கட் அணியின ருக்கு எப்படி ஆடுவது என ஆலோசனை வழங்க அவர் போ கவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

### பெரியாரும் சிறியாரும்

**பெரியாரின்** வாழ்க்கையைப் படமாக்குபவர்கள் அப்படத்திற்கு இசையமைக்க 'இசை ஞானி' இளையராஜாவைப் போய்க் கேட்டார்கள். பெரியார் நாத்திகர் ஆகவே அவர் பற்றிய பட த்துக்கு இசையமைக்க முடியாது என்று இசைஞானியார் திமிருடன் மறுத்திருக்கிறார். தன்னுடைய தமையன் பாவலர் வரதராசனுடன் சேர்ந்து சி. பி. எம் கம்யூனிஸ்ட்கட்சியின் அரசியற் கூட்டங்களில் பங்குபற்றி பாடிவந்ததை அவர் மறக்க விரும்புகிற வரலாறு. சினிமா மூலம் புகழ் பெற்ற பிறகு வீடுதேடி "அவாள்" வரத் தொடங்கிட்டார்கள். அவரும் "தலித் பிராம ணாள்" ஆயிட்டார்.

என்றாலும் அவரும் எவரும் மறக்கக் கூடாத விஷயங்களுண்டு. பெரியார் மட்டும் இருந்திராவிட்டால் இளையராஜா "இசை ஞானியாக" வந்திருக்கவும் முடியாது. பெரியாரை இவ்வளவு அற்பத்தனமாக மறுக்கத் துணியும் அளவுக்கு அவர் உயர்ந் திருக்கவும் முடியாது.

### கண்ணீரும் பன்னீரும்

**தமிழ்மக்கள்** விமானப்படையினரின் குண்டுவீச்சினாலும் எறிக ணை வீச்சினாலும் லட்சக்கணக்கில் இடம் பெயர்ந்த போது தமிழ் மக்களின் அவலம் பற்றி அழுது புலம்பிய தமிழ் நாளேடு களின் கட்டுரையாளர்கள் எலோரும் விடுதலைப்புலிகளின் விமானங்கள் கட்டுநாயக்கவிமான நிலையத்தில் அமைந்துள்ள வான்படைத்தளத்தின் வீசிய பிறகு பழையபடி பரணிபாடி வெற்றி வரலாறு எழுதத்தொடங்கிவிட்டார்கள். தமிழ் மக்களின் அவல நிலை பற்றி ஒருவருக்குமே நினைவில்லாமற் போய்விட்டதென் றால் நமது தமிழ் ஊடகத்துறை என்ன விதமான மனவியாதிக்கு ட்ப்பட்டு இருக்கிறது என்று யோசிக்க வைக்கிறது. நமது ஊடகவியலாளர்களதும் எழுத்தாளர்களதும் சமூக அக்கறை பற்றி யோசிக்க வைக்கிறது. நமது அக்கறை வெறுமனே போரிற் பெறப்படுகிற அற்ப வெற்றி தோல்விகள் பற்றியதா அல்லது மக்களின் நல்வாழ்வும் விடுதலையும் பற்றியதா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# பிரிட்டன் கடனுதவியை நிறுத்தியது ஏன்?

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு. பிரிட்டிஷ் காலனியாதிக்கம் முக்கிய காரணமாகும். பிரிட்டிஷ் காலனியாதிக்கம் இலங்கை மீது திணித்த ஒற்றை ஆட்சி நிர்வாக முறை 1948 இல் இலங்கையிலிருந்து செல்லும்போது இலங்கை மீது சுமத்திவிட்டுச் சென்ற சோல்பரி அரசியல் யாப்பு போன்றன தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தில் இருக்கும் பங்கை நிராகரித்தன. அதனை அடிப்படையாக்கொண்டே 1972, 1978 அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டு பௌத்த சிங்கள மேலாதிக்கம் அரசியல் யாப்பு ரீதியாக நிறுவனமயப்படுத்தப்பட்டது.

பிரிட்டன் பாராளுமன்றத்தில் இலங்கையின் தற்போதைய யுத்தச் சூழல் பற்றியும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையின் மீளமைப்பு நிவாராண நடவடிக்கைகளுக்காக 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்த 41 மில்லியன் பவுண்ஸ்கள் கடனுதவியை இடைநிறுத்துவதாக பிரிட்டன் தீர்மானித்துள்ளது. இது தமிழீழ விடுதலைப்புலிகளினதும் அவரது ஆதரவாளர்களாலும் செய்யப்பட்ட பிரசாரத்தின் விளைவாகும் என்று இலங்கை அரசாங்கமும் பேரினவாதிகளும் கூறுகின்றனர்..தமிழ்த்தரப்பினர் இதனை தமிழ்தேசியவாதிகளின் சாதனை என்று கூறுகின்றனர்.

பிரிட்டனின் முயற்சிகள் அதன் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் ஒருபகுதியே ஆகும். அதனால் இலங்கை அரசாங்கமும் பேரினவாதமும் அழுத்தங்களுக்குட்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையின் மனித உரிமைகள் மீறல் காரணமாக ஜேர்மன் அதனது கடனுதவியை ஏற்கனவே இடைநிறுத்தியுள்ளது. அமெரிக்கா இலங்கைக்கான கடனுதவிகளை நிறுத்த வேண்டுமென அமெரிக்க பிரதிநிதிகள் சபை அமெரிக்க ஜனாதிபதியை ஏற்கனவே கேட்டிருந்தது.

வெளிநாட்டு கடனுதவிகள் இல்லாமல் நாட்டின் பொருளாதார நிலையை சமாளிக்க முடியாத நிலையில் ஜேர்மன், பிரிட்டன் என்பவை கடனுதவியை நிறுத்தியுள்ளமை இலங்கையை மேலும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது.

இந்த நிலைமைக்கான காரணத்தைச் சரியாக ஏற்றுக்கொண்டு மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவதுடன் யுத்தத்தை நிறுத்தி தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் இலங்கை அரசாங்கம் யுத்தத்தை மேலும் நீடிப்பதற்கான நடவடிக்கைகளையே எடுத்து வருகின்றது. ஐரோப்பிய நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதால் அந் நாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திர சேவையில் இருப்போரை இலங்கை அரசாங்கம் இடமாற்றம் செய்யவிருப்பதாக தெரிகிறது. மாவட்டசபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதை அரசியல் தீர்வாக அரசாங்கத்தின் பிரதான கட்சியான சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ளது. ஒடுக்குமுறையாளர்களும் அடக்குமுறையாளர்களும் அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும் கூட மேலும் மேலும் ஒடுககுமுறைகளையும் அடக்கு முறைகளையுமே கட்டவிழ்த்து விடுவார்.

அவர்களின் அவ்வாறான நடவடிக்கைகளே அவர்களை தோல்விக்கு இட்டுச்செல்லும். இவ்விடத்தில் தோழர். மாவோ சேதுங் கூறிய கூற்றுக்களில் ஒன்றை நினைவுபடுத்துவது நல்லது. ‘முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தங்களின் கால்களில் போட்டுக் கொள்வதற்கே’ என்பதே அக்கூற்றாகும்.

வெளிநாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களை செய்வதும் அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதனால் அல்ல. அதேபோன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஜனநாயக மறுப்பு மனிதஉரிமை மீறல்கள் பற்றியெல்லாம் எடுத்துக்கூறி கடுமையான அறிக்கை விடுவதெல்லாம் இலங்கை நாட்டின் இறைமை சுயாதிபத்தியத்தை ஆதரிப்பதற்காகவல்ல. அவற்றின் பேச்சுகள் அறிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் யுத்தத்தை கொண்டு நடத்துவதற்கு ஊக்கமளிப்பதாக இருப்பதை நம்பி இலங்கை அரசாங்கம் செயற்பட்டாலும் அதுவும் அடக்கப்படும் அரசாங்கமாகும் என்பதை விளங்கிக் கொள்வதில்லை.

அழிவு நிறைந்த யுத்தம் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெறும் போது பிரிட்டன் உட்பட ஏனைய நாடுகள் இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கான உள்நோக்கம் சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். மாவட்ட சபை என்ற அதிகாரப்பரவலாக்கலை முன்வைக்காமல் நியாயமான அதிகாரப் பங்கீட்டிற்கான யோசனை களை முன்வைக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

அதேவேளை சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட நெருக்கடிகள் பற்றி அளவிற்கு அதிகமாக நம்பிக்கைத் தேவை இல்லை. ஏனெனில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மீதான நெருக்கடிகளை அவ்வெளிநாடுகள் கைவிட்டு விடவில்லை. அதனால் சர்வதேச நெருக்கடிகள் என்பதை அளவிற்கு அதிகமாக நம்பபி குதூகலிக்காமல் அரசியல் தீர்வை காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த தமிழ்த்தரப்பினர் அதனை பயன்படுத்திக் கொள் வது நல்லது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் பக்கம் நின்று பார்த்தால் அரசாங்கத் தின் மீதுள்ள அழுத்தம் என்பதற்கு அப்பால் வேறு ஒன்றுமில்லை. இது தலைகீழாகவும் மாற்றக்கூடும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிநாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்காக பயன்படுத்துமா அல்லது த.வி.பு இயக்கத்திற்கும் வெளிநாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமாக பயன்படுத்தப்படுமா என்பது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் பகுதியாகவே இன்னும் இருந்து வருகிறது. அவ்விடயமே தேசிய இனப்பிரச்சினையின் முழுமையாக் கப்பட்டுவிட்டால் தற்போது இலங்கையின் அனைத்துமக்களும் அனுபவிக்கும் துன்பங்கள் பாரதூரமாகிவிடும் அபாயமே காணப்படுகிறது.

## இவர் தான் கோயபல்ஸ்



ஜேர்மனியில் நாஜி ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியில் ஃ பாஸிசம் தலைவிரித்தாடியது. அவனது வலது கரமாகவும் தகவல் பிரச்சார அமைச்சராகவும் இருந்தவன் கோயபெல்ஸ். “எந்த வொரு பொய்யையும் அழுத்தம் திருத்தமாக திரும்பத் திரும்பச் சொன்னால் அது நிச்சயம் உண்மையாக மாறும். அதனை மக்கள் நம்புவார்கள்.” இதன் அடிப்படையில் பொய்களையும் புனைவுகளையும் உருவாக்கி திரும்பத்திரும்பப் பிரசாரம் செய்து வந்ததில் வல்லவனாகத் திகழ்ந்தவன் கோயபெல்ஸ். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அவனும் அவன் கட்டவிழ்த்துவிட்ட பொய்கள் புனைவுகள் யாவும் அம்பலமாகின. அதன் காரணமாகவே ஆளும் வர்க்கம் பிரசாரப்படுத்தும் பொய்களுக்கும் புனைவுகளுக்கும் கோயபல்ஸ் பொய்கள் என அழைக்கப்படுகின்றன. மக்களை அடக்கி ஒடுக்கும் அரசாங்கங்களின் சார்பில் ஒவ்வொரு கால கட்டத்திலும் இத்தகைய நவீன கோயபல்ஸ்கள் இருந்து வருகின்றமை காணக்கூடியதேயாகும்.

# மலையக ஆசிரிய நியமனங்கள்

## அரசியல் வாதிகளின் நன்கொடையல்ல

மூன்று வருடங்களுக்கு இழுத்தடிக்கப்பட்ட 3179 மலையக ஆசிரியர் நியமனங்கள் ஒருவாறாக கொடுக்கப்பட்டுவிட்டது. தோட்டத்தொழிலாளர் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு இந்த நியமனங்கள் கிடைத்துள்ளன. இதனால் அக்குடும்பங்களில் சமூக மேனிலையாக்கம் ஏற்படாவிட்டாலும் இருப்பிற்கு உதவுவதாக இருக்கும். 9 ஆயிரம் இளைஞர்கள் ஆசிரியர் நியமனங்களை பெறத்தகுதியுடையவர்களாக இருந்தாலும் 3179 பேருக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மலையக சமூகத்திற்கென 2700 பேர் அரசாங்க நிர்வாகத்துறையில் எழுதுவினைஞ ர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான பரீட்சைகள் நடைபெற்றபோதும் அந்நியமனங்களும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தின்படி வீடு கட்டிக்கொள்வதற்காக தோட்டத் தொழிலாளர் குடும்பமொன்றுக்கு தோட்டக்காணிகளிலிருந்து 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட வேண்டும். அத்தீர்மானம் இரத்து செய்யப்படாமல் இன்னும் வலுவில் இருக்கிறது.

ஆசிரியர் நியமனம் இழுத்தடிக்கப்பட்டதற்கும் எழுதுவினைஞர் நியமனங்கள் வழங்கப்படாமல் இருப்பதற்கும் வீடு கட்டிக்கொள்வதற்கான காணிகள் வழங்கப்படாமல் இருப்பதற்கும் தோட்டத்தொழிலாள-மலையகத்தமிழ் சமூகத்தின் மீதான வர்க்க ரீதியான, இனரீதியான பாரபட்சங்களே அடிப்படைக் காரணமாகும்.

ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் மத்தியிலிருந்து எழுந்த போராட்டங்களினால் மலையக அரசியல்வாதிகள் எனப்படுவோர் அழுத்தங்களுக்குள்ளானதுடன் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதில் ஊடகங்களிலும் பொது நிகழ்வுகளிலும் அதற்கான கோரிக்கைகள் வெளிப்பட்டன.

ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொள்வதற்கான சங்கமொன்று அமைக்கப்பட்டு பல வெகுஜனப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (அச்சங்கத்தின் தலைவரான ச. மோகன்ராஜ், செயற்பாட்டாளரான சி. கிருஸ்ணப்பிரியன் ஆகியோருக்கும் ஆசிரியர் நியமனங்கள் கிடைத்தும் அவர்கள் அதனை ஏற்று தொழில் செய்ய முடியவில்லை. காரணம் அவர்கள் இவரும் கடந்த பெப்ரவரி 14, 15 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்டு அவசரகால சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.) அதனூடாகப் பல விதமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக அரசியல் வாதிகள் குறிப்பாக இ.தொ.கா தலைவர்கள் தங்களினால்தான் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் கூறுகின்றனர். அவ்வாறே சில அதிகாரிகளும் உரிமை கோருகின்றனர். அரசாங்க நியாமனங்கள் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளுக்கூடாகவே வழங்கப்படும். அதனால் அவர்களே நியமனங்களை கொடை செய்வதாகக் கொள்ள முடியாது. வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டியதன் அரசின் கடைமை ஆகும்.

ஆசிரியர் நியமனங்களை வென்றெடுக்க அமைப்பு ரீதியில் திட்டமிட்ட வெகுஜன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போன்று எழுதுவினைஞர் நியமனங்களையும் வீடு கட்ட காணிகளை வென்றெடுக்கவும் ஐக்கியப்பட்ட திட்டமிட்ட வெகுஜன நடவடிக்கைகள் அவசியமாகும்.

அத்துடன் ஆசிரியர்களாகிவிட்ட மலையக இளைஞர்களும், யுவதிகளும் அப்பதவிகளை தனிப்பட்ட பதவிகளாகக் கொள்ளாமல் சமூகத்திற்கு கல்வியை ஊட்டுவதற்காகவும், சமூகத்திற்கு விழிப்பூட்டுவதற்கும் அவரவர்களுக்கு ஏற்றவகையில் செயற்படுவார்கள் என்பது சமூக அக்கறையாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

# முதலிலே........!

ஜேர்மனியில் நாஜி சர்வாதிகாரி ஹிட்லர் ஃ பாசிச சர்வாதிகார ஆட்சி நடாத்திய வேளை படுகொலைகள் ஆட்கடத்தல்கள் காணாமல் போதல்கள் தடுத்து வைத்து சித்திரவதைகள் போன்ற கொடூரங்கள் இடம் பெற்றன. இவற்றுக்காக பல பெயர்களில் ஒடுக்குமுறைப் படைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அன்றைய கொடூரங்களை விபரிக்க பாதிரியார் மார்ட்டின் நெய்மோலர் கூறிய வாக்கியங்கள் உலகப் பிரசித்தி பெற்றவையாகும்.

முதலிலே யூதர்களிடம் வந்தார்கள்
நான் எதுவும் பேசவில்லை
ஏனென்றால்
நான்ஒரு யூதன் இல்லை என்பதால்.

பின்பு கம்யூனிஸ்டுகளிடம் வந்தார்கள்
நான் ஒன்றுமே பேசவில்லை.
ஏனென்றால்

நான் ஒரு கம்யூனிஸ்ட் இல்லை என்பதால்.
அதன் பின் தொழிற்சங்கவாதிகளிடம் வந்தார்கள்
அப்பொழுதும் நான் எதுவும் கூறவில்லை
ஏனென்றால் நான்
ஒரு தொழிற்சங்க வாதி
இல்லை என்பதால்.

இறுதியில் என்னிடமே வந்தார்கள்
அவ்வேளையில்
எனக்காகப் பேசுவதற்கு
எவருமே இருக்கவில்லை.

மார்ட்டின் நெய்மோலர்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மே 15 மக்கள் எதிர்ப்பியக்கம்

மக்கள் எதிர்ப்புத் தினம மேற்கொள்ளப்பட்டு மே 15ம் திகதியுடன் இரண்டு வருடங்களாகின்றன. 2005 மே 15ம் திகதி மேல்கொத்மலைத்திட்டத்தை நிறுத்த வேண்டுமென வற்புறுத்தி மலையகமெங்கும் பரவலாக குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் மக்கள் எதிர்ப்பு இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கடைகள் பூட்டப்பட்டிருந்தன. வீடுகள், கடைகள், காரியலயங்கள் வாகனங்களில் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மலையகப் பெருந்தோட்டத்தின் பிரதான தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பு எதுவுமின்றி மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அழைப்பை ஏற்று மே 15 மக்கள் இயக்கம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. மக்கள் தாங்களே நேரடியாகப் பங்கெடுத்தனர். அவ்வியக்கத்தில் புதிய- ஜனநாயக கட்சி பிரதான பங்கு வகித்தது. (அதில் முக்கிய நடவடிக்கையாளர்களாக இருந்த புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களில் 5 பேரும் ரயில்வே தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர்களும் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களாக அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்படத்தக்கது)

அவ்வியக்கத்தில் பங்கெடுத்த சில மலையக அமைப்புகளும் மலையக தொழிற்சங்கங்களும் அப்போராட்டத்தை காட்டிக்கொடுத்தன. மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் முன்னெடுத்த 2005 செப்டெம்பர் மாத எதிர்ப்பியக்கத்திலும் ஒக்டோபர் 2 ஆம் திகதி தலவாக்கொல்லையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. சில அவற்றில் புதிய- ஜனநாயக கட்சியினதும் ரயில்வே தொழிற்சங்க ஒன்றியமும் அதிகளவு பங்களிப்பு செய்தன. போஸ்டர் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு ஒரு வாரத்தின் பின் விடுவிக்கப்பட்டனர். சில மலையக அமைப்புகளின் சூழ்ச்சியுடன் பேரினவாத காடையர்களால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர்.

அதன் பிறகு இ. தொ. கா, ம. ம. மு உட்பட ஏறக்குறைய மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் மேல்கொத்மலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கத்திற்கு வெளிப்படையாக ஆதரவு கொடுத்தன. இதனால் மக்களின் போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டு அத்திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த நீர்மின்திட்டத்தினால் மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழும் தலவாக்கொல்லை பகுதியில் பாரிய நிலப்பரப்பு நீருக்குள் மூழ்கடிக்கப்படவிருக்கிறது. இதனால் மலையகத் தமிழ் மக்களின் குடிசனச் செறிவில் வீழ்ச்சி ஏற்படும் அத்துடன் பாரிய சூழலியல் பாதிப்புகளும் ஏற்படும்.

தற்போது மக்கள் அப்பாதிப்புகளை அனுபவிக் ஆரம்பித்துள்ளனர். அத்திட்டத்தினால் இடம்பெயர நீர்ப்பந்திக்கப்படுபவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு காணியும், வீடும் வழங்கப்படவில்லை. வேலை வாய்ப்புகளும் வழ




ங்கப்படவில்லை. இதனால் மக்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அரசாங்கத்தினதும் அதன் அடிவருடிகளாலும் மே. கொ. மக்கள் இயக்கத்தின் நடவடிக்கைகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்கும், சூழலுக்கும் நாட்டிற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தப்போகிற அத்திட்டத்தினை தடுத்து நிறுத்தவேண்டுமென்ற கோரிக்கை இன் னும் கைவிடப்படவில்லை. ஏற்கனவே மலையகத்தில் இருக்கும் நீர்த்தேக்க இயக்கங்களினாலேயே மண்சரிவு கள் ஏற்படுகின்றன என்பதை புவியிய லாளர்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறிவருகின்றனர். ஜப்பான் ஏகாதிபத்தியக் கடனுதவியுடன் அத்திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தினால் பெறப்படவுள்ள மின்சாரத்தினை சூழலுக்கு பாதிப்பில்லாத மாற்று வழிகளினால் பெற்றுக் கொள்ள முடியுமென்று நிபுணர்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த போதும் அவற்றை அரசாங்கம் கணக்கில் எடுப்பதாக இல்லை.

மே. 15 மக்கள் எதிர்ப்பியக்கம் புதுப்பிக்கப்பட்டு மேல்கொத்மலைத்திட்டத்தை தடுத்து நிறுத்த மக்கள் இயக்கங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். மே 15 தியாகி சிவனுலட்சுமணன் நினைவதினமாகும். பெருந்தோட்டக்காணிகளில் திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்களை மேற்கொண்டு தோட்டத்தொழிலாளர்களை இன ரீதியாக ஒடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் 1977 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி சிவனு லெட்சுமணன் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மண்ணை காக்கும் போராட்டத்தில் உயிர்நீத்த சிவனுலெட்சுமணனின் நினைவுடன் மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்க நடவடிக்கைகள் விரிவாக முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## தலவாக்கொல்லையில் நடந்த வெட்கம் கெட்ட வரவேற்பு

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டங்களை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு அதற்கான வெகுமதிகள் கிடைத்துள்ளன. சிலருக்கு மின்சாரசபையில் பதவிகள் கிடைத்துள்ளன. சிலர் மேல்கொத் மலைத்திட்டத்திலேயே ஒப்பந்த வேலைகளை எடுத்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க அழிவு நிறைந்த மேல்கொத்மலைத்திட்டத்தை முன்னெடுக்கும் ஜப்பானிய நிறுவன இயக்குனர் தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுள்ளார் என்ற செய்தி மேலும் வெட்கமடையச் செய்கிறது.

தலவாக்கொல்லையை இல்லாமலாக்கும் திட்டத்திற்கு பொறுப்பான வரை பரிசளிப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக அழைக்கும் அளவிற்கு தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர்காம பெற்றோர்களும் மாணவர்களும் அறிவு கெட்டவர்களாகிவிட்டனரா?

அவரை பிரதம அதிதியாக அழைத்ததற்கு பின்னால் மேல்கொத்மலைத்திட்டத்தில் ஒப்பந்த வேலைகளை பெற்றுக்கொண்ட அப்பகுதி தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் இருந்துள்ளனர். இவர்கள் மக்களின் வாக்குப்பலத்தைக் கொண்டு அதிகாரத்தில் இடத்தைப் பிடித்துக் கொண்டு அவர்களின் இருப்பிற்கும் சுக போகத்திற்காகவும் அஞ்சும் கெட்டும் அறிவும் கெட்டுத்திரிகின்றனர். மக்களையும் அவர்களுக்கு ஏற்றவாறு அறிவு கெட்டவர்களாக மாற்றி வைத்திருப்பதில் கவனமாக இருக்கின்றனர்.

தலவாக்கொல்லை நகரை நீரில் மூழ்கடித்து மலையகத்தை நாசமாக் கும் திட்டத்தை நடைமுறைப்படுத் தும் ஜப்பானிய ஏகாதிபத்திய பிரதிநிதி க்கு தலவாக்கொல்லை த.ம.வித்தியாலயத்தில் கௌரவிப்பு செய்தமை வெட்கக்கேடானது ஆகும்.

## தியாகி சிவனுலெட்சுமணனின் 30 வது ஆண்டு நினைவு

மே 15 உடன் சிவனுலெட்சுமணன் கொல்லப்பட்டு 30 வருடங்களாகின்றன. வட்டக்கொடை யொக் ஸ்போர்ட் தோட்டத்தின் சிவனு லெட்சுமன் பத்தனை டெவன் தோட்டத்தில் வைத்து பத்தனை பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். நுவரெலியா மாவட்டத்தில் 7 ஆயிரம் ஏக்கர் தேயிலை தோட்டக்காணியில் திட்ட மிட்ட பேரினவாத குடியேற்றங்களை மேற்கொள்ள அன்றைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது பொலிஸார் இவ் இளைஞனைச் சுட் டுக்கொன்றனர்.

அரசாங்க நில அளவையாளர் பொலிஸாரின் பாதுகாப்புடன் பத்தனை டெவன் தோட்டக்காணிகளை அளந்து பிரித்தொதுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை அவதானித்த சிவனுலெட்சுமணனும் அவரது நண்பர்களும் அவரது யொக்ஸ் போர்ட் தோட்டத்திலிருந்து ஆற்றை நீந்திக் கடந்து மறு கரைக்கு சென்று டெவன் தோட்டத்திற்கு சென்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். கடு மையான மழைபெய்ந்து கொண் டிருக்கும் போது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது ஆற்று ஓட்டத்தின் ஆபத்தையும் பொருட்படுத்தாது ஆற்றை நீந்திக் கடந்து சென்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அப்போது பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் அப்போது 18 வயதான சிவனுலெட்சு மணன் கொல்லப்பட்டார்.

அப்போராட்டத்தினாலும் தியாகத்தினாலும் அத்திட்டம் கைவிடப்பட்டது. தோட்டங்கள் மூடப்படுவது தடுக்கப் பட்டது. தொழிலாளர்கள் வேலை இழந்து வீதிகளுக்கு வர இருந்த நிலையும் தடுக்கப்பட்டது.

திட்டமிட்ட பேரினவாத குடியேற்றம் நடைபெறாததால் இனரீதியான பாதிப்புகள் தவிர்க்கப்பட்டன. அப்போராட்டத்தின் தியாகத்திலிருந்து மலையகத்தில் புதிய போராட்டப்பாரம்பரை ஒன்று உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று சிவனுலட்சுமணன் செய்த உயிர்த் தியாகம் முப்பது வருடங்களுக்குப் பின்பும் கனதியும் காத்திரமும் கொண்டதாகவே இருந்து வருகின்றது. எங்கு அடக்கு முறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கும் எங்கு போராட்டம் உண்டோ அங்கு தியாகங்களும் இருக்கவே செய்யும் என்ற வரலாற்று அனுபவத்திற்கு சிவனு லெட்சுமணன் போன்ற தியாகிகள் மலையக மக்களுக்கு முன் உதாரணமானவர்களாவர்.

## நான் அவர்கள் இல்லையா?

மிஞ்சி மிஞ்சிப் போனால்
என்னை யார்
என்ன செய்யலாம்
சாக்காட்டலாம்
இப்படி கூறுவார்
எனது ஆசிரியர்
அச்சம் தவிர்க்கச் சொல்லும்
இந்த ஆயிரத்தியோராவது
போதனையின் பின்பும்
எனக்கு பயமென்று
எல்லோரும் கூறுகிறார்கள்

இனவன்முறையிலா
தாக்குதல் நடவடிக்கையிலா
தற்காப்புச் செயல்களிலா
பயங்கரவாதத்திற்கு எதிரான போரிலா
துரோகிகள் களையெடுப்பிலா
இடதுசாரி என். ஜீ. ஓ
ஊடாக, சமாதான, தொழிற்சங்க
சிங்களப் புலிகளில் ஒருவராகவா
கம்யூனிஸ்டாகவா
கடத்தப்படுவேன் கொல்லப்படுவேன்.

இப்போதெல்லாம் இப்படி யோசிப்பதால்
நான் கோழையா?
அச்சம் என்னை
ஆட்டிப்படைக்கிறதா?

ஹிட்லரின் ஜேர்மனியில்
யூதர்கள், தொழிற்சங்கவாதிகள்
கம்யூனிஸ்ட்டுகள்
கடத்தப்பட்டபோதெல்லாம்
நான் அவர்கள் இல்லையென்று
மௌனம் காத்த மதகுரு போல்
இருக்கக் கூடாதென்பதால்
இப்படி யோசிக்கிறேன்.
பிறரும் நானும்
யோசியாதிருக்கவே
கடத்தல்கள் காணாமல் போதல்கள்
கைதுகள் கொலைகள்
தடுப்புக்காவல்கள்
ஆட்சி செய்கின்றன.

கொலைகளின் அச்சத்தையும்
அச்சத்தின் கொலைகளையும்
அடியோடு ஒழிக்க அச்சம் தவிர்க்க
பிறரையும் என்னையும்
நானே மறப்பேனா?

ஜனப்பிரியன்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மே தினத்தைப் பாதுகாப்போம்

மேதினத்தை ஏப்பிரல் 30 ஆம் திகதி ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதனோடு இணைந்துள்ள இடதுசாரரி கட்சிகளும் நினைவு கூர்ந்தன. ஜே.வி.பியும் மே. 30 ஆம் திகதியே நினைவு கூர்ந்தது. மலையகப் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களும் ஏப்பிரல் 29 ஆம் திகதி கொண்டாடின. பௌத்த மத பண்டிகையான வொசக் தினம் மே முதலாம் திகதி என்பதனாலேயே அவ்வாறு கொண்டாடினார்கள். இதனை சில மாதங்களுக்கு முன்பே முன்மொழிந்தது ஜே.வி.பிதான். புதிய- ஜனநாயக கட்சி மே முதலாம் திகதி அட்டன் நகரில் மே தினத்தை நினைவு கூர்ந்தது. பல இடதுசாரி தொழிற்சங்களும் கொழும்பு நகரில் மேதினக் கூட்டத்தையும் ஊர்வலத்தையும் நடத்தின பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சி மேதினத்தை கொண்டாடாது வெசாக் மதம் அனுட்டானங்களை செய்தது.

நேர்மையான பாட்டாளிவர்க்க அமைப்புக்களைத் தவிர ஏனையவைகள் எப்போது மேதினத்தை நினைவு கூர்ந்தால் என்ன என்று கேட்கலாம். வொசக் பண்டிகை தினமென்றும் வேறு வேறு காரணங்களுக்காவும் மே தினத்தை வேறு வேறு அமைப்புகள் வேறு வேறு விதமாக கொண்டாடுவது மே தினத்தின் மகத்துவத்தை சிறுமைப்படுத்துவதாகும். அத்துடன் தொழிலாளர்களின் நாளை உரிய நாளில் நினைவு கூருவதற்கு மறைமுகமாக தடை விதிப்பதாகும். பௌத்த மத உணர்வுகளை தூண்டி {வெசாக்{ தினத்தன்று மே தினத்தை நினைவு கூர்வதை தடுப்பதற்கான தேவைகளை இலங்கையின் ஆளும் பேரினவாத முதலாளிவர்க்கம் கொண்டுள்ளது. இனப்பிரச்சினையினால் இன ரீதியாக பிளவுபட்டுள்ள இலங்கையின் தொழிலாளி வர்க்கம் ஐக்கியப்படுவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் வழங்கக் கூடாது என்பதில் இலங்கையின் ஆளும் வர்க்கம் மிகவும் கண்டிப்பாகவே இருக்கிறது.

இதேபோன்று 1965 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி மே தின ஊர்வலங்களுக்கு அன்றைய ஐ. தே. கட்சி அரசாங்கம் தடை விதித்தது. அதனை மீறி அன்று மிகவும் பலமாக இருந்த புரட்சிகர கட்சியாள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சண்முகதாசன் தலைமை) கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஊர்வலத்தையும் கூட்டங்களையும் நடத்தியது. அதனால் அக்கட்சி

புதிய பூமி

சுற்று 14 மே 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 102

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

தோழர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை சாட்டாக காட்டி மீண்டும் ஐ. தே. கட்சி அரசாங்கம் மே தின கூட்ட ங்களுக்கும் தடையை விதித்தது. இத்தடைகளையும் மீறி அதே புரட்சிகர கட்சி மட்டுமே (அதன் தொடர்ச்சியே புதிய- ஜனநாயக கட்சி) மேதின கூட்டங்களையும் ஊர்வலங்களையும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திழலும் நடாத்தியது.

1995 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் மேதின ஊர்வலங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கம் தடைவிதித்தது. அதனை மீறி அரசாங்கத்துடன் இணைந்திராத இடதுசாரி கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஊர்வலத்ரைத நடத்தின. அவ்வாறு ஊர்வலத்தை தடைசெய்தமை பிழையானது எனவும் அடிப்படை உரிமைகளை மீறுவதுமாகும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது

கடந்த வருடமும் மே தின ஊர்வலங்களுக்கு தடை விதிக்காவிடினும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதாவது பொலிசாரால் பாதுகாப்பு வழங்கப்பட முடியாதெனெ கூறப்பட்டது. இவ்வாண்டும் அரசாங்கம் மேதினக் கூட்டங்ககளையும் ஊர்வலங்களையும் தடை செய்யாவிடினும் வெசாக் பண்டிகை என்ற சாட்டில் ஏப்ரல் 30 ஆம் திகதி கொண்டாடுவதற்கு அரசாங்கமும் அதனை ஆதரிக்கும் கட்சிகளும் ஏற்பாடு செய்தமை மறைமுக தடையே ஆகும்.

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் மே தினத்தை களியாட்ட நிகழ்ச்சிக்குரிய நாளாக கொண்டாடுகின்றன. சில நாடுகளில் இன்னும் மேதினம் விடுமுறையுடன் கூடிய தொழிலாளர் தினமாக்கப்படவில்லை. அமெரிக்காவில் மே தினம் அங்கீகரிக்கப்படவில்லை.

இலங்கையில் மே தினம் நீண்டப் போராட்டங்களினூடாக வென்றெடுக்கப்பட்டதாகும். 1956 ஆம் ஆண்டு காலஞ்சென்ற எஸ். டபிள்யூ பண்டாரநாயக்கவின் அரசாங்க காலத்திலேயே மே தினம் அங்கீகரிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாக்கப்பட்டது. அதனை வசதியான போதெல்லாம் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தடைசெய்வதற்கு முயற்சிகள் எடுத்தன. அவை தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளால் முறியடிக்கப்பட்டன.

ஏகாதிபத்திய உலக மயமாதல் நிகழ்ச்சி நிரலை உயர்த்திப்பிடிக்கும் மேற்கத்தேய முதலாளித்துவ நாடுகள் மே தினத்தை இல்லாமலாக்க திட்டமிட்டு செயற்படுகின்றன என்பதை ஒரு புறம் பார்க்க முடியும். மறுபுறம் இலங்கை போன்ற நாடுகள் சமயத்தின் பேரால் மே தினத்தை இல்லாமலாக்கப் பார்க்கி ன்றன.

கொழும்பில் மே முதலாம் திகதி இடதுசாரி தொழிற்சங்கள் மே தின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்தின. ஆனால் அக்கூட்டமும், ஊர்வலமும் அரசியல் கட்சி ரீதியாக அரசியல் நிகழ்வாக கொழும்பில் நடாத்த இடதுசாரி கட்சிகளும் தவறிவிட்டன. இது மிகவும் பலவீனமானதாகும்.

இதனை மாற்றி இலங்கையின் உழைக்கும் மக்கள் மேதினத்தை மே முதலாம் திகதி நினைவு கூர்வதற்கு மட்டுமன்றி இதுவரை தொழிலாளர் வர்க்கம் வென்றெடுத்த உரிமைகளை பாதுகாக்கவும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும்.

# வடக்கின் பொருளாதாரமும் கல்வியும் திட்டமிட்டே அழிக்கப்படுகின்றன.

வடக்கு பிரதேசம் வரண்ட வானம் பார்த்த பூமி என்றே கூறப்பட்டு வந்தது. அந் நிலையிலும் அங்குள்ள மக்கள் தமது கடின உழைப்பால் விவசாயம் மீன்பிடி பனை தென்னை வள உற்பத்தி முயற்சி மற்றும் சிறு தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். அதே வேளை கொலனியக் காலக் கல்வியானது உத்தியோக வாய்ப்பை தெற்கில் வழங்கியது. அத்துடன் வியாபார வர்த்தக முயற்சிகளிலும் கணிசமானோர் ஈடுபட்டும் வந்தனர். மலேசியா சிங்கப்பூரில் வேலைவாய்ப்பையும் பெறக் கூடியதாக இருந்தது. இதனால் வடக்கின் பொருளாதாரத்தை மணியோடர் பொருளாதாரம் என அழைக்கப்பட்ட நிலையும் முன்பு இருந்து வந்தது.

பின்பு வன்னிப் பிரதேசங்களின் குளத்து நீர் பாவனை மூலமான விவசாயமும் குடா நாட்டின் நிலத்தடி நீரிலான உப உணவுப் பயிற்ச் செய்கையும் மீன்பிடி விருத்தியும் ஓரளவிற்கு சுய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியது. ஐம்பதுகளுக்குப் பின்பு அரசாங்க வேலைவாய்ப்பு சிங்களம் அரசகருமமொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு படிப்படியாக குறைவடைந்து கொண்டது. அவ்வாறே உயர் கல்வியில் தரப்படுத்தலானது மட்டுப்படுத்தல்களை ஏற்படுத்தியது. இவை தேசிய இனப்பிரச்சினையின் பிரதான பகுதிகளாகின. வடக்கின் நடுத்தர வர்க்கத்தினரும் மேல் மட்டத்தினரும் வேலை வாய்ப்பு கல்வி உயர் பதவிகள் போன்றவற்றில் கடும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தனர். விவசாயிகள் மீனவர்கள் பனை தென்னை வள உற்பத்தியாளர் என்போர் அறுபதுகளில் இருந்து எழுபதுகளின் நடுக் கூறு வரை பெற்ற பலாபலன்கள் யாவும் சீர்குலைவையும் அழிவுகளையும் கண்டன. ஒரு புறத்தால் 1977ல் இருந்து நடைமுறைக்கு வந்த தாராள இறக்குமதி தனியார் மயப்படுத்தலால் உள்ளுர் உற்பத்திகள் நலிவடையச் செய்யப்பட்டன. மறுபுறத்தில் தேசிய இனப்பிரச்சினை யுத்தமாகப்பட்டதன் மூலமும் வடக்கின் பொருளாதார முன் முயற்சிகள் தடுக்கப்பட்டன.

அவ்வாறே கல்வியில் தரப்படுத்தலில் தொடங்கி உயர்கல்வியும் பாடசாலைக் கல்வியும் வெறும் பெயரளவிலான ஒன்றாக மாற்றப்பட்டது. கல்வியை மூலதனமாக்கும் யாழ்ப்பாணக் கண்ணோட்டத்தில் பயிலப்பட்டு வந்த கல்வித்துறை கல்வி கற்றுப் பயன் இல்லை என்ற முடிவுக்கு வருமாறான சமூக நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. பேரினவாத ஒடுக்குமுறையின் தீவிரமும் அதனை எதிர்த்த தமிழ் இளைஞர்களின் ஆயுத இயக்கங்களும் கல்வி நாட்டத்திலிருந்து தமிழ் மாணவர்களைத் திசைதிருப்பிக் கொண்டது.

இவற்றின் மத்தியில் தாராளமய உலகமயமாதலின் கீழ் நாட்டிலிருந்து வெளியேறுவது இலகுவாக்கப்பட்டு ஊக்குவிக்கவும் பட்டது. பெரும் பகுதியினர் மேற்குலக நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். இன ஒடுக்குமுறை அரசியல் நெருக்கடி போன்றவற்றால் வெளியேறியதாகக் கூறிக்கொண்டு பெரும் எண்ணிக்கையில் ஐரோப்பிய ஸ்கன்ட நேவிய நாடுகளில் மற்றும் கனடா அவுஸ்ரேலியா போன்றவற்றிலும் புலம் பெயர்ந்து சென்ற தஞ்சம் கோரி நின்றனர். இரண்டு நூற்றாண்டிற்கு முன்பு ஆபிரிக்காவில் இருந்து வலுக்கட்டாயமாகக் கட்டி இழுத்து கப்பலில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட மக்கள் அடிமை உழைப்புக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அந்த உழைப்பே மேற்குலகின் செல்வச் செழிப்பிற்கு அடி ஆதாராமாய் அமைந்தது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் எண்பதுகளில் இருந்து அதே மேற்குலக நாடுகளில் நவீன அடிமைகளாக நம்மவர்கள் புலம் பெயர்ந்த தமிழர் என்ற பெயரில் சென்றடைந்தனர். இதில் வடபகுதியின் இளைஞர் யுவதிகள் அதிகமாக இருந்தனர். இவர்களை ஐரோப்பிய ஆட்சியாளர்கள் "பொருளாதார அகதிகள்" எனப் பெயரிட்டு அழைத்ததுடன் அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதிலும் அதிக அக்கறை காட்டினர். தங்களால் செய்ய முடியாத கழிவுத்தனமான வேலைகளுக்கும் கடினமான உடல் உழைப்பு வேலைகளுக்கும் புலம் பெயர்ந்த தமிழர் ஆளாக்கப்பட்டனர். தமிழர்கள் மட்டுமன்றி ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்கப் புலம் பெயர்ந்தோரும் அவ்வாறே வேலை வாங்கப்பட்டனர்.

**வெகுஜனன்**

இத்தகைய புலம் பெயர்ந்த தமிழர்களில் அந்நாட்டு குடியுரிமை பெற்றவர்கள் குறைந்த எண்ணிக்கையினர். ஏனையோர் வதிவிட விசா பெற்று பத்துப் பத்து வருட புதுப்பித்தல் மூலம் வாழத்தொடங்கினர். அவர்கள் பெற்று வந்த சம்பளம் அந்நாடுகளின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்துடன் ஒப்பிடும் போது சிறிய தொகையாகும். ஆனால் குறைந்த வாழ்க்கைத்தர வாழ்வை நடாத்திய புலம் பெயர்தோருக்கு இங்குள்ள பணத்துடன் ஒப்பிடும் போது அந்தச்சம்பளத்தின் பெறுமதி பல மடங்காகக் காணப்பட்டது. அத்தகைய பெறுமதியானது இங்குள்ள குடும்பங்களுக்கும் உறவுகளுக்கும் பெரும் ஆதாரமாக அமைந்தது. இங்குள்ள யுத்த சூழலின் பொருளாதார நெருக்கடியும் பொருட்கள் பெற முடியாத தட்டுப்பாட்டு நிலையிலும் புலம் பெயர்ந்தோர் அனுப்பும் பணம் பெரும் அரவணைப்பாக அமைந்தது. அப்பணப் புளக்கமானது உள்ளுர் உழைப்பில் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வுக்கும் நெல்லுக்கு இறைத்த நீராகிக் கொள்கிறது.

இவ்வாறான புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணமானது வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்பட முடியாத நிலையே காணப்படுகின்றது. அப்பணத்தைக் கொண்டு சில வியாபார வர்த்தக முயற்ச்சிகள் மேற் கொள்ளப்படுகிறது. அதன் பலாபலன்கள் ஒரு சிலரைப் பணக்காரர்களாக்க உதவுகிறதே தவிர சமூக ரீதியான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக இல்லை. 2002ம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தையொட்டி இவ்வெளி நாட்டுப் பணத்தின் புளக்க வெளிப்பாடு வடக்கில் கொடிகட்டிப் பறந்தது. கட்டிடங்கள் புதுப்பொலிவும் விஸ்தரிப்பும் பெற்றன. வாகனங்கள் பெரும் நுகர்வை எட்டின. மிக ஆடம்பரத் திருமணங்களும் திருவிழாக்களும் நடைபெற்றன. இவை வெளிநாட்டுப் பணப்புளக்கத்தை வெளிக்காட்டி நின்றன. அன்று மணியோடர் பொருளாதாரமாகத் திகழ்ந்த வடக்கின் பொருளாதாரம் இன்று மீண்டும் உண்டியல் பொருளாாதாரமாகவே காணப்படுகின்றது. ஆனால் அதனை வடக்கின் பொருளாதார அடித்தளமாகக் கொள்ள முடியாது.

இன்று வடக்கு குடா நாட்டுப் பிரதேசம் வன்னிப்பிரதேசம் என இரண்டு நிர்வாக நிலைகளில் இருந்து வருகின்றது. முன்னையது அரசாங்க- ராணுவக் கட்டுப்பாட்டிலும் பின்னையது புலிகள் இயக்க கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றது. இவ் இரண்டு பிரதேசங்களிலும் விவசாயம் மீன் பிடி பனை தென்னை வள உற்பத்தி ஆகியவைகளே பிரதான பொருளாதார அடிப்படைகளாக காணப்படுகின்றன. ஆனால் இன்று அவை அழிவுற்ற நிலையில் தான் இருந்து வருகின்றன. உப உணவுப் பொருட்களின் உற்பத்தியானது தாராளமயத்தாலும் தெற்கின் சந்தைப்படுத்த இயலாத காரணத்தாலும் சீரழிந்துள்ளன. அவ்வாறே மீன் பிடியும் பழைய நிலையை இழந்து காணப்படுகின்றது. விவசாயம் மீன் பிடியில் ராணுவக் கட்டுப்பாடுகள் நிறையவே காணப்படுகின்றன. அதியுயர் பாதுகாப்பு வலயம் விவசாய நிலங்களிலும் கடற்பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமையால் உற்பத்திகளும் தொழில் முயற்சிகளும் முடக்கப்பட்டு அழிவுற்றுள்ளன.

அவ்வாறே பாடசாலைக்கல்வியும் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வியும் சீர்குலைந்துள்ளன. பல பாடசாலைகள் யுத்த அழிவுகளில் இருந்து மீளவில்லை. கல்விக்கான வளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வெறும் பெயரளவிலான கல்வியே இன்று வடக்கில் இருந்து வருகின்றது. பல்கலைக்கழக கல்வி பேரினவாத உள்நோக்கங்களாலும் கல்வியைச் சீர்குலைக்கும் ஏனைய நடவடிக்கைகளாலும் பாழாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையானது பேரினவாத ஒடுக்குமுறையாளார்களுக்கு திருப்தி தருவதாகவே காணப்படுகிறது. இன ஒடுக்கு முறையின் பிரதான அடிப்படை தேசிய இனங்களின் பொருளாதார அரசியல் கல்வி சமூக பண்பாட்டு நிலைகளை சீர்குலைத்து பலவீனப்படுத்தி அடி பணிய வைப்பதேயாகும். இதற்கான பாதையிலேயே வடக்கு கிழக்கின் குறிப்பாக வடக்கின் பொருளாதார கல்வித் துறைகளில் திட்டமிட்ட அழிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கின் சுய வளங்களை அபிவிருத்தி செய்யக் கூடிய பொருளாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவற்றுக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு யுத்தம் அற்ற அரசியல் தீர்வுச் சூழல் உருவாகவேண்டும். அடுத்து உலகமயமாதலின் நுகர்வுப்பண்பாடு தடுக்கப்பட வேண்டும். இவையே வடக்கில் அழிக்கப்பட்டு வரும் பொருளாதாரத்தை தடுக்க உரிய வழிமுறையாகும்.

# அவசரகாலச்சட்டத்தை நீக்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்

## புதிய ஜனநாயக கட்சி மேதினத்தில் வற்புறுத்தல்

அவசரகாவச்சட்ட விதிகளை உடனடியாக இரத்து செய்ய வேண்டும். தமிழ் சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதனை பிரதான கோரிக்கையாக முன்வைத்து அட்டன் சக்தி மண்டபத்தில் மே முதலாம் திகதி புரட்சிகர மேதினம் நினைவு கூரப்பட்டது.

மே முதலாம் திகதியென்று அழுத்த வேண்டியதன் காரணம் யாதெனில் இவ்வருடம் மே முதலாம் திகதி வெசாக் பண்டிகை யாகையால் அதிகமான மே தினக் கொண்டாட்டங்கள் ஏப்பிரல் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

புதிய- ஜனநாயக கட்சியும், பாட்டாளி வர்க்க புதிய- ஜனநாயக சங்கமும் இணைந்து புரட்சிகர மேதினக் கூட்டத்தை அட்டன் நகரில் நடத்தின.

சிங்கள பௌத்த உணர்வுகளை முதன்மைப்படுத்தி யுத்தத்தை நடத்திவருவது தெரிந்ததேயாகும். மே தினத்தன்று வெசாக் பண்டிகையாகையால் அத்தினத்தன்று மே தின கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுவதற்கு மறைமுகமாக தடை விதிப்பதற்கு பௌத்த மத உணர்வை பயன்படுத்திக்கொள்ள மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் முற்பட்டது. அதற்கு ஜே. வி. பி ஹெல உறுமய என்பன ஆதரவாகும். ஏப்பிரல் 30 ஆம் திகதி மே தினத்தை நடத்த வேண்டுமென முன்மொழிந்து ஜே.வி.பி ஆகும். அதன்படி ஜே. வி. பி அதன் மே தினத்தை ஏப்ரல் 30 ஆம் திகதி நடத்தியது. அரசாங்கத்தில் இருக்கும் இடதுசாரி கட்சிகள் எனப்படுபவை சுதந்திரக்கட்சியுடன் இணைந்து. மே. 30 மே தினத்தை நடத்தின. அரசாங்கத்திற்கு வெளியிலுள்ள இடதுசாரி கட்சிகள் கொழும்பில் மே தினத்தை நடத்தவில்லை. இடதுசாரி தொழிற்சங்கங்கள் மே முதலாம் திகதி கொழும்பில் கூட்டு மே தினத்தை நடத்தின. மலையகப் பெருந்தோட்டத் துறையிலும் 50 இற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருந்தாலும் அவற்றில் சில ஏப்ரல் 29, 30 ஆம் திகதிகளில் மே தினத்தை கொண்டாடின. இ. தொ. கா உட்பட பல தொழிற்சங்கங்கள் மே தினத்தை நடத்தவில்லை.

அந்தவகையில் புதிய- ஜனநாயக கட்சியும் பாட்டாளிவர்க்க புதிய- ஜனநாயக சங்கத்தினதும் புரட்சிகர மே தினக்கூட்டம் முக்கியமானதாகும். அக்கூட்டத்திற்கு பு.ஜ. கட்சியின் தேசிய அமைப்பாளரும் பா.பு.ஜ. சங்கத்தின் தலைவருமான தோழர் இ. தம்பையா தலைமை தாங்கினார்.

பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி அக்குண பத்திரிகைக்காக வேலை செய்த மூன்று (சிங்கள) இளைஞர்கள் கடத்தப்பட்டனர். 6 ஆம் திகதி தொழிற்சங்கங்கள் கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்திற்கு முன்பாக அக்கடத்தல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அவர்களை விடுவிக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கப்போவதாகத் தொழிற்சங்கங்கள் அறிவித்தன. அதனையடுத்து அவர்களை இராணுவம் கைது செய்துள்ளதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டது. ஆனால் அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய சிங்களப்புலிகள் என அறிவித்தது. அவர்களை அடுத் ஸ்ரீது அவர்களுடன் தொடர்புடையவர்கள் என்று பலர் கைது செய்யப்பட்டனர். புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்கள் வீ.மகேந்திரன், சு.சுகேசணன், ரா.ஜெயசீலன், ச. மோகன்ராஜ், சி.கிருஸ்ணப்பிரியன் ஆகியோர் பெப்ரவரி 14, 15 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அவசரகாலசட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் எவ்வித நீதிமன்ற விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தியே புரட்சிகர மேதினத்தில் உரையாற்றிய அனைவரும் வலியுறுத்தினர்.

'அவர்களை கைதுசெய்தமை புதிய- ஜனநாயக கட்சிக்கு எதிரான சதியென்றும் மக்களுடைய ஆதரவுடன் அச்சதியை முறியடித்து அவர்களை விடுவித்த வெகுஜன சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். நாட்டின் ஜனநாயகம் மறுக்கப்படுகின்ற மனித உரிமைகள் மீறப்படுகின்ற தற்போதைய சூழலை மாற்ற யுத்தத்தை நிறுத்தவும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல்தீர்வை வென்றெடுக்கவும் பரந்துபட்ட மக்களினது ஜனநாயக இயக்கம் கட்டப்படவேண்டும் என்று தோழர் தம்பையா அவரது பேச்சில் குறிப்பிட்டார்.

புதிய- ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சி. கா.செந்திவேல் உரையாற்றியபோது "மகிந்த சிந்தனையின் அடிப்படையில் எல்லாவற்றுக்கும் தீர்வு காணப்படும் என்று கூறப்பட்டது. மஹிந்த ராஜபக்ச தொழிலமைச்சராக இருந்த போது தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிசெய்யவென தொழிலாளர் சாசனமொன்றை அறிமுகம் செய்தார். அதனை அவர் கடைசிவரை சட்டமாக்கவில்லை. இன்று ஜனாதிபதியானவுடன் தொழிலாளர் தினத்தை நினைவு கூர்வதற்கு மறைமுகத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண கௌரவமான தீர்வு காணப்படும் என்று குறிப்பிட்டார். ஆனால் இன்று கிழக்கிழங்கையில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக இருக்கின்றனர். இரண்டு தரப்பும் விமானத்தாக்குதல்களை நடத்தும் அளவிற்கு யுத்தம் உக்கரமடைந்துள்ளது. இதனால் மேலும் அழிவுகள் ஏற்படுவதற்கே வழிவகுக்கும். இதனால் இந் நாட்டின் தொழிலாளர்களும் விவசாயிகளும் மேலும் பிளவுபடுவதற்கே வழியேற்படும். நாங்கள் நாட்டு பிரிவினையை ஏற்கவில்லை ஐக்கிய இலங்கையை விரும்புகிறோம் என்பதை அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். அதனால் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் மறுக்கப்படுவதை தமிழ்மக்கள் மீது யுத்த நடத்தப்படுவதை நாளாந்தம் மக்கள் காணாமல் போவதையும் கொலை செய்யப்படுவதையும் கடத்தப்படுவதையும் ஏற்கவில்லை. நியாயமான அரசியல்தீர்வு என்பது வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட அதிகாரப்பங்கீட்டு சுயாட்சிப் பிரதேசமாக இருக்க வேண்டும். அதில் முஸ்லிம் மக்களுக்கென அதிகார அலகு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மலையகத்தமிழ் மக்களுக்கு தனியான அதிகார அலகு அவசியம். தேசிய இனங்களின் தேசிய அபிலாஷைகளையும் சமத்துவத்தையும் ஏற்றுக்கொண்டாலேயே இலங்கையின் ஐக்கியத்தை கட்டிவளர்க்க முடியும். ஆனால் இன்று அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் பேரினவாதிகளின் நடவடிக்கைகளும் நாட் டுப் பிரிவினைக்கு வலுசேர்ப்பதாகவே அமைந்துள்ளது. அத்துடன் யுத்த நிலைமை நீடித்திருக்கும் வரை அந்நிய தலையீடுகளும் ஆதிக்கமும் நீடித்துக் கொண்டே இருக்கும் என்று கூறினார்.

பு.ஜ. கட்சியின் மலையகப்பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான தோழர் ச.பன்னீர்செல்வம் உரையாற்றும் போது ஆயுத ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடாத நாட்டின் பிரிவினையை ஆதரிக்காத எமது கட்சியின் தோழர்களை கைது செய்து தடுத்து வைத்திருப்பதன் நோக்கம் தொழிலாளர்வர்க்க அரசியல் நடவடிக்கைகளின் மீதான அடக்குமுறைகளின் விளைவே ஆகும். இவ்வாறு எமது தோழர்கள் துன்புறுத்தப்படும்போது இளைஞர்கள் அவசரவாதத்திற் குள்ளும் சிறு முதலாளித்துவ வர்க்க நடவடிக்கைகளுக்கும் ஈர்க்கப்பட்டால் அதனை தடுத்து நிறுத்துவது சுலபமல்ல. அதனால் அழிவுகளே மிஞ்சும். பிரதேச சபை மட்டத்தில் மலையகத்தமிழ் மக்களை சென்றடையும் எந்தவொரு வேலையையும் முன்னெடுப்பதற்கு தடையாக இருக்கும் நிர்வாக முறை மாற்ற ப்படவேண்டும். தோட்டங்களை பிரதேசசபை அதிகார எல்லைக்குள் உள்ளடக்கி தோட்டங்களில் கிராமங்களில் போன்று அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பு.ஜ.க.வின் அரசியல் குழு உறுப்பினர் சோ. தேவராஜா பேசும் போது பேரினவாதிகள் தமிழர்களும் சிங்களவர்கள் ஐக்கியப்பட்டு செய்யும் எந்தவொரு சிறிய நடவடிக்கையும் ஜீரணிப்பதாக இல்லை. இன ஐக்கியத்திற்காகவும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காவும் குரல் கொடுப்பவர்கள் இன்று பயங்கரவாதிகள் என்ற பேரில் கைது செய்யப்படுகின்றனர். இந்த அடக்குமுறையை தடுத்து நிறுத்தவும் இனங்களுக்கிடையிலான ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் அவசியம். மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் மட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ. தே. கட்சியும் அதனை சகித்துக் கொள்ளப்போவதில்லை. தமிழ்தேசியவாதிகளும் அதனை உணர்ந்து செயற்படுவது அவசியம். மாற்று அரசியல் வானத்திலிருந்து விழாது. நாமே அதனை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

வெனச அமைப்பின் அமைப்பாளர் வசந்த திசநாயக்க உரையாற்றும்போது இன்றைய சூழ்நிலையில் மாக்சிச லெனினிஸ கட்சியான பு.ஜ. கட்சி பலமான ஸ்தாபனமாக கட்டப்படுவதுடன் அனைத்து தொழிலாளர்வர்க்க சக்திகளையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் 1971, 1988 ஆண்டுகளிலும் இளைஞர்கள் முன்னெடுத்தது போன்று தற்போது சில இளைஞர்கள் செயற்பட்டுள்ளதாக கூறப்படும் விதத்திலும் வடக்கு கிழக்கில் இளைஞர்கள் போராட்டம் போன்றும் சிறு முதலாளித்துவ அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் சரியான தொழிலாளர்வர்க்க செயற்பாடுகளுக்கு பின்னடைவே ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பா.பு.ஜ. சங்கத்தின் செயலாளர். ம. சத்தியமூர்த்தி, காவத்தை மகேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். இக் கூட்டத்தில் பா.பு.ஜ சங்கத்தின் கொடிகளை தோட்டங்கள் தோறும் ஏற்றுவதற்காக தோட்டக்கமிட்டி தலைவர்களுக்கு செங் கொடிகள் வழங்கப்பட்டன.

# சமாதானமும் யுத்தமும் ரணிலின் இரட்டைமுகங்கள்

**இலங்கையின் தற்போதிருக்கும்** மோசமான மனித உரிமைகள் நிலைவரம் பற்றி கவலைப்படுவதாகக் கூறும் ஐ.தே கட்சியின் தலைவரும் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்ஹ தெரிவிக்கிறார். இந்தமோசமான நிலைமை ஏற்படுவதற்கான சட்டரீதியான பாதுகாப்பை கொடுப்பதற்கான அவசரகாலச்சட்ட விதிகள் பாராளுமன்றத்தால் நிறை வேற்றப்படுவதற்கு ஐ. தே. கட்சியும் ஆதரவளித்தது. பின்பு வாக்களிப்பதில் கலந்துகொள்ளவில்லை. இதுவும் ஆதரவளித்தற்கு சமமான நடவடிக்கை ஆகும்.

மனித உரிமைகள் மீறல்பற்றியும் வடக்கு கிழக்கில் அரசாங்கம் மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகள் குறித்தும் பேசும் ரணில் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு தற்போதைய செயலாளர் கோட்டபாய ராஜபக்ச பொருத்தமானவரல்ல என்றும் முன்னாள் இராணுவ தளபதிகளில் ஒருவரான ஜானக பெரேராவே பொருத்தமானவர் என்றும் கூறியுள்ளார். அதாவது யுத்தத்தை நடத்துவதற்கு சிறந்த பாதுகாப்புச் செயலாளர் ஜானக பெரேராவே என்றே ரணில் கூறுகிறார். அதாவது அவரது 2002 ஆம் ஆண்டு சமாதான நடவடிக்கைகளை உச்சரித்துக் கொண்டே இன்னும் சிறப்பாக யுத்தத்தை நடத்த வேண்டுமென்பதே அவரின் நிகழ்ச்சி நிரலாகும்.

கொழும்பு மாவட்ட எம். பி மனோகணேசன் கூட்டிய காணாமல் போன உறவினர்களின் மாநாட்டில் பேசும்போது காணாமல் போனவர்களின் குடும்பங்களின் காப்பாளர் போன்று பேசினார். அன்று மாலையே இன்னொரு இடத்தில் கருத்து தெரிவித்த அவர் யுத்தத்தை ஒழுங்காக நடத்த பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர் கோட்டபாயவிற்கு தகுதி இல்லை என்று தெரிவித்தார். மக்களை அதிகமாக பாதித்த யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தார் என்றும் மிகவும் மோசமான மனித உரிமைகள் மீறல்களுக்கு காரணமானவர் என்றும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ தளபதி ஜனாக பெரேராவை பாதுகாப்பு அமைச்சிற்கான செயலாளராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார் ரணில்.

அண்மையில் ஐரோப்பாவிற்கு சென்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்களை சந்தித்த ரணில் விக்கிரமசிங்கஹ, மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களையும் அவரின் அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கவில்லை என்றும் சாடியுள்ளார். அரசியல் தீர்வை காணவும் யுத்தத்தை கொண்டு நடத்தவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுடன் பேசிய அவர் புலிகள் வான்தாக்குதல் நடத்தியுள்ளதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலை தொடர்பாக இந்தியாவுடனும் ஐரோப்பிய நாடுகளுடனும் பேச வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் மனிதஉரிமை மீறல்கள் பற்றி முறையிடும் ரணில் அவற்றுக்கு எதிராக மக்களை அணிதிரட்டி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத்தயாராக இல்லை. ஐ.தே. கட்சியிலிருந்து பெரும் எண்ணிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதனால் ஐ.தே கட்சி ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து மீள்வதற்காகவே அவர் முயற்சிக்கிறார்.

நாட்டுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க ஐ. தே கட்சியிடமும் எந்தவொரு திட்டமும் இல்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யவும் அதனிடம் எவ்விதத் திட்டமும் இல்லை. ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப சமாதானத்திட்டம் பற்றி ரணில் கதைத்தாலும் உரிமைப்போராட்டங்களை நசுக்கும் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுடன் இலங்கையை இணைப்பதுவே அவரின் நோக்கமாகும்.

ரணிலுக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்பதைத் தவிர வேறெதுவும் நோக்கமில்லை. அந்த நோக்கத்தை அடைய தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் யுத்த வேஷமும் சமாதான வேஷமும் மட்டுமன்றி வேண்டிய அனைத்து வேஷங்களையும் போடுவதற்கு ரணில் கைதேர்ந்தவரே.

ஜனாதிபதி ராஜபக்சவும் ரணிலும் ஏறக்குறைய ஒரே அடிப்படை நிலைப்பாட்டை கொண்டவர்களே ஆவர். ஆனால் அவர்களிடையே முரண்பாடுகள் இருக்கின்றன. அதற்கான காரணங்களும் தெரிந்தவையே. அரசியல் தீர்விற்கான நிகழ்ச்சி நிரலை அந்த முரண்பாடுகளிடையே முன்ன தள்ள முடியுமா என்று பார்ப்பதே சரியானது.

அரசியல் அடக்கு முறைகளும் ஒடுக்கு முறைகளும் காலஞ் செல்ல செல்ல மிகவும் மோசமாகிக் கொண்டே போகும். அதனால் ஒரு காலத்து அடக்கு முறைகளும் ஒடுக்குமுறைகளும் இன்னொரு காலத்து அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் விட வித்தியாசமாக இருக்கலாம். அதற்காக நல்லவை என்றும் கெட்டவை என்றும் அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் ஒருபோதும் வகுப்பாக்கம் செய்ய முடியாது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானது சரியானது என்று கூறியது போன்று ரணில் ஜனாதிபதி ஆவதே சரியானது என்று கூறுவதையும் சிந்திப்பதையும் மாற்றுவதே மாற்று அரசியலுக்கு அடிப்படையாகும்.


"இலங்கை அரசியல் அதிகாரம் சுதந்திரக்கட்சிக்கும் ஐ.தே. கட்சிக்கும் எழுதி கொடுக்கப்பட்டுவிட்டது. அதனை மாற்ற முடியாது மாற்றக்கூடாது. அவற்றில் ஒன்றை தெரிவு செய்வது மட்டுமே மக்களுக்குள்ள உரிமை அல்லது கடமை. அவற்றில் ஒன்றை ஆட்சியில் நிறுத்தி அவற்றில் ஒன்றிடமே தமிழ்மக்களின் உரிமைகள் பற்றி பேச வேண்டும்" என்பதெல்லாம் பழைய பிற்போக்கான அரசியல் சிந்தனையாகும். இதனை மாற்றுவதற்கான மூன்றாவது அரசியல் வழிமுறைகள் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



மேதினம்

# தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சிக்கு கரங்கரை விளக்கம்



மேதினம் உலகத் தொழிலாளி வர்க்கத்தினாலும் அடக்கி ஒடுக்கப்படும் அனைத்து மக்களாலும் புரட்சிகர நாளாக நினைவு கூர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. 1880– 90களிலான பத்தாண்டுகளில் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் நடாத்திய எட்டு மணி நேர வேலை கோரிய போராட்டங்களின் நினைவாகவே மே முதலாம் திகதி முழு உலகிலும் கொண்டாடப்படுகிறது. புரட்சிகர வழிகளிலான எழுச்சியாக நினைவு கூரப்படுகின்றது. எட்டு மணிநேர வேலை என்ற கோரிக்கையை அமெரிக்க தொழிலாளர்கள் சார்பாக தொழிற்சங்கங்கள் முன்வைத்து வந்தன. ஆனால் அமெரிக்க முதலாளி வர்க்கம் அதனை மறுத்து வந்தது. 16, 14, 12, 10 மணி நேர வேலை வாங்குவதில் முதலாளிகளும் தொழிற்சாலை நிர்வாகங்களும் முன்னின்று தொழிலாளர்களைச் சுரண்டி சூறையாடி வந்தன.
1885ல் தொழிலாளர் கூட்டமைப்பு மாநாடு அடுத்த ஆண்டு 1886 மே முதலாம் திகதி எட்டு மணி நேர இயக்கத்திற்கான வேலை நிறுத்தத்தில் ஈடுபட அழைப்பு விடுத்தது. இவ் அழைப்பை அதிகப்படியான தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் ஏற்று எட்டு மணி நேர வேலை கோரிய போராட்டத்தில் இறங்கின. அதன் எண்ணிக்கை 11, 562 அமைப்புகளாக இருந்தன. மொத்தம் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் 1886 மே முதலாம் திகதி போராட்டத்தில் இறங்கினர்.

இவ் எட்டுமணிநேர வேலை கோரிய போராட்டத்தின் மையமாக சிக்காகோ நகரம் விளங்கியது. அதேவேளை நியூயோர்க், பால்டிமோர், வாஷிங்டன், மில்வாக்கி, சின்சிநாட்டி, செய்ன்ட் லூயிஸ், பிட்ஸ்பர்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களிலும் வேலை நிறுத்தங்கள் மிகவும் தீவிரத்துடன் இடம் பெற்றன. இருப்பினும் சிக்காகோ தொழிலாளர்களின் வேலை நிறுத்தமானது போர்க்குணத்துடன் முன் சென்றது. இதனை முதலாளி வர்க்கம் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தனது ஒடுக்கு முறை யந்திரமான பொலிஸ் படை மூலமான கொடூர செயல்பாடுகளினால் அடக்க முற்பட்டது. பல தொழிலாளர்கள் மோசமான தாக்குதல்களுக்கு ஆளானார்கள். பலர் கைது செய்யப்பட்டனர். இதன் காரணமாக மே இரண்டாம் மூன்றாம் திகதிகளில் மேலும் வேலை நிறுத்தங்கள் விரிவடைந்தன. வீதி ஆர்ப்பாட்டங்களாகவும் கூட்டங்களாகவும் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய தொழிலாளர் போராட்டங்கள் மீது பொலிஸ் நடாத்திய அடாவடித்தனங்களையும் தாக்குதல்களையும் கண்டித்து மே நான்காம் திகதி சிக்காகோ நகரின் ஹே மார்க்கட் என்னும் வைக்கோல் சந்தை வளாகத்தில் தொழிலாளர்களின் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

அமைதியான சூழலில் நடைபெற்ற அக் கூட்டத்தின் மீது பொலிஸ் குண்டெறிந்து கொண்டது. ஆனால் பழி முழுவதும் தொழிலாளர் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டது. எறியப்பட்ட குண்டு ஒரு ராணுவ அதிகாரியைப் பலி கொண்டது. அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மோதலில் ஏழு பொலீஸ்காரர்களும் நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர். பலர் காயங்கள் பட்டனர். செங்குருதியில் தொழிலாளி வர்க்கம் தனது எட்டு மணி நேரக் கோரிக்கையை மேலும் உயர்த்தி நின்றது. நான்கு தொழிலாளர் தலைவர்கள் தூக்கு மேடையில் வீரத்தியாகிகள் ஆகினர். சிலர் ஆயுள் தண்டனை பெற்றனர். ஆனால் அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் இத்தகைய கொடிய அடக்கு முறையால் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் எட்டு மணி நேர வேலைக்கான இயக்கத்தை முறியடிக்க முடியவில்லை. 1888ம் 89ம் ஆண்டுகளில் இப்போராட்டம் விரிவடைந்ததுடன் 1890ல் உலக அளவில் மே மாதம் முதலாம் திகதி எட்டுமணி நேர வேலைக்கான போராட்ட நாளுமாகியது. 1891ம், 92ம் ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணத்துடனான போராட்டம் மே முதலாம் திகதிகளில் பல்வேறு நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டன.
1893ல் இரண்டாவது அகிலத்தின் மாநாடு சூரிச்சில் நடைபெற்றது. அதில் மாக்சிச ஆசானக்கில் ஒருவரான ஏங்கல்ஸ் கலந்து கொண்டார். அவரது தலைமையில் பின் வரும் தீர்மானம் நிறை வேற்றப் பட்டது. "உழைக்கும் வர்க்கத்தின் பிரதான விருப்பம் சமூக மாற்றத்தின் மூலம் வர்க்க வேறுபாடுகளை அழித்தொழிப்பதும் மற்றும் உலகம் பூராவும் எல்லா மக்களுக்கும் அமைதியை ஏற்படுத்துவதுமாகும். மேதின ஆர்ப்பாட்டங்கள் எட்டுமணி நேர வேலைக்காக மட்டுமன்றி மேற் கூறிய விஷயங்களுக்கும் பயன்படவேண்டும்." மேலும் இம் மாநாடு முதலாளித்துவச் சுரண்டல் அடிமைத்தனம் வர்க்க வேறுபாடுகள் ஆகியவற்றை அழித்தொழிப்பதற்கான போராட்ட நாள் என பிரகடனம் செய்தது. அந்தப் பிரகடனம் இன்றுவரை ஒவ்வொரு நாடுகளினதும் தொழிலாளர்கள் அடக்கியொடுக்கப்பட்ட மக்களால் புரட்சிகர மேதினமாக முன்னெடுக்கப் பட்டும் வருகின்றது. அதேவேளை அமெரிக்க முதலாளி வர்க்கம் தமது கைக் கூலி தொழிற்சங்க அமைப்பின் மூலம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. "கம்யூனிஸ்டுக்கள் மேதினத்தை தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் மே முதல் நாளை குழந்தைகள் தினமாகக் கொண்டாட வேண்டும். இனிமேல் மே முதல் நாளானது கம்யூனிஸ்டுகளின் தினமாகவோ தொழிலாளர்களின் போராட்ட தினமாகவோ கொள்ளப்படக் கூடாது" எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு தான் உலகின் ஒவ்வொரு முதலாளித்துவ பிற்போக்கு வாதிகளும் ஆளும் வர்க்கமும் மேதினத்தை கேளிக்கை நாளாக்கியும் பிரார்த்தனை நாளாகவும் திசைதிருப்பி வருகின்றனர். இலங்கையில் முன்பெல்லாம் மே தினம் அதற்குரிய புரட்சிகரப் போர்க்குணத்துடன் நினைவு கூரப்பட்டது. ஆனால் இன்று பிற்போக்குத்தனங்களுக்கும் பேரினவாதத்திற்கும் மேதினம் பலியிடப்பட்டு விட்டது. பாராளுமன்ற இடதுசாரிகளும் என். ஜி. ஓ பணத்தை விழுங்கி நிற்கும் இடதுசாரிகளும் மே தினத்தை விலைபேசி விற்று விட்டனர்.
ஆனால் இந் நிலை அதிக காலம் நிலைத்து நிற்க முடியாது. இந் நாட்டின் தொழிலாளர்களும் விவசாயிகளும் அடக்கப்படும் தேசிய இனங்களும் மே நாளினைத் தமக்குரிய புரட்சிகர எழுச்சி நாளாக கொண்டாடும் நாள் விரைவில் வந்து சேரும். அதற்கு கட்டியம் கூறும் வகையில் மாக்சிச லெனினிச வாதிகளும் புரட்சிகர சக்திகளும் மேதினத்தை புரட்சிகர நாளாக முன்னெடுத்து வருகின்றனர்.

# மே தினம்குறித்து தோழர் லெனின்



மே தினத்தை ஒர ஆர்ப்பாட்ட மிக்க போராட்ட தினமாக ரஷ்ய தொழி லாளர்களுக்கு லெனின் தன்னு டைய ஆரம்பகால ரஷ்யப் புரட்சி இயக்க நடவடிக்கையின் போதே அறியச் செய்தார். செயின்ட் பீட்டர் ஸ்பர்க் தொழிலாளர் விடுதலைப் போராட்ட சங்கம் என்பது ரஷ்யாவில் இருந்த ஒரு மார்க்சிய அரசியல் குழு. இந்த சங்கத்துக்காக 1896 ஆம் ஆண்டு லெனின் சிறை யில் இருந்தபோது மே தின துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதினார். அந்தப் பிரசுரம் சிறையிலிருந்து வெளியே கடத்தப்பட்டு 200 பிரதிகள் எடுக்கப்பட்டு 40 தொழிற்சாலைகளில் தொழிலாளர்களி டையே விநியோகிக்கப்பட்டது. அந் தப் பிரசுரம் மிகவும் சுருக்கமாக லெனினுக்கே உரிய நேரிடையான மற்றும் எளிமையான முறையில் சாதாரண தொழிலாளியும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுத ப்பட் டது. "பிரசுரம் வெளிவந்த ஒரு மாதத்திற்குப் பின் வெடித்தெழுந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின்போது. எங்களுக்கு இந்த வேலை நிறுத்தத் துக்கான ஆரம்ப உத்வேகத்தைத் தந்ததே அந்தச் சிறிய மேதினப் பிரசுரம்தான்" என்று தொழிலாளர்கள் சொன்னதாக அந்த பிரசுரத்தை விநியோகித்த லெனினின் சம காலத்தவர் ஒருவர் கூறியுள்ளார். தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்யும் முதலாளிகளின் நலனுக்காக எங்ஙனம் சுரண்டப்படுகிறார்கள் என்பதையும், தங்களின் நிலையில் முன்னேற்றத்தைக் கோருபவர்கள் எவ்வாறு அரசாங்கத்தால் தணிக்கப்படுகிறார்கள் என்பதையும் சொல்லிய பிறகு மே தினத்தின் முக்கியத்துவம் குறித்து லெனின் எழுதுகிறார்.
"பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மன் நாட்டுத் தொழிலாளர்கள் ஏற்கனவே வலுவான சங்கங்களின் கீழ் அணிதிரண்டு தங்களின் பல உரிமைகளை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் ஏப்ரல் 19 (மே 1. ரஷ்ய நாட்காட்டி மேற்கு ஐரோப் பிய நாட்காட்டியைவிட 13 நாட்கள் பிந்தியது) அன்று பொது வேலைநிறுத்த நாளாக அனுஷ்டித்தார்கள். காற்றுவசதியற்ற தங்கள் தொழிற்சாலைகளை விட்டு விரிந்த பதாகைகளுடன் தொழிலாளர்கள் தெருவிலே இறங்கினர். முதலாளிகளுக்கும் அவர்களின் வளர்ந்து வரும் சக்திக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இசைக்கு ஏற்ப நகரங்களின் முக்கிய வீதிகள் வழியே அணி வகுத்துச் சென்றனர். மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஒன்றுகூடினார்கள். அங்கே அவர்கள் முதலாளிகளுக்கு எதிராகக் கடந்த ஆண்டு தாங்கள் பெற்ற வெற்றிகளையும், வருங் கால போராட்டத்திற்கான திட்டங்களைக் குறித்தும் பேசினார்கள். இந்த வேலைநிறுத்தத்தின் அச்சுறுத்தல் காரணமாக தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழிற்சாலைகளுக்கு அன்று வராத தற்காக அபராதம் விதிக்கக் கூடிய துணிவு அவர்களின் முதலாளிகளுக்கு இல்லை. அந்த நாளில் தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளிடம் தங்களின் முக்கிய கோரிக்கையான 8 மணி நேர வேலை 8 மணி நேர ஒய்வு 8 மணி நேரப் பொழுதுபோக்கு என்பதை நினைவுபடுத்தவும் தவற வில்லை. இதைத்தான் மற்ற நாட்டு தொழிலாளர்களும் தற்போது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்."
ரஷ்யப் புரட்சி இயக்கம் மே தினத்தை பெருமளவில் பயன்படுத்திக் கொண்டது. 1900 ஆம் ஆண்டு நம்பரில் பதிப்பிக்கப்பட்ட 'கார்கோவில் மே தினம் என்ற பிரசுரத்தின் முன்னுரையில் லெனின் பின்வருமாறு எழுதுகிறார். "இன்னும் ஆறு மாதத்தில் ரஷ்யத் தொழிலாளர்கள் தங்களின் புதிய நூற்றாண்டின் முதலாண்டு மே முதல் நாளைக் கொண்டாடுவார்கள். எத்தனை இடங்களில் முடியுமோ அத்தனை இடங்களில் மே தினத்தை சிறப்பாக விரிவாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இதுதான் நேரம். மே தின நிகழ்ச்சியில் பங்கு கொள்வது எத்தனை பேர் என்பது முக்கியமல்ல. பங்கு கொள்பவர்கள் வெளிக்காட்டும் ஸ்தாபனக் கட்டுப்பாட்டு உணர்வும், வர்க்க உணர்வும் ரஷ்ய மக்களின் அரசியல் விடுதலைக்கான ஒடுக்க முடியாத போராட்டத்திற்கு அவர்கள் காட்டும் உறுதியும் தான் முக்கியமானது. இதன் விளைவாக பாட்டாளி வர்க்க வளர்ச்சிக்கான வசதியான சந்தர்ப்பமும் சோஷலிஸத்திற்கான வெளிப்படையான போராட்டமும் வளரும்."
மே தின ஆர்ப்பாட்டங்கள் குறித்து ஆறு மாதங்கள் முன்னமேயே கவனத்தை இழுத்திருக்கிறாரென்றால் அதை லெனின் எவ்வளவு முக்கியமானதாகக் கருதியிருக்கிறார் என்பது தெளிவாய் தெரிகிறது. லெனினுக்கு மே தினம் என்பது "ரஷ்ய மக்களின் அரசியல் விடுதலைக்கான அடக்கமுடியாத போராட்டத்திற்கும் பாட்டாளி வர்க்க மேம்பாட்டிற்கும் சோஷலிஸத்திற்கான வெளிப்படையான போராட்டத்திற்கும் மக்களை அணி திரளச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பம் ஆகும்."
மே தின விழாக்கள் எங்ஙனம் ஒரு மாபெரும் அரசியல் ஆர்ப்பாட்டமாக மாறும் என்று பேசுகையில் 1900 ஆம் ஆண்டு கார்கோவ் மே தின விழா எப்படி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வியாக மாறியது என்ற கேள்விக்கு லெனின் பின்வருமாறு பதிலளிக்கிறார். "வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட பெருந்திரளான தொழிலாளர்கள் தெருக்களிலே நடந்த மாபெரும் வெகுஜனக் கூட்டங்கள் செங்கொடிகள் செம்பதாகைகள் கோரிக்கைகள் அடங்கிய பிரசுரங்கள் அவற்றின் புரட்சித்தன்மை, எட்டு மணி நேர வேலை நாள், அரசியல் விடுதலை இவைகள் தான்."
கார்கோவ் கட்சித் தலைவர்கள் 8 மணி நேர வேலைநாள் கோரிக்கையோடு சாதாரண வெறும் பொரு

தொடர்ச்சி 13ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 12

பேராசிரியர் சி. சிவசேகரம்

## காதலும் திருமணமும்

திருமணம் என்பது ஒரு சமூக ஏற்பாடு காதல் என்பது இருவருக்கு இடையிலான நேசம். திருமணம் என்பது குடும்பம் என்ற ஏற்பாடு உருவான பின்னரே படிப்படியாக ஒவ்வொரு சமூகத்திலும் நிலை பெற்றது. காதல் என்பது இயல்பான மனநிலை சார்ந்த விடயம். காதல் என்பது தெய்வீகமானதோ புனிதமானதோ புறவுலகிற்கு அப்பாற்பட்ட சிந்தனைகளால் உருவமைக்கப்பட்ட ஒன்றோ அல்ல. யார் எவ்வாறு முயன்றாலும் அதில் உடல் சார்ந்த பாலியல் வேட்கைகளின் அடிப்படையான பங்கை மறுதலிக்க இயலாது. எனினும் வெறித்தனமான இச்சைக்கும் காதலுக்கும் வேறுபாடு உண்டு. ஏனெனில் முன்னையதில் வெறுமனே ஒரு வேட்கையைத் தனிப்பதற்கு மேலாக வேறு எதுவும் இல்லை.

குடும்பம் என்பதிலிருந்து திருமணம் என்கிற சடங்கு உருவானதன் காரணம் சமூகத்தில் ஆணை முதன்மைப்படுத்தும் தன்மை மேலும் இறுக்கம் பெற்மையேயாகும். வெகு சில சமூகங்கள் விலக்காக ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண் என்பது விதியாகவும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பது பொதுவாக விரும்பத்தக்க நடத்தையாகவும் உள்ளன. இதில் முதற் பகுதி ஆணாதிக்கத்தின் தெளிவான வெளிப்பாடு மற்றது ஒரு சமூகத்தின் உறுதிப்பாட்டிற்குத் தேவையானமையாற் காலப்போக்கில் உருவானது. முன் குறிப்பிட்ட விலக்குக்கள் போக ஏனைய சமூகங்களில் ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் பாலியல் உறவு வைத்திருப்பது கடுந் தண்டனைக்குரிய குற்றமாயிருக்கும். அதே வேளை ஒரு ஆண் பல பெண்களுடன் பாலியல் உறவு வைத்திருப்பது பல இடங்களில் ஏற்கப்பட்ட நடத்தையாகவும் விரும்பத்தக்கதான சூழ் நிலைகளிற் கூடப் பெரும்பாலும் மன்னிக்கக் கூடியதாகவோ கவனிப்பில் எடுக்கப்படாததாகவோ இருக்கிறதைக் காணலாம். இவ்விதமான ஆண்-பெண் உறவைக் காதல் என்ற வகையினதாக ஒரு சமூகம் கருதுவது அருமை. இது திருமணமும் காதலும் புனிதப்படுத்தப்பட்டதன் விளைவுகள் என்றே நினைக்கிறேன்.

பெண்ணைப் பொறுத்த வரையில் பொதுவாகவே திருமணமும் காதலும் நிரந்தரம் என்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்றன. திருமணத்தை நிரந்தரமாக்குவது சமூகங்கட்கு இயலுமானது. எனினும் காதலை நிரந்தரமாக்குவது இயலாதது. இருவரிடையிலான நேசம் குடும்ப வாழ்க்கையின் வழிப்பட்ட தொடர்ச்சியான உறவாடல் மூலம் வலுப்படத் தவறி நாளடைவில் வலுவிழந்து இல்லாமற் போகவும் இயலும். காதலின் இடத்திற் கடும் பகை கூட வந்து சேரலாம். இவ்வாறான நிலைமைகளில் மணமுறிவுக்கான உரிமை சம்பந்தப்பட்டோரின் தனிப்பட்ட நன்மைக்கும் குழந்தைகள் இருந்தால் பொதுவாக நாம் நம்புவதற்கு மாறாகக் குழந்தைகளின் நன்மைக்கும் ஏற்றது. எனினும் குடும்பத்தைத் தனது அடிப்படையான ஒரு அலகாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பிற் குடும்பங்களின் சிதைவு சமூகத்தின் சீரழிவுக்கு வழி செய்யலாம் என்பதால் குடும்ப அமைப்பைக் காப்பாற்றுகிற முயற்சிகள் சமூகத்தின் பலவேறு மட்டங்களிலும் மேற் கொள்ளப்படுகின்றன.

நிலவுடைமைச் சமூகத்தின் வளர்ச்சியோடு ஒட்டி உறுதி கண்டு நிலவுடைமைச் சமூகச் சிந்தனையின் பிரிக்க முடியாத பகுதியாக இருந்து வந்த திருமணம் குடும்பம் என்கிற அமைப்புக்கள் முதலாளியத்தின் வருகையோடு மெல்ல மெல்ல ஆட்டங்கண்டு எல்லாவற்றையும் விற்பனைக்குரியனவாகக் கருதுகிற முன்னேறிய முதலாளியச் சூழலில் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. திருமணம் செய்யாமலே ஒன்றாக வாழுதல் திருமணமானவர்கள் குறுகிய காலத்திலேயே பிரிதல் ஒருவர் அடுத்தடுத்துப் பல முறை திருமணஞ் செய்தல் என்பன இன்று மேற்கின் முதலாளியச் சூழலில் ஏற்கப்பட்ட நடத்தைகளாகி விட்டன. இவை முதலாளிய சமூகத்தின் விளைவான சிக்கல்கள். இவ்வாறான போக்குக்கள் நிலவுடைமைச் சமூகச் சிந்தனையினின்று இன்னமும் சரியாக விடுபடாத ஆசிய முதலாளியச் சமூகங்களிலும் தன் பாதிப்பைச் செலுத்தக் காணலாம். அவற்றின் சரி பிழைகளை அவை நிகழும் சமூகச் சூழலிலிருந்து பிரித்து மதிப்பிடுவது சரியாகாது. எனினும் நமது விழுமியங்கள் நாம் பழக்கப்பட்ட சமூகச் சூழலின் சிந்தனையின்றும் நடைமுறையின்றும் எளிதில் விடுபடுவதில்லை என்பதையும் ஏற்றாக வேண்டும்.

நமது பண்பாட்டிற் காதலும் திருமணமும் பற்றி நாம் கொண்டிருக்கும் பார்வை என்னவென்று சிறிது பார்ப்போம். கற்பியல், களவியல் என்றும் வேறுபட்ட காதல் மனநிலைகள் பற்றியும் தமிழ் மரபு கூறுகிறது. திருமணச் சடங்குகள் பற்றிய விவரணங்கள் தமிழ்ச் சங்க இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரக் காலத்தில் அவை வந்து விட்டன. என்றாலும் இன்றைக்கு இருக்கிற சடங்குகளுக்கும் பழந் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தவற்றுக்கும் ஒற்றுமைகள் அதிகம் இருக்க இடமில்லை. எப்போது திருமணம் என்பது மதத்தின் வழிப்பட்ட சடங்காகவும் ஒரு சமூக நிகழ்வாகவும் உருப்பெறத் தொடங்கியதோ அப்போதே சுதந்திரமான காதல் என்பது இயலாத ஒன்றாக மாறத் தொடங்கியிருக்கும். ஏனெனில் இருவரது விருப்பு வெறுப்புக்கட்கும் அப்பாற்பட்டுப் பலரது விருப்பு வெறுப்புகளால் திருமணம் தீர்மானிக்கப்படுகிறது. குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கிற காலம் நெருங்கியபோது திருமணத்தில் தெரிவு தம்பதிகளை விட மற்ற எவரிடமும் இருக்கக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டு விட்டாலும். குழந்தைகளின் திருமணம் சட்ட விரோதமான பின்பும் தென்னாசியச் சமூகத்தின் கணிசமான ஒரு பகுதி இந்த நிலையிலிருந்து விடுபட வில்லை. இவ்வாறு நிலவுடைமைச் சமூகங்களின் சொத்துரிமைப் பிரச்சனைகள் திருமணத்தின் மீது வலுவான கட்டுப்பாடுகளைத் திணித்து வந்துள்ளன.

திருமணங்கள் எல்லாமே விருப்பத்திற்கு இடமின்றியோ காதலுக்கு இட மின்றியோ நடந்திருக்கத் தேவையில்லை. எனினும் குறிப்பிட்ட குடும்ப சமூக வரையறைகட்கு வெளியே மணமாகாத வயது ஆணும் பெண்ணும் சந்திக்கிற வாய்ப்பு மறுக்கப்படுகிறது. வர்க்கம் என்பதற்கு மேலாகச் சாதி என்பது இன்னொரு கட்டுப்பாடாக அமைகிறது. எனவே காவியங்களிலும் இலக்கியங்களிலும் காதலாகவும் சுயம்வரம் போன்று பெண்களின் சுயாதீனமான தெரிவுகளாகவும் காட்டப்படுவனவும் உண்மையில் மிகவும் வரையறுக்கப்பட்ட தெரிவுகளே அல்லாமல் முழுமையான சுதந்திரமான தெரிவுகளல்ல.

கொலனியத்தின் வருகையையடுத்து முதலாளிய உற்பத்தி உறவுகள் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டாலும் நிலப்பிரபுத்துவ சமுதாயச் சிந்தனைகளிலிருந்து நமது சமூகங்கள் விடுபடவில்லை. எனவே திருமணங்கள் பெருமளவும் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அல்லது ஏற்கக் கூடிய சமூக எல்லைகட்கு உட்பட்டவாறு நடைபெறுகின்றன. இந்த எல்லைகள் கொஞ்சம் விரிவு கண்டுள்ளன என்பது உண்மை. எனினும் தமிழரிடையே வர்க்கம், பொருள்வசதி, சாதி என்பன திருமணத்தைத் தீர்மானிப்பதில் இன்னமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நகரச் சூழலில் இவ்வாறான எல்லைகளை மீறிக் காதல் என்ற அடிப்படையிலும் பிற தகுதிகளின் அடிப்படையிலும் திருமணங்கள் நடக்கின்றன. ஆனால் அவை சமூக வேறுபாடுகளைத் தகர்ப்பதற்கு மாறாக அவற்றை உள்வாங்கிக் கொள்கிற தன்மையையும் நாம் காணலாம்.

> **கொலனியத்தின் வருகையையடுத்து முதலாளிய உற்பத்தி உறவுகள் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டாலும் நிலப்பிரபுத்துவ சமுதாயச் சிந்தனைகளிலிருந்து நமது சமூகங்கள் விடுபடவில்லை.**

வேறுபட்ட வர்க்கம் அல்லது சாதியைச் சேர்ந்த இருவர் மண முடிக்கும் போது இரு குடுபத்தினரும் சாதியச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டவர்களாக இல்லாதபோது தம்பதிகள் இரண்டு குடும்பங்களையும் இணைக்கிற சமூகப் பாலமாக அமைய இயலாது போகிறது. எனவே இரண்டு சமூக அடையாளங்களில் ஒன்றிற்குள் அவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். நவீன முதலாளியச் சூழலில் அவர்கள் வேறொரு அடையாளம் பெறலாம். நமது சூழல் அப்படியானதல்ல.

இத்தனை நடைமுறைப் பிரச்சனைகளும் இடையூறுகளும் இருந்தும் காதல் எவ்வாறு சாதி, மதம், மொழி, இனம் ஆகிய எல்லைகளை எல்லாம் தகர்த்து வெற்றி கொள்ளுகிறது என்பது பற்றிய புனைவுகளை நாம் இலக்கியங்களிலும் நாடகங்களிலும் அனைத்திலும் மேலாகச் சினிமாவிலும் காணுகிறோம். ஆனாற் "காதலில் வெற்றி- திருமணம்" என்பதற்கு அப்பால் இந்த விதமான புனைவுகள் போவதில்லை. அவை உருவாக்கும் மனோரதியக் கனவுகளால் அதற்கப்பால் ஒரு அடி எடுத்து வைக்க இயலுவதில்லை. அதிலும் முக்கியமாக இள நெஞ்சங்களைக் கனவுகளில் ஆழ்த்திக் காசு சம்பாதிக்க மட்டுமே அவை உதவும்.

எவ்வாறாயினும் சமூக வேறுபாடுகளை மீறிக் காதலித்துத் திருமணம் செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களது காதலின் வெற்றி காதலுக்காகச் சாதிமத இன வேறுபாடுகளைக் கடந்து போவதுடன் நிற்குமாயின் அது அவர்களது காதலின் வெற்றியாக அமையலாம். அது சமூக வேறுபாடுகட்கு எதிரான வெற்றியாகிவிடாது.

சமூக வேறுபாடுகளைச் சொல்லிலும் செயலிலும் நிராகரித்து வாழக்கூடிய இருவரது காதலும் திருமணமும் சமூக மாற்றத்திற்கான வலிய கருவிகளாக அமைய வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட காதல்களைத் தேச விடுதலை சமூக விடுதலை போன்ற போராட்டச் சூழல்கள் உருவாக்கியுள்ளன.

காதலும் திருமணமும் சமூகச் சார்பான சமூக வரையறைகட்குட்பட்ட விடயங்கள் என்பது யதார்த்தமானது. ஆனாலும் சமூகத்தின் மரபுவாத வற்புறுத்தல்கட்குப் பணிந்து போகாமல் சமூகச்சார்பான முறையில் சமூகத்தை முன்னோக்கிய திசையில் உந்திவிடுகிற விதமாகவும் அவை அமைய இயலும். "காதல் இல்லையேல் சாதல்" என்பதும் ஒருவரை நினைத்த மனதில் இன்னொருவருக்கு இடமில்லை என்பதும் மனித இருப்பயும் மனித மனதையும் சரிவர விளங்கிக் கொள்ளாத மயக்கமான சிந்தனைகள். காதல் என்பது வாழ்வைப் பற்றியதும் ஒற்றுமையும் போராட்டமும் என்ற வகையிற் சமூகத்துடன் சேர்ந்து செயற்படுவதைப் பற்றியதும் என்பது சமூகப் பயனுள்ள நல்வாழ்விற்கான சிந்தனை.

காதலைக் கனவுலகிலிருந்து யதார்த்த உலகிற்கு மீட்டெடுக்கும் பணி நம்முன் குறிப்பாக இளைய தலைமுறையினர் முன் உள்ளது.

## பெண்கள் பற்றி

எமது நாடுகளில் மத்தியதர வர்க்க, பூர்ஷவா மனப்பான்மை யோடு சில பெண்கள் பொது வாழ்க்கையில் புகழோடு விளங்கு கின்றனர். ஆனால் இது "பாரதப் பெண்குலம்" முழுவதற்கும் பொருத்துமா? "நல்லவர்கள் வாழ்வதில்லை நானிலத்தின் தீர்ப்பு" என்றார் விந்தன். யார் இந்த நானிலம்? பண்டைக் காலத்தில் உலகம் என்ற ஆகுபெயர் உயர்ந்தோரைக் குறிக்கும் என்றனர். விந்தன் குறிப்பிடும் 'நானிலத்தவர்' சமூகத்தின் உயர் தளங்களில் வாழ்பவர்களா? நல்லோரை நாடிப் போற்றுபவர் இல்லையா? அவர்களை யார், எதற்காகச் சாகடிக்கிறார்கள்? இவையும் சிந்திக்க வேண்டியன.

இறுதியாக ஒன்று கூறலாம். எமது நவீன எழுத்தாளரில் பெரும்பகுதியினர் சமூகத்தின் பெண்கள் பிரச்சனை பற்றி அகல்யாக்களின் அவல நிலை பற்றி என்ன தான் கூறியபோதும் இறுதியில் பெண்களையும் உள்ளடக்கிய பொதுவான- சமுதாய மாற்றத்தின் பயனாகவே உண்மையான பெண் விடுதலை கிடைக்கும். கடந்த பல நூற்றாண்டு காலமாக- அரசியல் அதிகாரம் அம்ச (குல) அதிகாரம், மத அதிகாரம், ஆண் (கணவன்) அதிகாரம் ஆகிய நான்கு வகையான அதிகார ங்களுக்கும் ஆட்பட்டவர்களாய்ப் பெண்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இவற்றில் சில நவீன காலத்தில் பலவீனமுற்றி ருக்கிறன. எனினும் பௌதிக முறையிலும் கருத்து முறையிலும் நிலப்பிரத்துவ- முதலாளித்துவ சித்தாந்தங்கள் இவற்றை ஆதரிக்கவே செய்கின்றன. மேற் கூறிய அதிகாரங்களில் சில ஆண்மைகளையும் உட்படுத்துகின்றன. மேற் கூறி அதி காரங்களில் சில ஆண்களையும் உட்படுத்துகின்றன. எனவே ஆணும் பெண்ணும் யாவரும் சேர்ந்து இவ்வதிகாரங்களுக்கு ஆதாரமான சமுதாய அமைப்பைத் தகர்த்தெறியும் பொழுதான் பெண் விடுதலையும் கிடைக்கும். அது வாய்ப்பேச்சாலன்றிப் போராட்டத்தினாலேயே.

பேராசியர் க. கைலாசபதி
அடியும் முடியும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கை விழுங்க நிற்கும் பேரினவாத ஒடுக்குமுறை

“கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்து தமிழ் மக்களை அவர்களது பிடியில் இருந்து விடுவித்து விட்டோம். இன்னும் சிறு பகுதி மட்டுமே உள்ளது. அதே போன்று வடக்கையும் மீட்டு அனைத்து தமிழ் மக்களையும் விடுவிப்போம். அதற்கான ராணுவ நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும்.” இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அண்மையில் பொது வைபவமொன்றில் உரையாற்றும் போது கூறியுள்ளார். யுத்த நிறுத்தத்தின் ஊடான பிரகடனப்படுத்தாத யுத்தத்தின் இலக்கு முதலில் கிழக்காவே இருந்து வந்துள்ளது. அதன் அடிப்படையில் ராணுவத் தாக்குதல்களும் நகர்வுகளும் மட்டக்களப்பிலிருந்து வடக்கு நோக்கியும் பின்பு மேற்கு நோக்கியும் முன்னெடுக்கப்பட்டன. அதன் மூலம் ஏறத்தாள இரண்டு லட்சம் வரையான மக்கள் வாழ்விடம் இழந்து அகதிகளாக்கப்பட்டனர். ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சம்பூர் போன்ற பிரதேசங்களில் இருந்து ராணுவ தாக்குதல் நகர்வினால் தமிழ் முஸ்லீம் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறி அகதிகளாகினர். இவ்வாறு கிழக்கில் கடந்த ஒரு வருடகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள ராணுவ நடவடிக்கைகள் தொடர்ச்சியாக கிழக்கை பேரினவாதம் விழுங்கிக் கொள்ள எடுத்த மற்றொரு கட்ட



செயற்பாடு என்றே கொள்ளுதல் வேண்டும்.

கிழக்கைக் கபளீகரம் செய்து பௌத்த சிங்கள பேரினவாத ஆதிக்கத்தினால் விழுங்கிக் கொள்ளவதென்பது இன்று நேற்று திட்டமிடப்பட்ட ஒன்றல்ல. 1940துகளின் ஆரம்பத்திலிருந்தே கிழக்கை தமிழர்களிடமிருந்து இனமொழி மத அடிப்படையில் அபகரித்துக் கொள்ளும் திட்டங்கள் தீட்டப்பட்டன. அதன் சூத்திரதாரி இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா ஆவார். கல்லோயா விவசாய அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இப் பேரினவாத ஆதிக்கமயமாக்கும் பயணம் தொடங்கப்பட்டது. தமிழர்களின் நிலங்களையும் அவர்களது எண்ணிக்கையையும் திட்டமிட்டு குறைக்கும் வகையில் கருமங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆபத்து தமிழர்களுக்கு மட்டுமானதென்ற வகையில் பேரினவாதத்தின் சதித்திட்டங்களை முஸ்லீம் மக்கள் இன்று உணர ஆரம்பித்திருப்பது போன்று அன்றைய சூழலில் அதிகம் கண்டு கொள்ள முடியவில்லை.

மேற்கூறிய அடிப்படையில் கிழக்கில் அம்பாறை மாவட்டம் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒன்றாக மாற்றப்பட்டது. இன்று அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் சனத் தொகை முதலாம் இடத்திலிருந்த போதிலும் பேரினவாத ஆதிக்கமே அரசோச்சுவதில் முனைந்து நிற்கிறது. அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் பலவழிகளிலும் இரண்டாம் தர நிலைக்கு தள்ளப்பட்டனர். நிலம் நீர் விவசாயம் என்பனவற்றில் புறம் தள்ளப்பட்டு பாகுபாடுகள் மூலம் ஓரங்கட்டப்பட்டனர். அதேவேளை சிங்கள நிலமற்ற மக்கள் ஏற்கனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் குடியமர்த்தப்பட்டு வந்துள்ளனர். அன்று வரை ஒரு பிடி மண்ணுக்கும் சொந்தக்காரராக இல்லாதிருந்து வந்த நிலமற்ற ஏழை சிங்கள மக்கள் குடியிருப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் ஐந்து ஏக்கர் நிலம் கிடைத்த போது அதனைத் தமது வாழ்க்கையின் பெரும் பேறாகவும் சொத்தாகவும் கருதிக் கொண்டனர். நிலத்தையும் நீர் வசதிகளையும் ஏனைய உதவிகளையும் அம் மக்களுக்கு அரசாங்கம் கொடுத்ததுடன் சேர்த்து தமிழ் முஸ்லீம்களுக்கு எதிரான இனவாத விஷத்தையும் வழங்கிக் கொண்டனர். தமிழ் முஸ்லீம் மக்களை எதிரிகளாகக் காட்டி குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் பேரினவாதத்தால் நச்சுத்தனங்களுடன் வழி நடாத்தப்பட்டனர். இவ்வாறான பேரினவாதக் கைங்கரியங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற முயற்சிகள் சில செய்யப்பட்டன. ஆனால் தமிழ் மக்களது எண்ணிக்கையும் செறிவானதும் பரந்ததுமான குடிப்பரம்பலானது அத்தகைய திட்டமிட்டகுடியேற்றங்களுக்கு அம்பாறை போன்று அதிக வாய்ப்பை வழங்கவில்லை. அம்பாறைக்கு அடுத்ததாக கிழக்கில் பேரினவாதம் தனது கவனத்தைக் குவித்த மாவட்டம் திருகோணமலையாகும். தமிழர்கள் முஸ்லீம்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களை சிங்களப் பெரும்பான்மையாக்கும் திட்ட மிட்ட முயற்சிகள் நாற்பதுகளில் இருந்தே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. திருகோணமலையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகமும் அதனைச் சூழவுள்ள நகரப் பிரதேசத்தை மட்டுமன்றி பாரம்பரிய தமிழ்க் கிராமங்களையும் சிங்களப் பெரும்பான்மையாக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் தொடர்ந்தன. அதற்கு வசதியாக அம்பாறை திருகோணமலை அரசாங்க அதிபர்களும் உயர் அதிகாரிகளும் சிங்களப் பேரினவாதிகளாகவே நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். கிழக்கில் மட்டக்களப்பு அரசாங்க அதிபரா மட்டுமே தமிழர்கள் இருந்து வந்துள்ளனர். இனவன்முறைகள்,





நாளாந்த அச்சுறுத்தல்கள், பொலீஸ் ராணுவக் கெடுபிடிகள், நிர்வாகத்தின் இனப்பாகு பாடுகள் போன்றவற்றால் தமிழ் மக்களை திருகோணமலையில் ஓரம் கட்டவும் சிறுபான்மையாக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டு வந்துள்ளன. இன்றும் அந்நிலை தொடர்கின்றது.

இவற்றின் தொடர்ச்சியும் உச்ச நிலையும் இப்போது கிழக்கை விடுவிப்பது என்ற பெயரில் நடைபெறுகின்றது. அதன் ஒரு அம்சமாக கடந்த இருபது வருடங்களாக ஒரே நிர்வாக அலகாகவும் மாகாணமாகவும் இருந்து வந்த வடக்கு- கிழக்கு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டன. நீதி மன்றத் தீர்ப்பு என்று கூறப்பட்ட போதிலும் இப் பிரிப்பில் பேரினவாதச் சூழ்ச்சி இருக்கின்றது. அதன் பிரதான திட்டம் தமிழர்கள் சுய நிர்ணய உரிமை கோருவதற்கு முன் வைத்து வரும் வடக்குகிழக்கு நிலத் தொடர்பையும் தொடர்ச்சியான பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களையும் துண்டாடுவதாகும். மக்களது எண்ணிக்கையின் பலத்தை பிரதேசக் கூறுகளால் பிரித்துப் பலவீனப்படு

க்கையின் பலத்தை பிரதேசக் கூறுகளால் பிரித்துப் பலவீனப்படு

த்துவதுமாகும். மேலும் தமிழர்களின் பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டம்சங்களை வெளிப்படையாகவும் உள்ளூரவும் சிதைத்து சின்னா பின்னப்படுத்துவதாகும்.

இவற்றையே இன்று கிழக்கில் காண முடிவுகின்றது. இலங்கையின் நெற் களஞ்சியம் கிழக்கு என்றே இருந்து வந்தது. விவசாயமும் மீன் பிடியும் கிழக்கின் பொருளாதார மூலங்களாகத் திகழ்ந்து வந்தன. அவையிரண்டும் சுனாமியாலும் தொடர்ந்து வந்த யுத்தத் திணிப்பாலும் பாழ்பட்டுக்கிடக்கிறன. எஞ்சியவற்றை அண்மைக்கால யுத்தம் சின்னாபடுத்தி நிற்கிறது. கிழக்கின் மக்களது அகதி வாழ்வு ஆபிரிக்க நாடுகளில் இடம் பெற்று வரும் சோகமான சம்பவங்களையும் வாழ்வையும் அண்மித்ததாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் யுத்தச் சூழலின் ராணுவ நடவடிக்கைகள் ஒரு புறமாக இடம் பெற்று வரும் அதே வேளை இயக்கங்களுக்கிடையிலான போட்டி பழிவாங்கல் என்பன கொலைகளாகவும் ஆட்கடத்தல்களாகவும் கப்பம் கொள்ளைகளாகவும் நடைபெற்று வருகின்றன. இது “குரங்கின் கையில் கத்தி” என்ற முது மொழியை நினைவுபடுத்த வைக்கின்றது. கிழக்கிலே பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் முதலில் தமிழ்- முஸ்லீம் முரண்பாட்டை உருவாக்கி வளர்த்து அதனால் நன்மை பெற்றனர். அந்நிலை இன்றும் அற்றுப் போய்விடவில்லை. இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் போராடி நின்ற சக்திகளிடையே பிளவை ஏற்படுத்தி அதன் மூலமான முழுப் பயனையும் தமதாக்கி வருகின்றனர். இந்நிலை ஊடாக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் மக்கள் கோரி நிற்கும் சுயாட்சிக் கோரிக்கையை பலவீனப்படுத்தி சிதைத்துவிடலாம் என பேரினவாதிகள் எதிர்பார்க்கின்றனர். கிழக்கின் முஸ்லீம் தலைமைகள் பேரினவாதத்தின் உள்ளார்ந்த திட்டங்களின் சுய ரூபத்தை கண்டும் காணாமல் இருந்து வந்தன. பெரும்பாலான தலைமைகள் ஆட்சியதிகாரத்தில் பேரினவாதக் கட்சிகளால் வழங்கப்பட்ட சலுகைகள் மூலம் தம்மை வளர்த்துக் கொண்டவர்களாகவே இருந்து வந்தனர். இன்றும் இந் நிலை தொடர்கிறது. இன்று 22 முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களில் 17 பேர் அமைச்சர்களாக உள்ளனர். அவர்களில் 7பேர் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்வோராவர்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பிரித்தானிய சாம்ராஜ்யமும் அடிமை வியாபாரமும்

பிரித்தானியாவில் அடிமை வர்த்தகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு லண்டனின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த "வெஸ்ற் மின்ஸ்ரர் அபே" யில் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. இரண்டாவது எலிசபெத் மகாராணி பிரதமர் ரொனி பிளேயர் தேவாலயக் குருமார்கள் மற்றும் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உத்தியோக ரீதியாக நிகழ்ச்சி நிரலில் அடிமை ஒழிப்பாளரான வில்லியம் வில்பபோசின் சொற் பொழிவுகள் எழுத்துக்கள் பற்றி பிரமுகர்கள் தேவாலயப் பாதிரிமார் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன. இவற்றின் முடிவில் பாவமன்னிப்பு பிரார்த்தனை இடம் பெற்றது.

அந்தப் பாவ மன்னிப்பு பிரார்த்தனை ஆரம்பமாகவிருந்த





பிரித்தானியாவின் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டதன் 200வது ஆண்டை நினைவு கூரும் முகமாக நிகழ்த்தப்பட்ட மேடை நாடகக்கட்சி இடது புறத்திலும் லண்டன் நிகழ்வில் எதிர்ப்பு முழக்கமிட்ட ஆபிரிக்கரை வலது புறத்திலும் காணலாம்

வேளையில் ஆபிரிக்க உடையணிந்த கறுப்பு ஆபிரிக்கர் ஒருவர் முழக்க இட்டபடி மேடையில் ஏறிவிட்டார்.

மிகுந்த ஆக்ரோசத்துடன் அந்த ஆபிரிக்கர் கூறினார்- "இந்த நிகழ்ச்சி வெட்கக் கேடானது. மகாராணியோ பிரதமரோ மன்னிப்புக் கோருவதற்கு அருகதையற்றவர்கள். நான் ஆபிரிக்கன் என்பதில் பெருமையடைகிறேன். இங்கு இடம் பெறும் நிகழ்வு வெள்ளையர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இது எமக்கு அவமானம். ஆபிரிக்க கிறிஸ்தவர்கள் இருந்தால் இந்த இடத்திலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்றார்.

பிரித்தானியத் தலைவர்களும் பிரமுகர்களும். அமர்ந்திருந்த இடத்திலிருந்து பத்து அடி தூரத்திலேயே அந்த ஆபிரிக்கர் மேற்கண்டவாறு முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்.

மகாராணியும் அவரது கணவர் பிரதமர் உள்ளிட்ட அரசமாளிகை- அரசாங்கப் பிரமுகர்கள் தேவாலயகுருமார் திகைத்துப் போயிருந்த வேளையில் சீருடையிலிருந்த பொலிசார் தேவாலயத்திற்குள் நுளைந்து அவ் ஆபிரிக்கரை "பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களைக்" கைது செய்யும் 5வது சட்டவிதியின் கீழ் கைவிலங்கிட்டு இழுத்துச் சென்றனர். பொலீசார் அவரை கொண்டு செல்வதற்கு முன் பத்திரிகையாளர்கள் அவ் ஆபிரிக்கரைப் பற்றிய சில தகவல்களைப் பெற்றனர்.

அவருக்கு வயது 39. ரொயின் அபேட்டு என்பது அவரது பெயராகும். "லீகாலி" (LIGALI) என்ற ஆபிரிக்க- பிருட்டிஷ் மனித உரிமைகள் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினரில் அவரும் ஒருவர். இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு பத்திரிகையாளர் என்ற ரீதியில் அவருக்கு அழைப்புக்கிடைத்திருந்தது.

இந் நிகழ்வுக்கான வரலாற்றுப் பின்புலத்தை சுருக்கமாகப் பார்த்து பயன்தருவதாகும்.

### மகாராணியின் அடிமைவர்த்தகம்

பிரித்தானியாவின் கைத்தொழிற்புரட்சியையொட்டிய ஆரம்ப மூலதனம் கடற் கொள்ளைகள் மூலம் பெறப்பட்டது. "உழைப்பு" அடிமைகள் மூலம் பெறப்பட்டது. இரண்டுகோடி அடிமைகளை பிரித்தானியா கொண்டிருந்தது. இந்த அடிமை வியாபாரத்தில் மூன்று பங்காளிகள் இருந்தனர். முடியாட்சி- அரசா ங்கம்- கிறீஸ்தவ தேவாலயங்கள்.

முதலாவது எலிசபெத் மகாராணியின் அடிமை வியாபாரியாக யோன் ஹவேகின்ஸ் (JOHN HAWKYNS) இருந்தான். அரச குடும்பம் தமது செல்வத்தின் பெரும் பகுதியை அடிமை வியாபாரத்திலிருந்து பெற்றுக் கொண்டது. மகாராணியினால் பட்டயம் வழங்கப்பட்ட கம்பனி 1660ல் இருந்து செயற்பட்டது. 1680 களில் வருடந்தோறும் ஐயாயிரம் அடிமைகள் ஆபிரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு கொண்டு வரப்பட்டனர். இந்த அடிமை வியாபாரத்தின் முக்கிய பிரமுகரான இளவரசனின் பெயரின் குறிக்கிய வடிவம்- யோக் இளவரன் என்பதால் னுலு (Bit) என்று கொண்டுவரப்பட்ட அடிமையின் இடது பக்கத்து குண்டியில் அடையாளமிடப்பட்டது. வியாபார நிறுவனங்களால் கொண்டு வரப்பட்ட அடிமைகளின் மார்பில் சுயுஊ என அடையாளமிடப்பட்டிருக்கும்.

1713ம் ஆண்டின் TREATY OF UTRECHT -யூரெக் உடன்படிக்கையின் பிரகாரம் பிரித்தானிய மகாராணியும்- பாராளுமன்றமும் அமெரிக்ககொலனிகளுக்கு ஆபிரிக்க மக்களை அடிமைகளாக விற்பதற்கான ஏகபோக உரிமையை ஸ்பெயினிடமிருந்து பெற்றுக் கொண்டது. இது அடிமை வர்த்தகத்தில் ஏற்கனவே இருந்து வந்த ஸ்பெயினின் பிடியை கைமாற்றச் செய்தது. அதன் மூலம் இங்கிலாந்து உலகின் மிகப்பெரிய அடிமை வியாபாரியாக உருவெடுத்து நிலைத்து நின்றது.

ஆன் மகாராணி என்பவள் சவுத் சீ கம்பனி எனப்பட்ட கேடு கெட்ட கம்பனிக்கு நிரந்தரமாக அடிமைகளை வியாாரம் செய்ய அனுமதி வழங்கினாள். ஹார்லி பிரபுவும் நிதி அமைச்சரும் வேறு அரச குடும்ப முக்கியஸ்தர்களும் இந்தக் கம்பனியை நடாத்தி வந்தனர். 1713ம் ஆண்டுக்கும் 1739ம் ஆண்டுக்குமிடையில் 75000 ஆயிரம் அடிமைகளை ஆபிரிக்காவிலிருந்து கடத்திச் சென்றனர். பல ஆயிரம் மைல் தூரப்பயணத்தின் போது கசாப்புக்கடைக்கு அனுப்பப்படும் பன்றிகளைப் போலக் கட்டிவைக்கப்பட்டிருந்தனர். விலங்கிடப்பட்டு கொண்டு செல்லப்பட்ட அவர்கள் அவரவர் மலத்தின் மீதே படுத்திருந்தனர். பிருத்தானியாவின் பொருளாதார வளர்ச்சிக்காக இந்த அடிமைகள் பெருந்தோட்டங்களில் சவுக்கடி கொடுக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டனர். இந்தப் பயணத்தின் போது ஆயிரக்கானவர்கள் நடுவழியில் உயிரிழந்தனர்.

(குறிப்பு: அடிமை வியாபாரத்தில் ஆபிரிக்க ஆண்களையும் பெண்களையும் எவ்வாறு அமெரிக்காவிற்கு மிக மோசமான நிலைகளில் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டு அங்கு கொடூரமாக தலைமுறை தலைமுறையாக வேலை வாங்கப்பட்ட வரலாற்றை விளக்கும் ஒரு அருமையான நாவல் The Root என்ற பெயரில் அலக்ஸ் கெய்லி என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்தது. அதன் தமிழ் வடிவம் தமிழகத்திலிருந்து 'ஏழு தலைமுறைகள்' என்ற பெயரில் வெளிவந்தது. தற்போது தினக்குரல் வார இதழில் வாராவாரம் அந்நாவல் வெளிவருகின்றது என்பதை வாசகர்களுக்கு தெரியப்படுத்துகிறோம் (ஆ.ர்)

CHUBCH OF ENGLAND எனப்படும் இங்கிலாந்தின் தேவாலயத்திற்கும் பல நூற்றுக் கணக்கான அடிமைகள் இருந்தனர். அவர்களை பார்படோஸ் பெருந்தோட்டங்களில் மந்தைகள் போல் வேலைக்கமர்த்தி பணம் சம்பாதித்தனர். கடந்த காலத்தின் இச் செயலுக்காக தேவாலயம் அண்மைகாலங்களில் "மன்னிப்பு" கோரியது. ஒருவன் தான் செய்த தவறுகளுக்கு அல்லது கொடுமைகளுக்கு இறைவனிடம் மன்றாடினால் அந்த இறைவன் மன்னிப்பானாம். இறைவன் மன்னித்தாலும் மனித சமுதாயம் மன்னிக்குமா? மகாராணியோ- அரசாங்கமோ "கவலை" தெரிவித்தனரே தவிர மன்னிப்பு கோரவில்லை. மன்னிப்பு கோரினால் அடிமைகளின் சந்ததியினருக்கு

தொடர்ச்சி 13ம் பக்கம்

# வவுனியாவில் தலைவிரித்தாடும் கொலை கொள்ளை கப்பம்!

வவுனியா நகரப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கொலைகள் கொள்ளைகள் கப்பம் பெறுதல் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. பண்டாரிக்குளம், கணேசபுரம், கூமாங்குளம், திரு நாவற்குளம், வேப்பங்குளம் போன்ற பகுதிகளிலேயே அதிகள வான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு மாதத்தில் நாற்பதிற்கு மேற்பட்டோல் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் வவுனியாப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. இந் நிலை மேலும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அதே வேளை நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மிரட்டி அச்சுறுத்தி கப்பம் பெற்றும் வரும் சம்பவங்களும் நீடிக்கின்றன. அண்மையில் வவுனியா சட்டத்தரணிகளிடம் கப்பம் கேட்கப்பட்டு மிரட்டப்பட்டதினால் அவர்கள் தமது நீதி மன்றக் கடமைகளைப் புறக்கணித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பின்பு கொழும்பின் நீதித்துறை உயர் அதிகாரிகளிடமிருந்து கிடைத்த உத்தரவாதத்தையும் உரிய நடவடிக்கைகளையும் தொடர்ந்து தமது புறக்கணிப்பு நடவடிக்கையைக் கைவிட்டு கடமைகளுக்குச் சென்றனர். ஆனால் ஏனையோரிடம் கொலை அச்சுறுத்தல் விடுத்து கப்பம் பெறுவது தொடர்கின்றது. இவற்றை கண்டித்தும் எதிர்த்தும் சமூக சமயப்பிரமுகர்கள் விடுத்து வரும் கோரிக்கைகள் எதுவும் கொலையாளிகளின் கப்பம் பெறுவோரின் கொள்ளையிடுவோரின் செவிகள் கண்களுக்கு ஊடாக சிந்தனைத்தளத்திற்கு சென்றடையவில்லை. இத்தகைய மக்கள் விரோதச் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அடையாளம் காணமுடியாத ஆயுத தாரிகளால் சகல மட்டங்களிலும் உள்ள குடும்பங்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கின்றன. கொலைகளால், பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரும் கணவன்மாரை இழந்த மனைவிமாரும், தந்தை தாய்மாரை இழந்த பிள்ளைகளுமாக துன்பக் கடலில் தவித்து வருகின்றனர். அவ்வாறே பலர் தாம் சேமித்தவற்றை கப்பமாகச் செலுத்தி தமது உயிர்களை மட்டும் தக்க வைத்து வருகின்றனர். அவ்வாறே ஆயுத முனைக்கொள்ளையர்களிடம் பணம் நகைகளைக் கொடுத்து விட்டு வெறும் மனிதர்களாக ஏக்க அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளனர்.

இவ்வாறு கொலை கொள்ளை கப்பம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் தத் தமது குடும்ப எதிர்காலம் பழாகிப் போன தை எண்ணி எண்ணி துன்பத்தில் துவண்டு வருகின்றனர். இந்நிலை தத்தமக்கும் நேர்ந்து விடுமோ என்ற அச்சத்திலும் பீதியிலும் ஏனைய மக்கள் அன்றாடப் பொழுதினைக் கழித்து வருகின்றனர். இவ்வாறான மக்கள் விரோத சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் யார்? அவர்களை அடையாளம் காணவோ அல்லது சட்டம் ஒழுங்கின் கீழ் கொண்டு வரவே முடியாத நிலை ஏன் நீடிக்கிறது. இன்று சட்ட விரோதமாகவும் சட்ட பூர்வாமாகவும் ஆயுதங்கள் குறிப்பிட்டவர்களிடம் மட்டுமே இருந்து வருகின்றன. ஆனால் இடம் பெறும் கொலைகளுக் கும் கொள்ளைகளுக்கும் கப்பம் பெறுவதற்கும் உரியவர்களாக உள்ளவர்களைக் கண்டுபிடிக்க முடியாத அவல நிலை தான் காணப்படுகின்றது. மக்கள் மத்தியில் வெறும் ஊகங்கள் மட்டுமே காதோடு வாய் வைத்தாற்போல் அக்கம் பக்கம் பார்த்து பேசப்படுகிறது. ஆனால் ஊகங்கள் உண்மையாகி விடுவதில்லை. இருப்பினும் ஊகங்களில் உண்மை இல்லாமலும் இல்லை.

மக்கள் தமது பொதுப் பிரச்சினைக்காக ஒன்று கூடி ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தால் அதனைத் தடுத்த நிறுத்தி சட்டம் ஒழுங்கு என்றும் அமைதிக்குப் பங்கம் என்றும் தமது ஆயுதக் கரங்களை உயர்த்தி நிற்கும் சட்டத்தின் காவலர்கள் இவ்விடயத்தில் மட்டும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. ஏன் என்பது தான் மக்கள் மத்தியில் பெரும் கேள்வியாக இருந்து வருகின்றது.

அண்மையில் வவுனியா மாவட்ட நீதிபதி எம். இயஞ்செழியன் உட்பட அரசாங்க உயர் அதிகாரிகள், கல்வி மற்றும் சமூக மதப் பிரமுகர்கள் ஒன்று கூடி பிரஜைகள் குழு அமைத்து வவுனியா நிலைமைகள் பற்றி ஆராய்ந்து அக்கறையுடன் செயல்பட முன் வந்தனர். அவ்வாறான நிகழ்வு நடைபெற்ற 24 மணி நேரத்தில் ஒரே இரவில் முகமூடியணிந்த ஆயுததாரிகளான கொள்ளையர்கள் பத்து வீடுகளில் கொள்ளை நடாத்தினர்.

இந் நிலையில் வவுனியாவின் உயர் பொலீஸ் ராணுவ அதிகாரிகளுக்கு மாவட்ட நீதிமன்றத்தின் அறிவித்தல் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. அதில் குறிப்பிட்டுள்ள விடயம் கவனத்திற்குரியதாகும்.

"வவுனியா பிரதேசத்தில் குற்றச் செயல்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளன. பொலிசாரின் திறமைக்கும் சட்டத்தின் வலிமைக்கும் நீதிமன்ற நிர்வாகத்திற்கும் சவால் விடும் வகையில் ஆயுதக் கொள்ளையர்கள் கொலைக்குற்றம் புரிவோர் கப்பம் பெறுவோரின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசாரும் விஷேட அதிரடிப் படையினரும் உடனடியாகத் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்" என அந் நீதிமன்ற அறிவித்தலில் வற்புறுத்தப் பட்டுள்ளது. இத்தகை நீதிமன்ற வேண்டுகோள் எந்தளவிற்கு நீதி நடைமுறைப்படுத்தப்படப் போகின்றது என்பதை வவுனியாப் பிரதேச மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர். மக்கள் தான் இறுதியில் வெற்றிபெறுவர் என்ற போதிலும் இன்று அவர்கள் செயல்பட முடியாத நிலையில் துப்பாக்கிக் கலாச்சாரச் சூழலின் கைதிகளாகவே இருந்து வருகின்றனர். விடுதலையின் பெயரால் மக்கள் ஏற்கனவே மௌனமாக்கப்பட்டதன் விளைவே அச் சூழலாகும் என்பது மக்கள் மத்தியில் நன்கு உணரப்பட வேண்டும். எவராக இருப்பினும் என்றோ ஒரு நாள் மக்கள் மன்றத்தில் உரிய பதில் கூறியே ஆக வேண்டும் என்பது வரலாற்று உண்மையின் பாற்பட்ட ஒன்றாகும்.

# ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்தும் ஏகாதிபத்திய ஜனநாயகம்

சொர்க்கத்திலிருந்து ஆணை பெற்று வந்துள்ள (வரலாற்றில் இதுவரை காணாத பேரழிவு ஆயுதங்களை வைத்துள்ள) ஒரு பேரரசுக்கு எதிராக நாம் நின்று கொண்டிருக்கிறோம். விரும்பியவாறு யார் மீதும் போர் தொடுக்கும் உரிமைகளைத் தனக்குத்தானே வழங்கிக் கொண்டுள்ள ஒரு பேரரசோடு நாம் முரண்பட்டிருக்கிறோம்.

மத அடிப்படை வாதிகளிடமிருந்தும் தவறான கோட்பாடுகளிலிருந்தும், சர்வாதிகாரிகளிடமிருந்தும், ஆணாதிக்கவாதிகளிடமிருந்தும் மக்களை விடுவிப்பதாகக் கூறி மக்களை அடியோடு ஒழித்துக்கட்டும் அதிகாரத்தைத் தனக்குத்தானே வழங்கிக் கொண்டுள்ள ஒரு பேரரசுக்கு எதிராக நாம் நின்று கொண்டிருக்கிறோம். பேரரசு முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஜனநாயகம் என்பது போர்க்காலத்தின் புதிய அலறலாக உள்ளது. உங்கள் வீட்டு வாசற்படியிலேயே "டெய்சிகட்டர்" குண்டுகள் மூலம் ஜனநாயகம் உங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. (கொதிக்கவிட்டு, எண்ணெய் சேர்த்து குண்டு வீசும்) இந்தப் புதிய திடீர் தயாரிப்பான ஏகாதிபத்திய ஜனநாயகத்திற்கு மக்கள் அளிக்க வேண்டிய விலை மரணமாக இருந்தாலும் அது மலிவு விலைதான்.

கறுப்பர்களும், பழுப்பர்களும், நீக்ரோக்களும், சீனர்களும், எகிப்தியர்களும் உண்மையில் மனிதர்களாகவே மதிக்கப்படுவதில்லையே. அதனால் நமது சாவுக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. நமது வரலாறும் ஒரு வரலாறாக மதிக்கப்படுவதில்லை. முன்னெப்போதும் அவர்களால் மதிக்கப்பட்டதுமில்லை.

வரலாற்றைப் பற்றி பேசவேண்டுமெனில் கடந்த சில மாதங்களில் அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிப்பதையும், கைப்பற்றுவதையும் தொலைக்காட்சிகள் நேரடியாக ஒளிபரப்ப அதை உலகமே பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின்லேடனும், தாலிபான்களும் மாயமாய் மறைந்ததைப் போல, ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியும், திடீரெனக் காணாமல் போனது. இதைத் தொடர்ந்து அங்கு 'அதிகார வெற்றிடம்' ஏற்பட்டுவிட்டதாக அரசியல் விமர்சகர்கள் கூறினர். உணவும், குடிநீரும், மின்சாரமும் இல்லாமல் பல நாட்களாக முற்றுகையிடப்பட்டிருந்த நகரங்களிலும், இடையறாத குண்டு வீச்சுக்கு உட்பட்ட நகரங்களிலும், பத்தாண்டுகளுக்கும் மேலாக ஐ.நா. வின் பொருளாதாரத் தடையால் வறுமையில் தள்ளப்பட்டு பட்டினியால் தவித்த மக்கள் திடீரென நகர நிர்வாகமும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். 7000 ஆண்டுகள் பழமையான ஒரு நாகரிகம் கொடுங்கோன்மையால் வீழ்ந்தது. இது தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பில் தெளிவாகத் தெரிந்தது.



வன்முறையாளர்கள் கடைகளையும், அலுவலகங்களையும், உணவு விடுதிகளையும், தங்கும் விடுதிகளையும் கொள்ளையிட்டனர். அதை அமெரிக்க வீரர்களும் இங்கிலாந்துப் படையினரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். செயல்படுவதற்கான ஆணைகள் எதுவும் கிடைக்கவில்லையென அவர்கள் சொல்லிக் கொண்டனர். ஆனால் மக்களைக் கொல்வதற்கு அவர்களுக்கு ஆணை இருந்தது. மக்களைப் பாதுகாப்பதற்கல்ல. அவர்களின் முன்னுரிமை தெளிவாக இருந்தது. ஈராக் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அவர்களின் வேலை அல்ல. கட்டுமானங்களில் ஏதும் எஞ்சி இருந்தாலும் அதைப் பாதுகாப்பதும் அவர்கள் கடமை அல்ல. ஆனால் ஆக்கிரமிப்புத் தொடங்குவதற்கு முன்னரே எண்ணெய் வயல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. சி. என். என். தொலைக்காட்சியிலும் பி.பி.சி. தொலைக்காட்சியிலும் இந்த மூர்க்கத்தனமான அத்துமீறல்கள், தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டன. தொலைக்காட்சி வர்ணனையாளர்களும், இராணுவத்தினரும், அரசு அதிகாரிகளும், இந்த அத்துமீறல்களை, அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் அடக்கப்பட்டிருந்ததற்கான கோபத்தை வெளியிட்டுக் கொண்டாடுவதாகக் காட்டிக் கொண்டனர். அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் டோனால்ட் ரம்ஸ்பெல்ட் கூறியதாவது "இது அசிங்கம் தான்; சுதந்திரம் உள்ள மக்கள், சுதந்திரமாகக் குற்றம் புரிவதும், தவறுகள் செய்வதும், மோசமான செயல்களில் ஈடுபடுவதும் சுதந்திரத்தின் அசிங்கம்" என்றார் டோனால்ட் ரம்ஸ்பெல்டு, ஆட்சியில்லா நிலையே சிறந்ததெனக் கருதும் அராஜகவாதியா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீக்ரோ ரோட்னிசிங் உதைத்துக் கொடுமைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து லாஸ் ஏஞ்சல்ஸில் கலவரம் வெடித்ததே? அதையும் இப்படித்தான் பார்த்திருப்பாரா? இப்பொழுதுகூட அமெரிக்கச் சிறைகளில் அடைப்பட்டிருக்கும் இரண்டு மில்லியன் மக்களிடம் 'சுதந்திரத்தின் அசிங்கம்' பற்றிய தனது கொள்கையை விளக்கிச் சொல்லத் தயாராக இருப்பாரா? (உலகிலேயே மிக அதிகமான சுதந்திரம் உள்ள இந்த நாட்டில்தான் கைதிகளின் எண்ணிக்கை உலகிலேயே அதிகமாக உள்ளது) அமெரிக்காவிலுள்ள கறுப்பின மக்களில் 28 சதவீதத்தினர் தங்களின் வாலிபப் பருவத்தின் ஒரு பகுதியை சிறைகளில் கழிக்கும் நிலைமை உள்ளதே? அதன் சிறப்பைப் பற்றி அவர்களிடம் விளக்குவாரா? டெக்ஸாசின் ஆளுநராக இருந்தபோது 152 தூக்குத் தண்டனைகளை நிறைவேற்றுவதைப் பார்த்த ஒருவர் ஜனாதிபதியாக இருக்கும்போது அவரின் கீழ் ஏன் பணியாற்றுகிறார் என்பதை விளக்குவாரா?

## முதல் ஜனநாயகம்

ஈராக்கின் மீதான போர் தொடங்குவதற்குமுன், பாதுகாக்கப்பட வேண்டிய 16 முக்கிய இடங்கள் அடங்கிய பட்டியலை, மறுக்கட்டுமானம் மற்றும் மனிதநேய உதவிக்கான அலுவலகம் பென்டகனுக்கு அளித்திருந்தது. அதில் ஈராக்கின் தேசிய அருங்காட்சியகம் இரண்டாம் இடத்தில் இருந்தது. இருப்பினும் அந்த அருங்காட்சியகம் கொள்ளையிடப்பட்டதுமல்லாமல், அதன் புனிதத் தன்மையும் அசிங்கப்படுத்தப்பட்டது. பாரம்பரியமிக்க ஒரு தொன்மையான பண்பாட்டின் இருப்பிடமாக அந்த அருங்காட்சியகம் இருந்தது. முன்னர் மொசபடோமியா என அழைக்கப்பட்ட நதிப் பள்ளத்தாக்கின் ஒரு பகுதியைத்தான் நாம் இப்பொழுது ஈராக் எனக் கூறுகிறோம். டைகிரிஸ் யூப்ரட்ஸ் நதிக்கரையில் வளர்ந்த இந்தப் பகுதி நாகரிகம்தான் உலகிற்கு முதல் எழுத்துகளை முதல் நாட்காட்டியை, முதல் நூலகத்தை, முதல் நகரத்தை வழங்கியதோடல்லாமல் உலகின் முதல் ஜனநாயகத்தையும் வழங்கியது. குடிமக்களின் சமூக வாழ்க்கை பற்றிய சட்டங்களை முதலில் உருவாக்கிய மன்னர் ஹமுராபி பாபிலோனைச் சேர்ந்தவர். இவரது சட்டத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கும், பரத்தையருக்கும், அடிமைகளுக்கும், ஏன் விலங்குகளுக்கும் கூட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தது. ஹமுராபியின் சட்டங்கள் முதலில் தோன்றிய சட்ட முறைமைகள் என்பதற்காக மட்டுமல்ல சமூக நீதி பற்றிய புரிதலைக் கூறுவன என்பதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அரசு தனது சட்ட விரோதமான போரை அரங்கேற்றவும் கோமாளித்தனமாக நீதிநெறி முறையை அவமானப்படுத்திக் காட்டவும் இதைவிடப் பொருத்தமற்ற ஒரு நாட்டைத் தெரிவு செய்திருக்கவே முடியாது.

சூறையாடல்கள் நடந்து கொண்டிருந்த அந்த நாட்களில் இருளின் இளவரசன் செயலாளர் ரம்ஸ்பெல்டு போரின் போது மிகவும் விசுவாசமாக நடந்து கொண்ட பத்திரிகையாளர்களின் கூட்டமொன்றை பெண்டகனில் நடத்திய போது பத்திரிகையாளர்களைப் பாராட்டுவது போல் கூறினார். "அந்தப் படத்தைத் தொலைக்காட்சியில் திரும்பத் திரும்பப் பார்க்கிறோம். ஏதோ ஒரு கட்டிடத்திலிருந்து ஒருவன் ஒரு அலங்காரப் பூக்கும்பத்தைத் தூக்கிக் கொண்டு வெளியேறுகிறான். இதே படத்தை இருபது முறை பார்க்கிறோம். அட கடவுளே இத்தனை கும்பங்களா அங்கே இருக்கின்றன. நாடு முழுவதும் தேடினாலும் அத்தனை அலங்காரப் பூக்கும்பங்கள் இருக்குமா?" அறை முழுவதும் சிரிப்பலை படர்ந்தது. அப்படியானால் ஹார்லேம் பகுதியின் ஏழைகள் அமெரிக்க மாநகராட்சியின் அருங்காட்சியகத்தில் புகுந்து இதேபோல் சூறையாடிக் கொள்ளலாமா? அதையும் இதேபோல் கும்மாளத்துடன் வரவேற்பார்களா?

மறுகட்டுமானம் மற்றும் மனிதநேய உதவி அலுவலகம் அளித்திருந்த பட்டியலில் 16வது இடத்தில் இருந்தது எண்ணெய் வள அமைச்சகக் கட்டிடம். ஆனால் பாதுகாப்பு அளிக்கப்பட்டதென்னவோ இந்தக் கட்டிடத்திற்கு மட்டும் தான். ஒரு வேளை முஸ்லீம் நாடுகளில் பட்டியல்களை கீழிருந்து மேலாகப் படிப்பதுதான் சரி என ஆக்கிரமிப்பு இராணுவம் நினைத்திருக்கலாம்.

"ஈராக் விடுவிக்கப்பட்டு விட்டது. ஆப்கானிஸ்தான் பெண்களின் சொர்க்கமாக மாறிக் கொண்டிருக்கிறது." இவ்வாறு தொலைக்காட்சிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதற்கெல்லாம் காரணமான 21 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த பெண்ணியவாதிகளான புஷ்க்கும் பிளேயருக்கும் நாம் நன்றி சொல்ல வேண்டும். உண்மையில், ஈராக்கின் உள் கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளன. மக்கள் பட்டினியின் விளிம்பிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். நாட்டின் உணவுக் கையிருப்பு காலி செய்யப்பட்டுள்ளது. நிர்வாகச் சீர்குலைவால் நகரங்கள் நாசமடைந்துள்ளன. சன்னி- ஷியா பிரிவுகளிடையே ஒரு உள்நாட்டுப் போர் தொடங்கும் அபாயம் ஈராக்கில் தோன்றியுள்ளது. இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் தாலிபான் ஆட்சிக் காலத்திற்கு முன் இருந்த அராஜக நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. அந்நாடு யுத்தப் பிரபுக்களால் தாங்கள் அதிகாரம் செலுத்தும் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.


இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத 'புஷ்' 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் தனது தேர்தல் பிரச்சாரத்தை மே 2 இல் தொடங்கியுள்ளார். வரலாற்றில் மிகக் குறைந்த தூர விமானப் பயணம் எனக் கூறத்தக்க வகையில் கடற்கரைக்கு மிக அருகில் இருந்த யு. எஸ். எஸ். ஆப்ரகாம் லிங்கன் என்ற விமானந்தாங்கிக் கப்பலுக்கு இராணுவ ஜெட் விமானம் மூலம் சென்று இறங்கினார். அவரின் பின்புறத்தில் சாண்டியாகோ கடற்கரை தெரியாமல் கடல் மட்டும் தெரியுமாறு அந்தப் பிரமாண்டமான கப்பலை வளைத்துத் திருப்பி வைத்து அவரது தொலைக்காட்சிச் சொற்பொழிவைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்தோமென அரசு அதிகாரிகளே ஒப்புக்



கொண்டுள்ளனர் என 'அசோசியேட்டட்பிரஸ்' என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தில் ஒருநாள் கூட பணியாற்றியிராத ஜனாதிபதி புஷ் அந்தப் போர்க்கப்பலின் கீழறையிலிருந்து விநோதமான உடையில், யு. எஸ். குண்டுவீச்சு விமானியின் மேல் கோட்டு, இராணுவ வீரனின் காலணிகள், விமான ஓட்டிக்குரிய தலைக்கவசம், கண்ணாடி ஆகியவை அணிந்து வெளிவந்தார். இவரை வரவேற்று ஆர்ப்பரித்த சிப்பாய்களை நோக்கிக் கையசைத்தபடி, ஈராக்கை வெற்றி கொண்டதை அதிகாரப்பூர்வமாகப் பிரகடனம் செய்தார். "பயங்கரவாதிகளுக்கெதிராகத் தொடர்ந்து நடந்து வரும் போரில் இது வெற்றி மட்டுமே" என மிகுந்த முன் எச்சரிக்கையோடும் சொல்லிக் கொண்டார்.

முதிய நாஜி ஹெர்மன் கோயரிங் முன்பு சொன்னான் "தலைவர்கள் விரும்பியபடி மக்களைச் செயல்படவைக்க முடியும்...... நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்- நாம் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறோம் என்று கூறுங்கள். சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் நாட்டை ஆபத்துக்குள்ளாக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு தேசப்பற்று இல்லையென்றும் தூற்றுங்கள். இது எல்லா நாட்டிலும் வேலை செய்யும்"



அந்த நாஜி சொன்னது சரிதான் இது மிக எளிதான வழி. புஷ் ஆட்சியும் இதைத்தான் நம்புகிறது. தேர்தல் பிரச்சாரத்திற்கும் போருக்கும் இடையிலான வேறுபாடும் ஜனநாயகத்திற்கும், நாட்டுக்கும் இடையிலான வேறுபாடும் மிக வேகமாகக் குறைந்து வருவதாகவே பார்க்கத் தோன்றுகிறது.

இத்தகைய பிரச்சாரப் போர்கள் விதிக்கும் ஒரே முன் நிபந்தனை அமெரிக்க உயிர்கள் பலியாகக் கூடாது என்பதுதான். இது வாக்காளர்களின் நம்பிக்கையை ஆட்டங்கொள்ளச் செய்யும். ஆனால் போரில் அமெரிக்கவீரர்கள் கொல்லப்பட்டு வரும் பிரச்சனை ஏறக்குறைய ஓரங்கட்டப்பட்டுவிட்டது.

ஈராக்கின் மீது "அதிர்ச்சியையும் பீதியையும் உருவாக்கும் தாக்குதல்" கட்டவிழ்த்து விடப்படுவதற்கு முன் நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்தில் ஜெனரல் பிராங்க் அறிவித்தார். "இந்தப் போருடன் ஒப்பிடத்தக்க இன்னொரு போர் வரலாற்றில் நடந்தே இருக்காது" அவர் சொன்னது சரியாகக்கூட இருக்கலாம்.

நான் இராணு வரலாற்று அறிஞர் இல்லை. ஆனாலும் இதைப் போன்ற போர் முன் எப்போது நடந்திருக்கிறது?

எழுத்தாளர் பத்திரிகையாளர் சமூக ஆர்வலர்

**அருந்ததிராய்**

**2003 மே 13ல் ஆற்றிய உரையிலிருந்து.**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# புலம் பெயர்ந்த தமிழிர்களின் கண்ணீரில் கப்பல் விடுவோர்!

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை முற்றியதன் பயனாகத் தமிழர் கடல் கடந்து போவது 1956 முதலாக நடந்து வந்திருக்கிறது. சிங்களம் அரசகரும மொழியானதனால் வெறுப்புக்கொண்டு வெளியேறியவர்களின் கவலைகள் ஆங்கிலத்தின் எதிர்காலம் பற்றியவையாகவே இருந்தது என்று சொல்லலாம். அவர்களிற் பெரும்பாலனவர்களின் வர்க்கப் பின்னணி ஆங்கிலம் படித்த நடுத்தர வகுப்பு என்றுஞ் சொல்லலாம். அவர்களுக்கு இங்கிலாந்து பற்றிய மயக்கங்கள் இருந்து வந்தன. சிலருக்கு இங்கிலாந்து இன்னொரு தாய்நாடு மாதிரி. வெகு சிலரே வேறு மேலை நாடுகளுக்குச் சென்றார்கள். அவர்களும் ஆங்கிலம் பேசப்படுகிற நாடுகளாகத் தெரிந்து போனார்கள்.

1958 வன்முறைக்குப் பிறகு தமது உயிருக்கும் தமது குடும்பத்தினரின் உயிருக்குமாக அஞ்சிப் படித்த நடுத்தர வர்க்கத்தினர் வெளியேறினார்கள். இந்தியாவிற் போய்க் குடியேறுவதற்கு வாய்ப்பான சூழ்நிலை இல்லாததால் வெகு சிலர் மட்டமே இந்தியாவை நாடினார்கள். தொடர்ந்தும் புலப்பெயர்வு மேற்கு நோக்கியதாகவே இருந்தது. கல்வி, வேலை வாய்ப்பு என்கிற காரணங்களைக் காட்டி வெளிநாடுகளுக்குப் போனவர்களில் குறிப்பிடத்தக்க தொகையானவர்கள் திரும்பி வரவில்லை.

1970 அளவில் தேசிய இனப்பிரச்சினைக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரம் பற்றிய நிச்சயமற்ற தன்மையும் வேலைவாய்ப்புகள் போதாமையும் புதிய கவலைகளாகி விட்டன. அப்போது வேலைதேடிப் பிரித்தானியாவுக்குப் போகிறது பலவிதமான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகத் தொடங்கி விட்டது. அதே வேளை எண்ணெய் நெருக்கடிக்குப் பின்பு மத்திய கிழக்கு கவர்ச்சி மிக்க வேலை வசதிகளைக் கொண்டதாக மாறியது. ஆபிரிக்க நாடுகளிலும் புதிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

1977 வன்முறைக்குப் பின்பு வெளிநாடுகட்கு மேற்படிப்புக்காக அனுப்பப்பட்டவர்களிற் பலரும் குறுகிய காலத் தொழிற் பயிற்சிக்காகவும் விடுமுறைகட்காகவும் போனவர்களிற் பலரும் இலங்கைக்குத் திரும்பி வரவில்லை. இதே காலகட்டத்தில் அவுஸ்ரேலியாவின் நிறவாதக் குடிவரவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டு ஆசிரியர்களும் குடியேறும் வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் 1983 வரையிலான புலப் பெயர்வு படித்த நடுத்தர உயர்நடுத்தர வர்க்கத்தினருடையதாகவே அமைந்தது. அவர்கள் தமது புகலிடங்களில் சமூக அடையாளங்களைத் தங்களுடையதாக்கிக் கொள்ள ஆயத்தமாகவே புலம் பெயர்ந்தார்கள். சொந்தம் உறவுகள் போன்ற தொடர்புகள் விடுபட்டுப் போகாவிட்டாலும் தமிழ் அடையாளம் என்பது புலம்பெயர்வு மூலம் வந்த புதிய அடையாளம் மன நிறைவைத் தராததன் ஒரு விளைவானது என்றே சொல்ல வேண்டும்.

1983 வன்முறைக்குப் பின்பு குறிப்பாக 1984 முதல் 1987 வரையில் போர்ச் சூழல் ஏற்படுத்திய உக்கிரமான நெருக்கடிகளின் விளைவாக உலகின் பலவேறு நாடுகளுக்கும் சிதறி ஓடுகிற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவுக்குப் போனவர்களில் வசதியுள்ளவர்கள் பிரதான நகரங்களில் குறிப்பாகச் சென்னையில் இலங்கையில் வாழ்ந்த காலத்தின் வசதிகளுடன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். வசதி சிறிது குறைந்தவர்களும் தமிழகத்தில் இருந்த அனுதாபமான சூழலில் தமக்கான வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டார்கள். கையில் எதுவுமில்லாமல் உயிருக்கு அஞ்சி ஓடியவர்களிற் பெரும்பான்மையானவர்கள் முன்பு இலங்கையிற் கற்பனை செய்திராத விதமாக அகதி முகாங்களிலும் அகதி என்ற அடையாளமின்றி வெளியிலும் அன்று முதல் அல்லற்பட்டு இருந்து வருகிறார்கள்.

மேற்கிற்குப் போனவர்களில் சிறுபான்மையானோர் தங்களது கல்வித் தகுதிகள் மூலமும் செல்வாக்கான தொடர்புகள மூலமும் தங்களை ஓரளவு வசதிப்படுத்திக் கொண்டார்கள். இன்னொரு பகுதியினர் உறவினர்களது உதவியுடன் போய்ச் சேர்ந்தாலும் சட்ட விரோதமாகவே பயணஞ்செய்ய வேண்டியிருந்ததால் கடனாளிகளாகவே வாழ்க்கையைத் தொடங்கினார்கள். அவர்களுக்கு இலங்கையிலும் குடும்பப் பொறுப்புக்கள் இருந்தன. புகலிடத்து மொழியறிவு இல்லாததாலும் போர்ச் சூழலால் கல்வி தொழிற்பயிற்சி வாய்ப்புகள் ஆகியன இல்லாததாலும் இலங்கையில் இருந்த போது கனவிலும் காண விரும்பாத வேலைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டார்கள். பலர் மிகவும் கடுமையாக இரவு பகலாக உழைத்தே தம்மையும் தம்மை நம்பி இலங்கையில் இருப்பவர்களையும் பராமரிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டார்கள். அதே வேளை அவர்களிடையே குற்றச் செயல் கும்பல்களும் புல்லுருவிகளும் உருவாகினர். இச் சமூக விரோதிகளில் கணிசமான பகுதியினர் புலம்பெயர முன்னமே மோசமான நடத்தையுள்ளவர்களாக இருந்தவர்கள் என்பதும் அவர்களைச் சூழ குண்டர் படைகளும் குற்றச் செயல் வலைப்பின்னல்களும் உருவாகத் தொடங்கின. படித்த புல்லுருவிகள் எனைய தமிழர்களிடையே புகலிட மொழி அறிவு போதாமல் இருப்பதையும் புகலிடத்துச் சட்டங்கள் சமூக நடைமுறைகள் உரிமைகளும் பல வேறு சமூக வாய்ப்பு வசதிகளும் பற்றிய அறியாமையைப் பயன்படுத்தி இலவசமாகக் கிடைக்கக் கூடிய சேவைகட்குக் கூடக் காசு கறக்கிற உபாயங்களை உண்டாகித் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள்.

தமிழர் நடுவே சமய நம்பிக்கை மரபுவாதம், பழமைவாதம் மூடநம்பிக்கைகள் போட்டி மனப்பான்மை போன்றவற்றை மூலதனமாக்கி பண்பாட்டின் பேரால் ஆடம்பரமான வீண் செலவுகள் செய்வித்தும் பலவேறு மதச் சடங்குகளிலும் சோதிடம் மாயமந்திரங்கள் போன்ற ஏமாற்று வேலைகளிலும் மக்களை ஈடுபடுத்தியும் தங்களைச் செல்வந்தர்களாகவும் சமூகப் பிரமுகர்களாகவும் வளர்த்துக் கொண்ட புல்லுருவிகள் இன்னொரு வகையினர்.

மேலே சொன்னதற்கும் மேலாக உடனிருந்து கொல்லுகிற வியாதிகளாகப் பலவேறு தீய சக்திகளும் புலம்பெயர்ந்த மக்களின் சமூக வாழ்வின் உயர்வுக்குத் தடையாக இருக்கின்றன. அதேவேளை இலங்கை மக்களின் அவலங்கள் பற்றி எந்த விதமான அக்கறையுமே இல்லாமல் அவர்களுடைய அவலத்தை அரசியல் பிழைப்பாக்கிக் கொண்ட தமிழக அரசியல் தலைமைகளுக்குக் கொஞ்சமும் சளைக்காத இன்னொரு புல்லுருவிப் பரம்பரை இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வேறு சில பலவீனங்களைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிறது.

தாங்கள் உலகத்தால் கவனிக்கப்படவில்லை. தங்களைத் தமிழகம் கண்டுகொள்ளவில்லை என்ற ஆதங்கம் இலங்கைக் கலைஞர்களிடமும் எழுத்தாளர்களிடம் நீண்டகாலமாகவே இருந்து வந்திருக்கிறது. அதற்கேற்றாற் போல இந்தியாவிலிருந்து வருகிற குப்பைகளை எல்லாம் கலை இலக்கியம் என்று கொண்டாடிப் பரவலாக்குகிற ஒரு வணிகக் கூட்டமும் இருந்து வந்திருக்கிறது. தன்னம்பிக்கையற்ற ஊடகவியலாளர்களும் அதற்குப் பல வகைகளிலும் உடந்தையாக இருந்து வந்திருக்கிறார்கள். திருவிழாக்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து சின்னமேளமும் மேளக்காரர்களும் வந்த காலம் பெரும்பாலும் இன்று இல்லை என்றாலும் அதன் இடத்தில் தமிழ் சினிமா, சின்னத்திரை, இந்தியக் கலைஞர்களது நிகழ்ச்சிகள் என்பனவே பொழுதுபோக்காக இன்று இருக்கின்றன.

இவ்வாறான சிந்தனையிலிருந்து விடுபடுவதற்கு இடதுசாரி அரசியல் சிந்தனையும் வெகுசனப் பண்பாட்டுச் சிந்தனையும் தேசிய கலை இலக்கியக் கோட்பாடும் நல்ல பங்காற்றிய ஒரு குறுகிய கால இடைவெளி இருந்தது. இன்று பேரினவாதத்திற்கு முகங்கொடுக்கத் தடுமாறுகிற ஒரு சமூகத்திடமும் புலம் பெயர்ந்தோரிடமும் ஒரு நல்ல மாற்றுச் சிந்தனை உருவாக்குவதற்கு வழி காட்டத் தமிழ்த் தேசியத்தால் இயலவில்லை. எனவே தமிழ் மக்களிடையிலும் படைப்பாளிகளிடையிலும் கலைஞர்களிடையிலும் அறிஞர்கள் என்று சொல்லப்படுகிறவர்களிடையிலும் உள்ள மன உளைச்சலை வைத்துப் பணம் பண்ணுவதில் தமிழகத்துச் சஞ்சிகைகள் சிலவும் வெளியீட்டு நிறுவனங்கள் சிலவும் புதிய உச்சங்களை எட்டியுள்ளன.

ஈழத்து எழுத்தாளர்களுக்குச் சடங்காசாரமான அங்கீகாரம் (காலச்சுவடு மூன்று பேரை அதன் ஆலோசகர்களாக வைத்திருப்பதும் கவனிக்கத்தக்கது) ஈழத்தமிழ்ப் பிரமுகர்களுடனும் எழுத்தாளர் குழுக்களுடனும் விளம்பர வணிகத் தொடர்புகள் இடையிடையே ஈழத்தமிழர் பிரச்சனை பற்றிச் சூடான விவாதங்களைக் கிளறிவிடுவது போன்ற உபாயங்கள் மூலம் தம்மை நிலை நிறுத்திக் கொண்ட சஞ்சிகைகளும் இலக்கியப் பிரமுகர்களும் பற்றி நிறையவே கூறமுடியும்.

அதைவிடக் கேவலமான பிழைப்பு நூல் வெளியீடு. படைப்பாளிகளிடமிருந்து பணம் பறித்து அவர்கள் மூலம் வெளியிட்டு விழா நடத்தி முதல் பிரதி இரண்டாம் பிரதி என்று மேலும் பணம் கறந்து வாங்கின பணத்துக்கு ஈடாக நூலின் பிரதிகளை வழங்கி அவற்றை விற்றுப் போட்டமுதலை மீட்கிறதற்கு வழி காட்டுகிற பரோபகாரிகள் இங்கு வந்து தங்களது எழுத்துக்களுக்கு நூல் வடிவம் வேண்டி ஏங்குகிறவர்களது அவலத்தைத் தங்களுக்குப் பணமாக்கும் கூட்டத்தில் மணிமேகலைப் பிரசுரத்திற்கு ஈடு இல்லை எனலாம்.

இப்படியெல்லாம் ஈழத் தமிழர் ஏமாறக் காரணம் என்ன? நாம் நமக்கான ஒரு பண்பாடு உடையவர்கள் என்றும் நம்மிடையே உள்ள ஆற்றல்களைக் கொண்டு நம்மை அறிந்து நம்மை மேம்படுத்தி மற்ற எல்லாருடனும் நல்லுறவு பேண வேண்டியவர்கள் என்றும் நாம் மறந்து விடுகிறோம். நமது உயர்வுக்குத் தேவையான பண்பாட்டுச் செயற்பாடுகள் நம்மிடையே நலிந்து வருகின்றன. நமது இசையும் நடனமும் தமிழகத்தில் பார்ப்பனியம் போட்ட கோட்டுக்கு வெளியே நகர மறுக்கிறது. அதை எமது என்று சொல்லி ஏமாறுகிறோம். தமிழகத்திலிருந்து தமது கலைஞர்கட்குக் கிடைக்கிற சிறிய அங்கீகாரமோ வெறும் உபசாரமான புகழுரையோ நமக்குப் போதுமாகிறது. அதை ஏற்படுத்தவல்ல உள்ளுர்த் தரகர்கள் நமது புரவலர்களாக உலா வருகிறார்கள்.

நம்மிடம் வாசிப்புப் பழக்கம் போதாது. இளைய தலைமுறையினரிடம் அதை ஊக்குவிக்கிற ஆர்வமும் நம்மிடம் மிகக் குறைவு. மரபின் பேரால் நடக்கிற கேலிக் கூத்துக்களிலும் சமூகத்திற்கும் தனிமனிதர்கட்கும் கேடான பொழுது போக்குகளிலும் நாசமாகின்ற காசையும் காலத்தையும் நமது எழுத்துக்களையும் மேடைக் கலைகளையும் ஓவியம் சிற்பம் போன்றவற்றையும் அறியவும் ஊக்குவிக்கவும் துணிவோமானால் நம்மை மற்றவர்களின் தயவில் வைத்திருக்கிற அவலம் நமக்கு நேராது.

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வெறும் உணர்ச்சி வசப்பட்டு நம்மைப் பற்றிய போலி அக்கறைகளுக்கும் வஞ்சகமான புகழுரைகளுக்கும் மயங்காமல் வெறுமனே பணத்தை வழங்குவதுடன் தங்களது பொறுப்பு முடிந்து விடுவதாக இல்லாமல் எல்லாவற்றிலும் தொடர்ச்சியான விமரிசன முறையிலான ஈடுபாடு காட்டுவார்கள் என்றால் அவர்கள் தங்களுக்கும் உலகத் தமிழ்ச் சமூகத்திற்கும் நல்ல சேவையாற்றுகிறவர்களாவார்கள்.

தேங்கிய நீரில் தான் பாசி படருகிறது. நோய்பரப்பும் தீய உயிரினங்கள் விளைகின்றன. சமூகம் என்பது பாய்கிற நதி போல எப்போதும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளுமாயின் அது என்றென்றும் உயிரோட்டத்துடன் இருக்கும்.

## கிழக்கை விழுங்கி

9ம் பக்க தொடர்ச்சி

அவ்வாறு இருந்தும் பேரினவாத அதிகாரிகளின் ஆதிக்கமும் பௌத்த மத குருமார் சிலரின் நடவடிக்கைகளும் சிங்கள மயப்படுத்தும் செயற்பாடுகளாகவே இருந்து வருகின்றன. உதாரணத்திற்கு அண்மையில் செய்தியாகவே வந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம். அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரு முஸ்லீம் நாடு சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களுக்காக ஐந்நூறு வீட்டுத்திட்ட த்தை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனால் அதில் அரைவாசி வீடுகளை சிங்கள மக்களுக்கு அதுவும் சுனாமியால் பாதிக்கப்படாதோருக்கு வழங்குமாறு நிர்ப்பந்தம் செய்யப்பட்டது. இதில் சில அதிகாரிகளும் பௌத்த மதக் குருமாரும் முன் நின்றனர் என அறியப்படுகின்றது. இவ்வாறு கிழக்கில் இடம் பெறும் ஒவ்வொரு அபிவிருத்தியிலும் முன்னெடுக்கப்படும் திட்டங்களிலும் திட்டமிட்ட பௌத்த திணிப்பு இடம் பெறுகிறது. இவற்றை மிக உன்னிப்பாக இருந்து செயல்படுத்துவதில் ஜே.வி.பி ஹெல உறுமய மற்றும் தீவிர பௌத்தகுருமார் முன் நிற்கின்றனர். இதனை வெறுமனே தேர்தலுக்கான வாக்கு வங்கிக்குரிய செயற்பாடு என மட்டும் கொள்ளக்கூடாது. இவை போன்ற செயற்பாடுகள் கிழக்கில் தமிழ் முஸ்லீம் தனித்துவத்தை இல்லாமல் செய்வதற்கான பேரினவாத முயற்சிகளேயாகும்.

இவ்வாறே திருகோணமலையின் மூதூர் சம்பூரில் இருந்து வெளியேறிய தமிழ் முஸ்லீம் மக்களை மீளக் குடியமர்த்துவதில் திட்டமிட்ட தாமதங்கள் செய்யப்படுகின்றன. குறிப்பாக சம்பூரில் அமைக்கப்பட உள்ள அனல் மின் நிலையத்திற்காக அங்கு பாரம்பரியமாக வாழ்ந்த வந்த தமிழ் மக்களின் நிலங்கள் சுவீகரிக்கப்பட உள்ளன. அத்திட்டத்துடன் சேர்த்து சிங்கள மக்கள் புதிதாக குடியமர்த்தப்பட்டு வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட உள்ளன. இத்தகைய முயற்சி ஒரு பேரினவாத உள்நோக்கம் கொண்ட திட்டத்தினைக் கொண்டதேயாகும்.

இன்று யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளில் பிரதானமானதாக இருந்து வருவது கிழக்கை பேரினவாதம் விழுங்க எடுத்து வந்த திட்டமிட்ட நடவடிக்கைகளேயாகும். எனவே அரசியல் தீர்வு என ஒன்று உருவாக்கப்படும் போது கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்களினதும் அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களும் விவசாயம் நிலம் நீர் பிற பொருளாதார மையங்களும் பண்பாட்டுத்தனித்துவங்களும் பாதுகாக்கப்படுவதற்கான அடிப்படைகள் இடம் பெறல் வேண்டும். இதற்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் முரண்பாடுகளும் மோதல்களும் உள் உடைவுகளும் ஏற்படாது இருத்தல் அவசியம். அல்லாது விடின் பூனைகள் இரண்டிற்கு குரங்கு அப்பம் பகிர்ந்த கதையாகிக் கொள்ளவே செய்யும். தமிழ் முஸ்லீம் தலைமைகள் தமது சுய இருப்புக்கும் தற்காலிக சலுகைகளுக்கும் பதவிகள் பட்டங்களுக்கும் ஆளாகிக் கொண்டால் அந் நிலைப்பாடு ஒட்டு மொத்த கிழக்கு மாகாணத்தையும் தமிழ் முஸ்லீம் மக்களையுமே பாதித்துக் கொள்ளும். எனவே தூரநோக்கில் மக்களின் நலன்களில் இருந்து சரியான அரசியல் தெளிவுடன் செயல்படுவது தமிழ் முஸ்லீம் தலைமைகளுக்கு அவசியம். வருமுன் காப்போம் என்ற நிலைப்பாட்டில் செயற்பட்டு பேரினவாத நடவடிக்கைகளையும் உள்ளார்ந்த திட்டங்களையும் முறியடிக்கும் வகையில் தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தைப் பேணி முன் செல்ல வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டும் கிரிக்கெட் பந்துப் பிரசாரமும்

மனித உரிமைகள் அரசியலுக்கு அப்பாற்பட்டனவல்ல. விளையாட்டும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. மனித உரிமைகட்கான பல அரசு சாரா அமைப்புகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வலிய அரசு ஒன்றின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதிக்கத்தின் கீழானவை. முற்றிலும் அரசியல் சார்பற்றன என்று சொல்ல இயலாவிடினும் கணிசமான அளவு சுதந்திரத்துடன் செயற்படுகிற சில சர்வதேச மனித உரிமை அமைப்புகளுள் அதிக மதிப்புக்குரியதாக இருந்து வருவது ''சர்வதேச மன்னிப்பு'' (அம்னெஸ்ற்றி இன்ற் நஷனல்) அல்லது ஏ.ஐ. (AI) என அறியப்படும் அமைப்பு. இது பெருமளவும் பொதுமக்களிடமிருந்தே நிதியைப் பெறுவதாலும் மனித உரிமை மீறல்களைப் பற்றி மட்டுமே அக்கறை காட்டுவதாலும் இதன் மீது அரசாங்க நெருக்குவாரங்கள் குறைவு.

1971 ஏப்ரல் கிளர்ச்சியை அடுத்து இலங்கை பற்றிய ஒரு அறிக்கை மூலம் இங்கு கணிசமான பரபரப்பை அது ஏற்படுத்தியது. அந்த அறிக்கை அரச படைகளின் அத்துமீறல்களையும் வீண் கொலைகளையும் கண்டித்திருந்தது. அப்போது ஏ.ஐ. அதிகம் அறியப்பட்ட அமைப்பல்ல. எனினும் உலகின் பல இடங்களிலும் தகவல் ஊடகங்கள் எட்டாத பகுதிகளும் செய்திகளில் பேர் வெளிவராத மனிதர்களும் பற்றி ஏ.ஐ அறிக்கைகள் பேசி இருக்கின்றன. ஏ.ஐ சுற்றுச் சூழல் அழிப்பு வளங்களின் அழிப்பு என்பன பற்றி நேரடியான அக்கறை காட்டுகிற அமைப்பல்ல. ஆனால் மனிதரது அடிப்படை உரிமைகள் யாரால் மீறப்பட்டாலும் அதை ஏ.ஐ அறிக்கைகளாக வெளியிட்டுள்ளது. மனித உரிமைகள் பற்றிப் பேசிக் கொண்டு அரசியலும் வயிற்றுப்பிழைப்பும் நடத்துகிற உள்ளூர் நிறுவனம் எத்தனையும் விட நிதானமானதும் பாரபட்சமற்றதுமான அறிக்கைகளை ஏ.ஐ வெளியிட்டு வந்துள்ளது. இவ்வளவு காலமும் அரசாங்கங்களையும் ஜே.வி. பியையும் விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தின் துணைப்படைகளையும் கண்டித்து ஏ.ஐ அறிக்கைகள் பேசியுள்ளன. ஒவ்வொரு தரப்பும் தமக்குப் பாதகமானதைவிட்டு மறு தரப்புக்குப் பாதகமான அம்சங்களை முக்கியப்படுத்தி ஏ.ஐ அறிக்கைகளைத் தமக்கு வசதியாகப் பயன்படுத்தி வந்துள்ளதற்குக் காரணம் ஏ.ஐ யின் காய்தல் உவத்தலற்ற கண்டிப்பான விமர்சனமே.

நீண்டகாலமாக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டோர் காணாமற் போகச் செய்யப்பட்டோர் பற்றியும் ஏ.ஐ அழுத்தங்களைச் செலுத்திப் பல சமயங்களில் பயன் ஏற்படுத்தியிருக்கிறது. எனவே தான் தனிமனிதர்களின் மட்டத்திலும் ஏ.ஐ பற்றிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

இம் முறை ஏ.ஐ இலங்கை அரசாங்கத்தின் கோபத்தைச் சம்பாதித்துள்ளது. 1971 இல் ஏ.ஐ அறிக்கை அரசாங்கத்தின் மீது மிகையாகக் குற்றஞ் சுமத்துவதாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இம் முறை ஏ.ஐ தனது அதிகாரத்தை மீறிச் செயற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதுடன் ஏ.ஐ அலுவலர்கள் இருவர் இலங்கையின் நிலவரங்களை அறிய இங்கு வருவதற்கான விசா மறுக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் ஏ. ஐ இறுதியாக வந்த தனது அறிக்கையில் இலங்கையில் நடக்கும் ஆட்கடத்தல், படுகொலைகள், காணாமலாக்கல்கள், சிறார்களைக் கடத்திச் சென்று படையில் சேர்த்தல் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட சந்தேகத்திற்குரிய எல்லாத் தரப்பினரையும் வேறுபாடின்றிக் கண்டித்திருந்தது. எனினும் நடந்து முடிந்த ஒரு நாள் கிரிக்கட் உலகக் கிண்ணப் போட்டியின் போது இலங்கை பற்றிய கவனம் மிகுந்திருந்ததால் அத் தருணத்தைப்




பாவித்து ''இலங்கை: விதிகட்கமைய விளையாடுக'' என்ற சொற்களைச் வெள்ளைக் கிரிக்கட் பந்துகளில் பொறித்துக் கையொப்பங்களைச் சேகரிக்கும் முயற்சியில் இறங்கியமே யூ என். பி உட்பட இலங்கையின் எல்லாச் சிங்களப் பேரினவாத அரசியற் கட்சிகளதும் சினத்துக்குக் காரணம்.

ஏ.ஐ. விளையாட்டை அரசியலாக்குகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால் மனித உரிமை மீறல்களைக் காரணங்காட்டி எத்தனையோ நாடுகள் சர்வதேச விளையாட்டுக்களிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன. எத்தனையோ நாடுகட்கு எதிராகப் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. தென்னாபிரிக்கா 1980கள் முதலாகச் சில ஆண்டுகளாகவே சகல விளையாட்டுகளிலும் சர்வதேச அரங்கிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. அதன் நிற வெறிக் கொள்கைக்கு எதிரான ஒரு முக்கியமான நெருக்குவாரமாய் அது அமைந்தது. அக்காலத்தில் காசுக்காக இலங்கையின் கிரிக்கட் அணியைச் சேர்ந்த சிலர் தென்னாபிரிக்காவுக்குப் போய் விளையாடி அதன் விளைவாக இலங்கை அணியில் விளையாட இயலாமற் போனது சிலருக்கேனும் நினைவிருக்கலாம்.

ஏ.ஐ இலங்கை பற்றி நடத்தும் பிரசாரம் இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி உலகின் சவனத்தை ஈர்க்கும் முயற்சியே ஒழிய இலங்கைக்கு எதிரான தடையை வற்புறுத்தும் முயற்சியோ இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிரான பிரச்சாரமோ அல்ல. எனினும் நமது பிரதான சிங்கள. ஆங்கில ஊடகங்களும் அரசாங்க, முதலாளிய நிறுவனச் சார்பான தமிழ் ஊடகங்களும் இதை ஏ.ஐ. க்கும் இலங்கைக்கும் எதிரான ஒரு மோதலாகக் காட்ட முயன்று கடும் எதிர்ப் பிரசாரத்தை முடுக்கி விட்டன.

அதன் விளைவாக ஏ.ஐ சோர்ந்து போகவில்லை. அது தனது காரியத்தில் கவனம் பிசகாமலும் இலங்கை அரசாங்க எதிர்ப்பின் காரணமாக அரசாங்கத்திற்கெதிரான பிரச்சாரத்தை முன்னெடுக்காமலும் நடந்து கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கம் ஏ. ஐ யின் பிரசார நடவடிக்கையைக் கண்டித்திருந்த போதும் ஏ.ஐ தனது விளக்கத்தை அளித்தற்கும் அப்பால் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்ட முனையவில்லை.

பேரினவாதிகள் ஏ.ஐ. மீது சினப்பதிலும் விடத் தங்கள் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவும் முடிந்தால் முடிவுகட்டவும் முயல்வதும் விமர்சனங்கட்கு உரிய விளங்கங்களைத் தருவதும் பொருத்தமானது. ஆனால் அவர்களது கோபத்திற்கும் காரணம் உண்டு.

''மடியில் கனமிருந்தால் தான் வழியிற் பயமிருக்கும்'' என்று ஒரு பழமொழி உண்டு. அரசாங்கம் உண்மையில் ஏ.ஐ க்கும் பயப்படவில்லை. அது தனது நிழலுக்கு அஞ்சுகிறது.

ஏ.ஐ. அறிக்கை பற்றித் தமிழர்கள் மகிழவோ பெருமைப்படவோ எதுவும் இல்லை. ஏனெனில் மனித உரிமை மீறல்களில் அரசாங்கத்திற்கு ஈடுகொடுக்கும் அளவுக்குத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் நீண்டகாலமாகவே மனித உரிமை மீறல்கள் நடந்து வந்துள்ளது.

இந்த நாட்டில் இப்போது விதிகள் இல்லாது போய்விட்டன. விதிகட்கமைய எப்படி விளையாடுவது என்பது தான் ஏ.ஐக்கு நாம் சொல்லக்கூடிய பதில். இனி மக்கள் தமது ஆட்டத்தைத் தொடங்கும் வரை விதிகளும் இராது. விளையாட்டும் நன்றாக அமையாது.

— தேசபக்தன்

# இழுத்து மூடப்படவிருக்கும் சர்வதேச நாணய நிதியம்

பின்தங்கிய நாடுகளுக்கு கடன் உதவிகள் வழங்குவதற்கென ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்பட்ட சர்வதேச நாணய நிதியம் பின்தங்கிய நாடுகளின் மக்களுக்கான சமூகநலன்புரி திட்ட ங்கள் எதனையும் முன்னெடுக்க விடாதவாறு தடையாக இருந்து வருகிறது. பின்தங்கிய நாடுகளில் அரசுடைமையாக இருந்த பொருளாதாரங்களை மறுசீமைப்பு என்ற பெயரில் தனியார் உடைமையாக்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் வழிகாட்டுகிறது. மக்கள் நலன்சார் திட்டங்களை இல்லா மலாக்குவதில் அந்நாடுகள் மீது அழுத்தங்களை கொடுத்து அவற்றின் தேசிய பொருளாதாரத்தை ஏகாதிபத்திய உலகம யமாதலுக்கு ஏற்றவாறு சிதைத்தும் வருகின்றது.

ஏகாதிபத்தியங்களுக்கு உதவும் அதனுடைய காரியங்கள் முடிவடைந்துவிட்டன. அதனால் அது கலைக்கப்படவிருப்பதாக தெரிகிறது. வளர்ச்சியடைந்த நாடுகள் அதற்கென கொடுத்து வந்த நிதியை நிறுத்திக் கொண்டன. அதனால் நிர்வாகமும் நடைபெறுவதாக இல்லை.

சர்வதேச நாணய நிதியத்தினூடாக ஏகாதிபத்தியம் அதனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டுள்ளதால் தொடர்ந்து அதற்கான தேவை இல்லை. அதனால் அதனை இழுத்து மூடிவிட ஏகாதிபத்திய நாடுகள் தீர்மானித்துள்ளன. மே முதலாம் திகதி வெனிசுல அதிபர் கி. பே. சாவேஸ் தமது நாடு உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். ஏனைய நாடுகளும் இதனை பின்பற்ற வேண்டும். எனக் கேட்டுள்ளார்.

## மேதினம் குறித்து

7ம் பக்க தொடர்ச்சி

ளாதாரக் கோரிக்கைகளையும் சேர்த்துக்கொண்டதை லெனின் சினந்துகொண்டார். காரணம் மே தினத்தின் அரசியல் தன்மை எந்த விதத்திலும் மங்கக் கூடாது என்று விரும்பினார். அவர் இந்த முன்னு ரையில் பின்வருமாறு எழுதுகிறார்.

''8 மணி நேர வேலை எனும் இந் த முதல் கோரிக்கையானது உல கெங்கிலுமுள்ள பாட்டாளி மக்கள் வைத்துள்ள பொதுவான கோரிக் கையாகும். இந்த கோரிக்கையை முன்வைத்தலிருந்து கார்கோவின் வளர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் சர்வதேச சோசலிஸ தொழிலாளர் இயக்கத்தோடு தங்கள் ஐக்கியத் தை உணர்கிறார்கள் என்பது தெரிகிறது.''

குறிப்பாக இந்த ஒரு காரணத்திற் காகவே இது போன்ற ஒரு கோரி க்கையை மேஸ்திரி ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். பத்து செண்ட் ஊதிய உயர்வு வேண்டும் போன்ற சாதாரண கோரிக்கைகளு டன் சேர்த்து வைக்கக் கூடாது. எட்டு மணி நேர வேலை நாள். பாட்டாளி வர்க்க முழுமைக்குமான ஒரு கோரிக்கையாகும். அது சமர் ப்பிக்கப்படுவது தனிப்பட்ட முதலாளிக ளிடத்தில் அல்ல. உற்பத்திக் கருவிகளின் சொந்தக்காரர்களான முதலா ளித்துவ வர்க்கத்திடம் தற்போதைய அரசியல் பொருளாதார அமைப்பின் பிரதிநிதியாக இருந்து சமர்ப்பிக்கப்படு வதாகும்.

மே தின அரசியல் முழக்கங்கள்

உலகெங்கிலுமுள்ள பாட்டாளி மக்க ளுக்கு மே தினம் ஓர் ஈர்க்கும் முனையாக மாறியது. மே தின ஆர்ப்பாட்டங்களின் போது 8 மணி நேர வேலைநாள் என்ற பிரதானக் கோரிக கையோடு மற்ற முக்கியமான கோரிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டார்கள். உலகத் தொழிலாளர் ஒற்றுமை. எல் லோருக்குக்கும் ஒரே மதிரியான ஓட்டுரிமை ஏகாதிபத்தியப் போர் மற்றும் காலனி ஆதிக்க எதிர்ப்பு தெருக்களில் ஆர்பாட்டம் செய்யும் உரிமை அரசியல் மற்றும் பொரு ளாதார ஸ்தாபனம் கட்டும் உரிமை போன்றவை அந்தக் கோரிக்கை களில் சிலவாகும். மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடுவதன் மூலமும் எல்லா நாட்டிலுமுள்ள தொழிலாளி வர்க்கம். சர்வதேச ஐக்கிய மற்றும் தோழமை யுணர்வு அடிப்படையில் மே தினத்தன்று உலக மக்களை வணக்கம் செய்கிறது.

மேதின வரலாறு

அலெக்ஸாண்டர் ட்ரதச்டென்பர்க்

நூலில் இருந்து ஒருபகுதி.

## பிரித்தானிய சாம்ஜயிம்

10ம் பக்க தொடர்ச்சி

நட்ட ஈடு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. எனவே இருசாராரும் ''கவலை'' தெரிவிப்பதோடு நிறுத்திக் கொண்டனர்.

சிலவருடங்களுக்கு முன் ஜமேய்க்காவிலிருந்து ஒரு ஆபிரிக்க அமைப்பு இந்த விடயம் தொடர்பாக தற்போதைய இரண்டாவது எலிசபெத்மகாராணிக்கு கோரிக்கைவிடுத்தது. அந்தக் கோரிக்கை தொடர்பாக ''மாட்சிமை தங்கிய மகாராணி'' நழுவல் பதில்லொன்றையே அனுப்பியிருந்தார்.

''இன்று ஒருவரை அடிமை கொள்வதென்பது மனித சமுதாயத்திற்கு எதிராக இழைக்கப்படும் பாரிய குற்றம் எனச் சர்வதேச சட்டம் கூறுகிறது. அடிமை வியாபாரம் நடந்த சமயம் இது ஒரு குற்றம் அல்லவென்பதுடன் அன்றைய சர்வதேச சட்டத்திற்கு முரண்பட்டதுமல்ல. அதனாலேயே ஐக்கிய இராச்சிய அரசாங்கமும் அதற்கு (அடிமை வியாபாரத்திற்கு) அனுமதி வழங்கியது'' என மழுப்பல் நியாயம் கூறிக்கொண்டார்.

இன்று ஆபிரிக்காவில் மிக மோசமான சுரண்டல் இடம் பெற்றுவருகிறது. அதனை முன்னெடுப்பவர்கள் முன்பு அடிமை வியாபாரத்தால் கொள்ளை லாபம் பெற்ற ஐரோப்பிய-அமெரிக்க மேற்குலகத்தவர்களேயாவர். ஆபிரிக்காவின் இன்றைய வறுமைக்கும் கொடிய பட்டினிச் சாவுகளுக்கும் காரணமானவர்கள் இதே மேற்குலக சக்திகளாகவே உள்ளனர். ஆனால் இயற்கை அழிவுகளும் நாகரீக வளர்ச்சி இன்மையும் சனத்தொகை எயிற்நோய் போன்றனவும் பின்தங்கிய சமூக பொருளாதாரக் காரணங்களுமே ஆபிரிக்க வறுமைக்கு காரணம் என மேற்குலக நிபுணர்கள் கூறி உண்மைகளை மறைத்து வருகின்றனர்.

ஆபிரிக்க நாடுகளில் சுரண்டப்பட்ட வளங்களுக்கும் அடிமைகளின் சந்ததியினருக்கும் போதிய நட்ட ஈடும் அபிவிருத்திக்கான உதவிகளும் மேற்குலகினால் வழங்கப்படவேண்டும் என சில விமர்சகர்கள் பொருளாதார நிபுணர்கள் கூறி வருகின்றனர். ஆனால் அமெரிக்கா மேற்குலக கூறி வருகின்றனர். ஆனால் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சுரண்டல் பிசாசுகள் தமது முன்னைய அடிமை வியாபாரத்திற்காக அல்லது வேலைவாங்கப்பட்டதற்கான உந்த இழப்பீட்டையும் வழங்கத்தயாராக இல்லை. எனவே ஆபிரிக்க மக்கள் ஏகாதிபத்திய சூழ்ச்சிகளையும் சுரண்டலையும் எதிர்த்து எழ வேண்டும். கொலனித்துவத்தை போராடியது போன்று தற்போதைய ஏகாதிபத்திய உலகமயமாதலையும் எதிர்த்த நவகொலனித்துவத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

தொகுப்பு ~ சிறீ

# தென்னமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள்

தென்னமெரிக்க கரீபியன் நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பானது அலை அலையாக எழுந்தவண்ணம் உள்ளன. தென்னமெரிக்க நாடுகளின் வளங்களைச் சுரண்டிக் கொள்ளையிட்டு வந்த வரலாறு தற்போது தடுத்து நிறுத்தப்படும் கட்டத்தை அடைந்துள்ளது.

அண்மைக்காலங்களில் பல தென்னமெரிக்க நாடுகள் தேர்தல்கள் மூலம் இடதுசாரிக்கட்சிகளின் ஆட்சி ஏற்பட வாய்ப்பளித்தது. வெனிசுலா போலிவியா நிக்கரகுவா, சிலி, பிரேசில் ஈக்குவோடர், ஹெய்ற்றி போன்ற நாடுகள் சொந்தக் கால்களிலும் சுய பொருளாதார மேம்பாட்டிலும் தமக்குரிய திட்டங்களை வகுத்து வழிநடக்க முனைந்து நிற்கின்றன. அமெரிக்காவின் காவல் நாய்கள் போன்று தென்னமெரிக்க நாடுகளில் சர்வாதிகார ஆட்சி நடாத்தி வந்த பிற்போக்கு கும்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ச்சி கண்டு வந்துள்ளன.

அந்தவகையில் கியூபாவின் முன் மாதிரியைக் கொண்டு அதனுடன் இணைந்து அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் முன்னோக்கிச் செல்வதில் வெனிசுலேவா அதிபர் கியூகோ சாவேஸ், போலிவிய அதிபர் மோறாயலஸ் போன்றோர் முன்னணியில் இருந்து வருகின்றனர். அண்மையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தனது பொருளாதார அரசியல் நோக்கங்களை வலுப்படுத்த தென்னமெரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அந் நாடுகளில் பல லட்சம் மக்கள் புஷ்சின் வருகையை எதிர்த்து ஆர்ப்பட்டங்களில் ஈடுபட்டனர்.



அதேவேளை வெனிசுலேவா ஜனாதிபதி கியூகோ சாவேஸ் அதே தென்னமெரிக்க நாடுகளுக்கு நட்புறவை வலுப்படுத்தி மக்களை ஐக்கியப்படுத்தும் பயணங்களை மேற் கொண்டார். அவரது வருகையால் அந்நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் அவற்றின் இயக்கங்களும் பெரும் உற்சாகம் கண்டன. அதேவேளை மக்கள் உற்சாக வரவேற்புகளையும் சாவேசுக்கு வழங்கினர். இது அமெரிக்காவிற்கும் அதன் அதிபருக்கும் முகத்தில் கரி பூசியது போன்றாகியது.

அண்மையில் அல்பா (ALBA) என்னும் அமெரிக்காவிற்கு மாற்றான போலிவீரியன் அமைப்பு தனது 5வது உச்சி மாநாட்டை இரண்டு நாட்களாக நடாத்தியது. இம் மாநாட்டின் ஈவோ மொறாலெஸ் (பொலிவியா) டானியல் ஒட்டேகா (நிக்கரகுவா) ரேஸ்நி (ஹெய்ட்டி) கியூகோ சாவேஸ் (வெனிசுலா) கார்லோஸ் லேகொ (கியூபா) ஆகிய தலைவர்கள் கலந்து கொண்டனர். மேலும் இம் மாநாட்டிற்கு ஈக்குடார். உறுகுவே டொமினிக்கியூ செென். வின்சன்ர, கிறனாடின்ஸ் ஆகிய நாடுகள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன.


வெனிசுலேவா உலகின் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாகும். இதுவரை அதன் முழு லாபத்தையும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய கம்பனிகளே கொள்ளையிட்டுச் சென்றன. சாவேஸ்சின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாகத் தடுத்து நிறுத்தப்பட்டது. அதன் லாபங்கள் அனைத்தும் வெனிசுலேவா மக்களின் வறுமை ஒழிப்பிற்கும் கல்வி சுகாதார மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி ஏனைய பின் தங்கிய லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்திக்கும் உதவியாக வழங்கப்பட்டும் வருகின்றன. அவ்வாறே பொலிவியாவின் இயற்கை வாயு உற்பத்தியின் லாபம் வெளியே எடுத்துச் செல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. வருகின்றார். கியூபாவு டனும் தோழர் காஸ்ரோ மீதும் பெருமதிப்புக் கொண்டுள்ள சாவேஸ் சோஷலிசத்தை நோக்கிச் செல்வதாகவே அடிக்கடி கூறி வருகிறார். அவர் கூறிநிற்கும் சோஷலிசம் எவ் வாறானது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் சாவேஸ் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போலிவீயா நிக்கரகுவா மற்றும் தென்னமெரிக்க நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து பொருளாதார அரசியல் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை வரவேற்கத்தக்கதும் நம்பிக்கை தரக்கூடியதுமாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு செயற்பாடானது அமெரிக்காவிற்கு பெரும் சவாலாகவே அமைந்து வருகின்றது. அந்த வகையில் அந் நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளையும் தலைவர்களைக் கொல்வதையும் சி.ஐ.ஏ. போன்ற அமைப்புகள் நோக்காகக் கொண்டு செயல் பட்டும் வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அமெரிக்க வேர்ஜீனிய துப்பாக்கிச் சூடும் உலக மக்களது வலி வேதனைகளும்

கடந்த மாதம் 16ம் திகதி அன்று அமெரிக்காவின் வேர்ஜீனிய தொழில் நுட்ப பல்கலைக்கழக வளாகத்தில் மாணவன் ஒருவனின் துப்பாக்கி சூட்டிற்கு 32 மாணவர்கள் பலியாகினர். சில மாணவர்கள் காயமடைந்தனர். இறுதியில் கொலையாளியான அமெரிக்க வாழ் தென்கொரியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஷொஸியுங் கியூ என்ற அம்மாணவன் தற்கொலை செய்து கொண்டான். இவ்வாறான பல்கலைக்கழக- பாடசாலைக் கொலைகள் அமெரிக்காவிற்கு அதிர்ச்சி தரும் புதிய விடயங்கள் அல்ல. இவற்றுக்கு வெளியே இத்தகைய கொலைகள் திட்டமிட்டும் திடீர் திடீர் எனத் தோன்றும் சூழ் நிலைகளாலும் இடம் பெறுவது அமெரிக்க சமூக வாழ்வில் சகஜமானதாகும். வருடாந்தம் 30 ஆயிரம் பேர்வரை இத்தகைய கொலைகளால் இறக்கின்றனர். அமெரிக்காவின் மொத்த சனத்தொகை 30 கோடி பேர். ஆனால் 20 கோடி துப்பாக்கிகள் புளக்கத்தில் இருந்து வருகின்றன என்றால் அங்கு துப்பாக்கிகளுக்கு வழக்கப்பட்டுள்ள சுதந்திரத்தை கண்டு கொள்ள முடியும். அங்கு துப்பாக்கிகளை விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்கள் தாராளமாக இருந்து வருகின்றன. அத்துடன் துப்பாக்கிகள் வாங்குவதற்கும் வைத்திருப்பதற்குமான கட்டுப்பாடுகள் மிகக் குறைவானதாகும்.

அதனால் மாணவர்கள் முதல் வயதானவர்கள் வரை தாராளமாக குடும்பங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் திட்டமிட்ட வழிகளிலும் திடீரென உருவாகும் ஆத்திர சூழலிலும் மிக எளிதாகவே துப்பாக்கிச் சூடுகள் இடம் பெறுகின்றன. உலகிலேயே சிறைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கையில் அமெரிக்கச் சிறைகளில் இருப்பவர்களது எண்ணிக்கையே முதல் தரமானதாகும். ஆண்கள் பெண்கள் இளைஞர் யுவதிகள் உட்பட இருபது லட்சம் பேர் அமெரிக்கச் சிறைகளில் இருந்து வருகின்றனர். இதுவும் அமெரிக்க சுதந்திரத்தினதும் ஜனநாயகத்தினதும் பிரிக்க முடியாத பகுதியாகக் காணப்படுகின்றது. அமெரிக்காவில் துப்பாக்கிகள் வைத்திருக்கவும் பயன்படுத்தவும் சட்டம் பெரிய தடையாக இல்லை. இதற்குக் காரணம் அங்கு கொடிய விலங்குகளோ அந்நிய ஆயுதம் தரித்த எதிரிகளின் அபாயம் இருப்பதோ அல்ல. ஆயுத வியாபார நோக்கத்திற்காகவே அங்கு கட்டுப்பாடும் கண்காணிப்பும் தளர்ந்த நிலையில் இருந்து வருகின்றது. ஆயுத உற்பத்தியாளர்களும் விநியோகத்தர்களும் வியாபாரிகளும் உலக ரீதியாக கொள்ளை லாபம் பெற்று வருவது போலவே உள்நாட்டிலும் லாபம் அடைந்து வருகின்றனர். இவ்வாறு உள் நாட்டு ஆயுத விற்பனையில் அதிகம் விற்பனையாகிக் கொள்வது மென்ரக ஆயுதங்களேயாகும். இதனாலேயே உலக அளவில் மெனரக ஆயுத உற்பத்தியை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பல நாடுகள் வற்புறுத்திவரும் சூழலில் அமெரிக்கா அதனை ஏற்றுக் கொள்ளாது மறுத்து வருகின்றது. உலக மக்களைக் கொன்று குவித்துக் கொள்வதற்கு அமெரிக்கா கனரக ஆயுதங்களை நவீனமானவையாகத் தொடர்ந்து உற்பத்தி செய்து விற்பனையாக்கி வருகின்றது. அதேவேளை உள் நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் கொல்லப்படுவதற்கு மென்ரக ஆயுதங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு விட்டு வருகின்றது. யுத்தமும் இரத்தமும் இன்றி ஏகாதிபத்தியத்தால் சீவிக்க முடியாது என்ற கூற்று நூற்றுக்கு நூறு உண்மையானது. உள் நாட்டிலும் சரி உலக நாடுகளிலும் சரி எத்தனை மனிதர்கள் கொலையுண்டாலும் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு பிரச்சினை இல்லை. லாபம் லாபம் அதிக லாபம் கிடைத்தால் போதுமானது. அதற்கான சமூக பண்பாட்டுத்



தளங்களில் எத்தகைய கேடுகெட்ட கலாச்சாரத்தையும் வைத்திருக்க அவர்கள் தயாராகவே உள்ளனர். அதில் ஒன்றே துப்பாக்கி வைத்திருந்து சுதந்திரமாகப் பயன்படுத்தும் கீழ்த்தரக் கலாச்சாரமாகும். அமெரிக்கர்கள்- வெள்ளையர்கள், படித்தவர்கள் உலகிற்கே நாகரீகம் கற்றுத் தருபவர்கள் என்று அடிமை விசுவாசிகளால் வீணீர் வழியப் புகழ்பாடும் ஏகாதிபத்திய நாட்டிலே தான் சுதந்திர துப்பாக்கிச் சூடுகள் இடம் பெற்றிருக்கின்றன.

இத்தகைய துப்பாக்கிச் சூடுகள் அப்பாவிய அமெரிக்க மக்களை படுகொலைகளுக்கு உள்ளாக்கி வருவது கவலைக்கும் அனுதாபத்திற்குரியதாகும். அதேவேளை அமெரிக்காவின் கொடூர ஆயுதங்களாலும் வெடிகுண்டுகளாலும் ஈராக் ஆப்கானிஸ்தான் உட்பட்ட உலக நாடுகளில் கொல்லப்படுபவர்களின் வலி வேதனை அவலக் குரல்கள் எத்தகையவை என்பதை அனுபவரீதியாக அமெரிக்க மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தையும் மேற்படி கொலைச் சம்பவங்கள் அடிக்கடி நினைவூட்ட வைக்கின்றன என்பதையும் கண்டு கொள்ளலாம்.

# உலக வங்கித் தலைவரின் காதல் பரிசு! நாற்றமடிக்கும் ஏகாதிபத்திய பண்பாடு!

உலகவங்கியின் தலைவர் போல் வுல்போவிட்ஸ் தனக்குக் கீழ் வேலை செய்யும் தனது காதலியான றிசா என்பவருக்கு முறையற்ற விதத்தில் அதிகபட்ச சம்பள உயர்வை வழங்கியுள்ளார். அதனால் அவரை தலைவர் பதவியிலிருந்து விலகும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இரண்டு வாரங்களாக மௌனமாக இருந்த வுல்போவிட்ஸ் தான் முறையான விதத்தில் திறமையை கருத்தில் கொண்டே தனது காதலிக்கு சம்பள உயர்வை வழங்கியதாகக் கூறியுள்ளார்.

அவர் இப்போது இவ்வாறு கூறினாலும் ஏற்கனவே தான் அத்துமீறி நடந்து கொண்டதாக கூறியிருந்தார். றிசா தனது காதலி என்பதற்காக முறையற்ற விதத்தில் அவருக்கு அதிகபட்ச சம்பள உயர்வை வழங்கியதற்கான ஆதாரங்கள் வெளியாகி இருந்தன.

உலகவங்கியும், சர்வதேச நாணயநிதியமும் சர்வதேச வர்த்தக நிறுவனமும் உலகமக்கலையும் அபிவிருத்தியடையாத நாடுகளையும் சுரண்டுகின்ற ஏகாதிபத்திய உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்ற ஏகாதிபத்திய நிறுவனங்களாகும். அவற்றை தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது.

அதில் உலக வங்கியின் தலைவராக இருப்பவர் அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு செயலராக இருந்த வுல்போவிட்ஸ் ஆவார். அவர் ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமிப்பதற்கான திட்டங்களை தீட்டியவர்களில் ஒருவராவார். ஏகாதிபத்திய உலகமயமாதல் என்பது ஏகாதிபத்தியத்திற்கான உலகலாவிய சந்தை வாய்ப்பையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டிக் கொள்வதற்கான பொருளாதார திட்டங்களுடன் இராணுவ வலைப்பின்னலையும் அரசியல்திட்டங்களையும் கொண்டதாகும். அதற்கு வுல்போவிட்ஸ் போன்றவர்கள் நிறையவே பங்களிப்பு செய்துவருகின்றனர்.

ஏகாதிபத்திய- முதலாளித்துவ பண்பாட்டில் சுரண்டல் மேலாதிக்கம் அடக்குமுறை உரிமைமீறல்கள் போன்றன பகுதியாகவும் முழுமையாகவும் இருப்பதுபோன்று ஊழல்கள் மோசடிகள், லஞ்சம், தனிப்பட்ட பக்கச்சார்ப்புகள், பிறழ்வுகள் போன்றன மிகவும் அடிப்படையாக இருக்கும் என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. அதுதான் ஏகாதிபத்தியத்தின் உயர் அதிகாரியான வுல்போவிட்ஸிடமும் காணப்படுகிறது. முதலாளித்துவ அமைப்பில் நீதி நேர்மை உண்மை திறமை போன்றவற்றுக்கெல்லாம் விலைகள் இருக்கின்றன.

அந்தவகையிலேயே வுல்போவிட்ஸ் அவரது காதலி றிசாவிற்கு சார்பாக நடந்து கொண்டு முறையற்றவகையில் அவருக்கு அதிகபட்ச சம்பள உயர்வை வழங்கியுள்ளார். முதலாளித்துவ சமூகத்தில் அவையெல்லாம் நடைமுறையில்லாதன போன்று வுல்போவிட்ஸ் அத்துமீறி நடந்து கொண்டதாக குற்றஞ்சாட்டி அவரை பதவி விலகிவிடும்படி அமெரிக்க உயரதிகாரிகள் சிலர் கேட்டுள்ளனர். இதெல்லாம் வெளிவேடமாகும். முதலாளித்துவ சமூகத்தில் நல்ல சமூக ஒழுக்கங்களுக்கு இடமிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் ஏமாற்று முயற்சிகளாகும்.

வுல்போவிட்ஸ் ஒழுக்கமுள்ளவராக இருப்பதைவிட அவர் சிறந்த ஏகாதிபத்திய அதிகாரியாக இருப்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு தேவையாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# நந்தனார் கதை இன்னுமொரு மறுவாசிப்புக்கான தேவை

நந்தனார் கதை பெரிய புராணத்திலிருந்த சில குறிப்புக்களின் அடிப்படையில் விருத்தி செய்யப்பட்டது. அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவராக நந்தனார் கொண்டாடப்படுமளவுக்கு நந்தனார் என்ன செய்தார்? சிதம்பரம் போகிற மன உறுதியுடன் எவ்வாறோ ஒரு நாள் சிதம்பரம் போகிறார். போகிற வழியில் ஒரு கோயிலின் வெளியில் நின்று வழிபட்ட அவரது காட்சியிலிருந்து சிவபெருமானை மறைத்த ஒரு பெரிய நந்தியின் சிலையைச் சிவபெருமான் "சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்று சொல்லி விலகி அமரச் செய்ததாகவும் கதை உள்ளது. அவ்வாறு விலகிய நிலையில் நந்தி அமைக்கப்பட்ட ஒரு கோயிலும் உள்ளது என அறிகிறேன். சிதம்பரம் சேர்ந்த நந்தனார் சோதியிற் கலந்தார் என்று பெரிய புராணம் சொல்லுகிறது.

பகுத்தறிவுக் கண்ணோட்டத்திற் பார்த்தால் நந்தனார் ஏதோ சமூகத் தடைகளைத் தாண்டிச் சிதம்பரம் போனார் என்பதைவிட மற்ற எதுவுமே மரபிற் சொன்ன விதமாக நடத்திருக்க இயலாது. பின்னைக் கால ஆய்வுகள் நந்தனார் சோதியிற் கலக்கவில்லைத் தீயுட் தள்ளப்பட்டார் என்ற கருத்தை வற்புறுத்தின. இது இன்றுவரை சிதம்பரத்திற் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இறுக்கமான பிராமண சாதியக் கெடுபிடிகளுக்கு உடன்பாடானது. இதை மறுத்து நந்தனார் தானாகவே தீயுட் புகுந்தார் என்று இந்துத்துவவாதிகள் ஒரு புதிய கதையைப் பரப்பத்தொடங்கியுள்ளனர். நந்தனார் சிதம்பரம் போகவோ கோயிலுக்குட் புகவோ அக்காலத்தில் ஒரு பிராமணரும் தடையாக இருக்கவில்லை என்றும் நந்தனார் ஊரிலிருந்து புறப்படாமல் ஒரு வேதியர் தடுத்தார் என்பது 19ம் நூற்றாண்டில் நந்தனார் கதையை ஒரு இசை நாடகமாக்கிய கோபால கிருஷ்ண பாரதியாரின் அரசியல் சமூக சீர்திருத்த நோக்கிலான புனைவு என்றும் அது தீண்டாமையை மிகையாக வற்புறுத்திப் பிராமணரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முனைகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். நந்தனார் பற்றிய நாட்டார் வழக்குக்கள் உள்ளன. அவை பற்றிய ஆய்வுகள் எவ்வளவு தூரம் ஆழமாகச் செய்யப்பட்டுள்ளன என்று எனக்கு தெரியாது.

இயலவில்லை. எனவே சாதி வேறுபாடுகள் இருந்தாலும் அது சமூகக் கொடுமையாக இருக்கவில்லை என்று கதையை மாற்றுகிறார்கள். எந்த உண்மையான சைவனும் சிவத் தலங்கட்குப் போகத் தடை விதிக்கப்படவில்லை என்பது அவர்களது வாதம். அதற்கான ஆதாரங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை.

சாதிய அடக்குமுறையும் நிறவாத அடக்குமுறையும் றுவாண்ட–புறுண்டியில் இருந்து வந்த இன அடிப்படையிலான அடக்குமுறைகளும் எப்போதுமே மேலிருந்து செயற்படும் வன்முறைகளாக இருக்கத் தேவையில்லை. ஒரு தலைமுறையை அடிமைப்படுத்தி அடக்கி வைத்த பிறகு அடிமைப்படுத்தப்பட்ட சமூகப் பிரிவினர் சமூ கத்தில் தமது இடம் என்னவென்று ஏற்றுக் கொள்ளுகின்றனர். பின்னர் எவரேனுங் கிளர்ந்து எழமுற்பட்டால் ஆளுகிற சமூகம் உடனேயே சவுக்கை எடுப்பதில்லை அடக்கப்பட்ட சமூகமே கிளர்ச்சியை அடக்க முனைகிறது. அடக்கு முறையின் வன்முறை யைவிட அது பற்றிய அச்சம் வலியது. கிளர்ச்சி பரவுகிற வாய்ப்பு உண்டா என்று கவனித்தே வன்முறை சட்டவிரோதமாகவோ சட்டத்துக்குட்பட்டோ பிரயோகிக்கப்படும். எனவே ஒடுக்கப்பட் டோர் தாமாகவே ஒதுங்கிப் போவது வன்முறை இல்லாததால் அல்ல. ஏற்கப்பட்ட சமூக நடத்தை ஒன்றிற்கு ஏற்ப இயங்குமளவு க்கு வன்முறை பற்றிய அச்சம் அடிமைச் சமூகத்தால் உள்வாங்கப் பட்டு விட்டதாலேயே அச் சமூகம் ஒதுங்கிப்போகிறது. இதற் கான சான்றுகளை அமெரிக்காவின் அடிமை முறையின் அமை தியான காலங்களிலும் தென்னாபிரிக் நிறவெறி ஆட்சியின் அமைதியான காலங்களிலும் காணலாம். அடிமைத்தனத்தைப் பேண அளவு மீறிய வன்முறை உதவாது. அடிமைச் சமூகம் வன்மு றையை உள்வாங்கிக் கொள்ளாதுதான் அடிப்படையான தேவை. அதன் பின்பு வன்முறை அளவுடன் நேரமறிந்து பிரயோ கிக்கப்படுகிறது. நந்தானார் மீது வன்முறை நேரமறிந்து ஏவப்பட்டது என்பது நம்பக்கூடியது. சாதிய ஒடுக்குமுறை அன்றைய சமூகத்தில் நன்றாக ஊறிப்போய் ஒடுக்கப்பட்டோரால் ஏற்கப்பட்டுவிட்டது என்பதும் அதே அளவு நம்பக்கூடியது. அக்காரணத்தால் அதை வெளி

**நந்தனார் கதையை பி.ஜே.பி இந்துத்துவாதிகள் திரிபுபடுத்தி தமக்குரிய பாணியில் கூறி வருகிறார்கள் அதன் வழியில் கொழும்பிலும் நந்தனார் கதை நாடகமாக மேடையேற்றப்பட்டது. அதனை வைத்தே இம் மறுவாசிப்பு எழுதப்பட்டுள்ளது.**

நந்தனார் சிதம்பரம் போவதை நாளை நாளை எனப் பிற்போட்டு வந்ததால் திருநாளைப் போவார் என்று அழைக்கப்பட்டதாகப் பெரியபுராணம் கூறுகிறது. நந்தனாரின் பயணத்திற்கான தடை வெளியாரின் செயல் என்பது கோபால கிருஷ்ண பாரதியாரின் விளக்கம். அவர் அறிந்த சமூகத்திற் பிராமணர் பெரும் நிலச் சொந்தக்காரர்களாயிருந்ததோடு சமூக ஆதிக்க நிலையிலும் இருந்தனர். எனவே ஒரு பிராமணர் தடையாக இருந்தார் என்று அவர் கதையை விருத்தி செய்தது அவரது சாதிய மறுப்புச் சமூகச் சீர்திருத்த நோக்கத்திற்கு உடன்பாடானது.

அதை மறுப்பவர்களான தமிழக இந்துத்துவவாதிகள் தமது நந்தனார் கதையில் நந்தனாருக்குத் தடையாக இருந்தது அவர் தனக்குச் சிதம்பரம் போகும் தகுதி உண்டா என்று தனது தாழ்ந்த நிலையைக் கருதித் தயங்கியமை எனப்படுகிறது. அவர்களவில் நந்தனார் சோதியிற் கலந்தது அவரது சொந்த முடிவு.

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. நந்தனாருக்கு மனத் தடை ஏனிருந்தது? அவர் தனது மனத் தடையை நீக்கிச் சிதம்பரம் போனது எப்படி ஒரு சாதனையாகவும் பக்திப் பெருக்கின் வெற்றியாகவும் அமைகிறது?

எல்லாத் தாழ்த்தப்பட்ட சாதியினரும் எளிதாகச் சிதம்பரம் போயிருக்கக் கூடிய சூழல் இருந்தற்கான ஆதாரம் முன் குறிப்பிட்ட பார்ப்பனிய வியாக்கியானத்திற் கூட இல்லை. போவதற்குத் தயங்குவதற்கான காரணங்கள் இரண்டில் ஒன்றாகவே இருக்க இயலும். தாழ்த்தப்பட்ட சாதியினர் 'இந்துக்கள்' அல்ல; அவர்கள் பிராமணிய சைவர்களால் நிராகரிக்கப்பட்ட வழிபாட்டு முறையை உடையவர்கள் என்பது நம்பகமானது. இதையே இந்திரா பார்த்தசாரதி தனது நந்தனார் நாடகத்தில் விரிவு செய்கிறார். எனினும் கோபால கிருஷ்ண பாரதியாரின் கதையுடன் அவர் பெரிதும் முரண்படவில்லை. நந்தனாரின் சமூகம் இந்து சமயச் சமூகம் இல்லை என்றால் நந்தனார் எவ்வாறு மதம் மாறிச் சிவபக்தனாகிறார். அவ்வாறு மதம்மாறிய தாழ்த்தப்பட்டோர் சாதி இந்துக்களுள் ஒருவராக ஏற்கப்பட்டதற்கு இந்திய வரலாற்றில் எங்குமே ஆதாரமில்லை. எனவே நந்தனாரின் மனத்தடை ஏற்கப்படாமை தொடர்பானது என்றாகிறது.

நந்தனாரின் சமூகம் முழுமையுமோ பகுதியோ இந்துக்களாலானது என்றாலும் நந்தனாரின் மனத்தடை தமிழ்ச் சமூகத்தில் அவரது சாதியினர் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தனாலேயே ஏற்கப்பட்டிருக்க இயலும். இதை இந்துத்துவவாதிகளால் மறுக்க

வெளியான அடக்குமுறை சார்ந்த ஒடுக்குதலை விட ஏற்புடையதாக நாம் கருத முடியாது.

இங்கு என்னுடைய அக்கறை முற்கூறிய விடயங்கள் பற்றியது அல்ல. சாதிக்கொடுமையும் தீண்டாமையும் அன்று நடைமுறையில் இருந்தன என்பதை மறுக்கிற முயற்சிகள் இந்துச் சிந்தனையில் பல வேறு வகைகளில் வெளிப்படும் தகவல்களை மழுப்பியே மேற் கொள்ளப்படுகின்றன. மறுபுறம் சாதிக் கொடுமை இருந்ததை ஏற்று அதை எதிர்ப்பதற்கான கோபாலகிருஷ்ண பாரதியாரின் வியாக்கியானம் சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் அமைகிறது. நந்தனார் தீயுட் தள்ளப்பட்டார் என்பதை ஏற்கும் பின்னைக்கால விளக்கங்கள் கூட நந்தனாரின் வெற்றிகள் அனைத் திலும் இருந்திருக்கக் கூடிய போராட்டப் பரிமானத்தை வற்புறுத் தத்தவறுகின்றன. இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நந்தனாரின் இறுதி வெற்றி இயேசு சிலுவையில் அறைப்பட்டது போல ஒரு வெற்றி தான். இவர் இறைவனிடம் கலந்ததாயும் அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததாயும் கூறித் தோல்விகள் வெற்றிகளாக்கப்படுகின்றன.

இன்று நமக்குத் தேவையானது என்ன? தாழ்வுச் சிக்கலால் தயங்கி நின்று அதிலிருந்து மீண்டு தற்கொலை செய்து கொண்ட ஒரு நந்தனாரா? போராட்டத்தைத் தவிர்த்து இறையருளாற் சிதம்பரம் சென்று பகவானாலோ பார்ப்பனராலோ இல்லாமலாக்கப்ப ட்ட ஒரு நந்தனாரா?

வேறொரு நந்தனாருக்கான தேவை நம் முன் உண்டு. அவரைக் கோபாலகிருஷ்ணபாரதியார் காட்டுகிற நந்தனாரிடமிருந்துங் கட்டியெழுப்பலாம். நந்தனார் சிதம்பரம் போவதற்கான தடைகள் அவற்றின் சமூகப் பரிமாணத்துக்கு ஏற்பச் சமூகப் போராட்டங்கள் மூலம் கடக்கப்படுவதாகக் காட்டும் வாசிப்புக்களுக்கும் தேவை உண்டு. பூதகணங்கள் நீரிறைப்பதும் நந்தி வழி விலகுவதும் எனச் சில நிகழ்வுகள் இயற்கைக்கு மாறான செயல்களாக ஏன் அமைய வேண்டும்? அவை ஏன் யதார்த்தமான போராட்ட வடிவம் பெற இயலாது? இலங்கையின் சாதிய எதிர்ப்பு இயக்கத்திற்கு இவ்வாறான தேவையை ஒக்றோபர் 66க்குப் பின்பான போராட்டங்கள் குறைத்து விட்டன. ஆனால் தமிழகத்தில் இன்னமும் தீண்டாமை வலுவாயுள்ளது. எனவே இவ்வாறான கலை இலக்கிய மறுவாசிப்புக்கள் சாதியால் தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்கான எழுச்சிக்கு உதவும் என்று நினைக்கிறேன்.

-சிவா-

## பிச்சை பற்றிய ஒரு சிந்தனை

பிச்சைக்காரனுக்கு
அவனிடமில்லாதது முதலீடாகிறது.
பறிபோன பார்வையும்
முடமான காலும்
இழக்கப்பட்ட கையும்,
வயிற்றை நிரப்பி
வருமானத்துக்கு வகை செய்கின்றன.

பிச்சைக்காரர்களை வைத்துப்
பிழைப்பு நடத்தும்
பிச்சைப் பிரபுக்கள் இருக்கிறார்கள்.
கோவில் வாசற்புறங்களும்
வாகனத் தரிப்பிடங்களும்
நடைபாதைகளும்
சைகைவிளக்குச் சந்திகளும்
குத்தகைக்கு விடப்படுகின்றன.
கடத்தப்பட்ட குழந்தைகள்
வாடகைக்கு விடப்படுகின்றன.
பாலகர்கள், உடல் ஊனப்படுத்தியபின்
பிச்சைக்கு அனுப்பப்படுகின்றனர்.
பிரபுக்களிடம் பணம் குவிகின்றது.
உழைப்பை விடப் பிச்சை எடுப்பதும்
பிச்சை எடுப்பதைவிட எடுப்பிப்பதும்
லாபகரமானவை.
பிச்சைத் தொழிலின்
உழைப்பாளிகளும் அறிவர்.
முதலாளிகளும் அறிவர்.
ஆட்சியாளர்களும் அதை அறிவர்.

ஆட்சியாளர்கள்
அந்நிய உதவிக்காகக்
கைநீட்டுகின்றனர்
இயற்கை அனத்தங்கட்காகத்
தவமிருக்கின்றனர்
இல்லாத போது
அனர்த்தங்களைத்
தாமாக உற்பத்தி செய்கின்றனர்.
போர்கள் மூட்டப்படுகின்றன.
அனாதைகளும்
அகதிகளும் உருவாக்கப்படுகின்றனர்
நாடு சிதைக்கப்படுகிறது.
இல்லாமலாக்கப்பட்ட
வளத்தைக் காட்டி
ஆட்சியாளர்கள் பிச்சை
எடுப்பிக்கின்றனர்.
நாட்டின் அவலம்
ஆட்சியாளர்கட்கு முதலீடாகிறது.

ஸ்வப்னா!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

மே 2007

# புதிய பூமி

இணையத் தளம் : website www.ndpsl.org.

## மே தினத்தின் புரட்சிகர வணக்கம்

மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடுவதன் மூலமும் எல்லா நாட்டினுமுள்ள தொழிலாளி வர்க்கம் சர்வதேச ஐக்கியம் மற்றுத் தோழமையுணர்வு அடிப்படையில் மே தினத்தன்று உலக மக்களை வணக்கம் செய்கிறது.



# தென் அமெரிக்க நாடுகளில் வளங்களைச் சுரண்டவும் அரசியல் ஆதிக்கம் செய்யவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அனுமதிக்க மாட்டோம்!



ஆஜன்டீன, பொலிவிய, பிறேசில், வெனிசுல, ஜனாதிபதிகளின் உறுதி ஏற்பு



கியூகோ சாவேஸ்சும் பிடல் கஸ்ரோவும் செய்தியாளர்கள் மத்தியில்




ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்




வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ், கொழும்பு 12.